பொருளடக்கம்.

	பக்கங்கள்.
குழுவின் அமைப்பு	iii
அறிக்கை.	
(i) முகவுரை	1
(ii) குழுவின் கூட்டங்கள்	1
(iii) குழுவின் ஆய்வுப் பயணங்கள்	1
(iv) குழுவின் குறிப்புரைகள்	1—4
(v) உறுதிமொழிகள் பற்றிய விவரம்	4
(vi) பொதுக் குறிப்புரைகள்	4
இணைப்புகள்.	
1. 1992—93—ஆம் ஆண்டிற்கான குழுவால் நிறைவேற்றப்பட்டதாகக் கருதப்பெற்றதும் மற்றும் துறையின் பதில்களைப் படித்துப் பதிவு செய்யப் பெற்றதாக முடிவு செய்யப்பெற்ற உறுதிமொழிகளின் துறைவாரியான விவரம்	5—122
2. அளிக்கப் பெற்ற உறுதிமொழிகள், அவற்றுள் நிறைவேற்றப் பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப்பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டு வாரியான பட்டியல்	122
3. நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த துறைவாரியான மற்றும் ஆண்டுவாரியான பட்டியல்	123

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1992-93 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் அமைப்பு.

(15-6-1992—ஆம் நாளன்று அமைக்கப்பெற்றது.)

தலைவர்.

1. திருமதி ரமணி நல்லதம்பி.

உறுப்பினர்கள்.

2. திரு. ம. தனபால்
3. டாக்டர் ஜே. பரந்தாமன்
4. திரு. செ. பெருமாள்
5. திரு. கு. தங்கமுத்து
6. திரு. வெ. நடேசன் பால்ராஜ்
7. திரு. எம். தங்கவேல்
8. திருமதி அ. தி. சரஸ்வதி
9. செல்வி ஜி. மல்லிகா
10. திரு. எ. சம்பத்
11. திரு. கே. செல்வராஜ்
12. திரு. வே. தம்புசாமி

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

செயலகம்.

திரு. செ. சு. ஜானகிராமன்	..	..	செயலாளர்.
திரு. தா. ஜேக்கப் ஆர்த்தர்	..	..	இணைச் செயலாளர்.
திரு. வெ. இராசாராமன்	..	..	துணைச் செயலாளர்.
திரு. ஜெ. அப்துல் சத்தார்	..	..	சார்புச் செயலாளர்.

அரசு உறுதிமொழிக் குழு.

பத்தாவது சட்டமன்றப் பேரவை.

ஒன்பதாவது அறிக்கை.

முகவுரை

1. 1992—93 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) ஒன்பதாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

குழுவின் கூட்டங்கள்.

2. குழு 1992 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 9, 11, 28, 29, 30 ஆகிய தேதிகளில் சென்னையில் கூடியது.

3. மேற்படி கூட்டங்களில் பேரவையில் அமைச்சர்களால் கொடுக்கப்பெற்ற உறுதிமொழிகளின்மீது அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றிய 219 உறுதிமொழிகளின் மீதான அறிக்கைகளை ஆராய்ந்து அவற்றில் 140 உறுதிமொழிகள் நிறைவேற்றப் பெற்றனவாக அல்லது பதில்கள் படித்துப் பதிவு செய்யப் பெற்றனவாக கருதலாம் என்றும் 79 உறுதிமொழிகள் மீது நடவடிக்கை தொடரலாம் என்றும் முடிவு செய்யப் பெற்றது.

4. மேற்படி கூட்டங்களில் நிறைவேற்றப் பெற்றவை அல்லது படித்து பதிவு செய்யப் பெற்றவை எனக் கருதப் பெற்ற துறைவாரியான உறுதிமொழிகளின் விவரம் இணைப்பு 1இல் உள்ளது.

குழுவின் ஆய்வுப் பயணங்கள்.

5. கீழ்க்கண்ட உறுதிமொழிகள் தொடர்பாக குழு, 1992 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11 ஆம் நாளன்று செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், முட்டுக்காடு, மாமல்லபுரம் ஆகிய இடங்களுக்கு சென்று கீழ்க்கண்ட உறுதிமொழிகள் நிறைவேற்றப் பெற்றனவா எனப் பார்வையிட்டதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கலந்துரையாடியது. அவ்வுறுதிமொழிகளின் விவரங்களும், குழுவின் பரிந்துரைகளும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.—

(1) உறுதிமொழி எண். 496/90 : மாமல்லபுரத்தில் பல்லவபுரம் சுற்றுலா வளாகம் அமைப்பது குறித்து (விவரம் பக்கங்கள் 66 இல்)

குழுவின் பரிந்துரை :

முட்டுக்காட்டில் இன்டாக் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்படும் பல்லவ புரம் சுற்றுலா வளாகத்திற்கு அருகில் உள்ள இடுகாட்டினால் சுற்றுப்புற சூழ்நிலை பாதிக்கப்படும் என்பதால் அதனை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தட்சின் சித்ரா சென்டர் சென்னை கிராப்ட் பௌண்டேஷன் நிறுவனத்திற்கு செஸ் விதிப்பிலிருந்து விலக்களிக்க அரசு பரிசிலனை செய்ய வேண்டும்.

(2) உறுதிமொழி எண். 315/89.—மாமல்லபுரத்தில் சுற்றுலா துறை சார்பாக ஒலி, ஒளி காட்சி அமைப்பது குறித்து (விவரம் பக்கங்கள் 66 இல்)

குழுவின் பரிந்துரை :

மாமல்லபுரம் ஐந்து ரத பகுதியில் சக்தி வாய்ந்த ஒளி விளக்குகள் அமைக்கப்பட்டு விட்டதாலும், ஒலி பெருக்கி வசதிக்கு மைய அரசின் அனுமதி கிடைக்கவில்லையென இணை இயக்குநர் விளக்கம் அளித்தாலும் இந்த உறுதிமொழி முற்றுப் பெற்றதாக கருதலாம்.

குழுவின் குறிப்புரைகள்

6(1) உறுதிமொழி எண். 51/92—நிலவள வங்கிகள் விவசாயத் தொழில்களைத் துவக்குவதற்கு கடன் கொடுக்காமல் இருப்பது குறித்து : 10—2—1992 ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண். 4438க்குப் பதிலளிக்கையில் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் --நடவடிக்கை எடுக்கப்படும்'' எனத் தெரிவித்தார்.

21—7—1992 ஆம் நாளன்று அனுப்பப்பெற்ற கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் பதிலில் நாபார்டின் நெறிமுறைகளின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள கடன் வழங்கும் தகுதிக்குட்பட்டே நிலவள வங்கிகள் கடன்களை வழங்கி வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

9—12—1992 ஆம் நாளன்று இந்த உறுதிமொழியை ஆய்வு செய்த குழு, கடன் கொடுப்பதில் நடைமுறைகளை எளிமைப்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

6(2) உறுதிமொழி எண். 61/92—திருப்பூரிலே சில கடைகளில் உரிமம் பெற்ற வர்கள் -லெஸ்லி' என்று வைத்துக்கொண்டு அந்த இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கொண்டிருப்பது குறித்து : 10—2—1992 ஆம் நாளன்று 1992 ஆம் ஆண்டு வேளாண் விளைப் பொருள் (முறைப்படுத்துதல்) திருத்த சட்ட மூன்வடிவு மீதான விவாதத் தின்போது பதிலளிக்கையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ''அதுபற்றிய நடவடிக்கை அரசினுடைய ஆய்விலே இருக்கிறது'' எனத் தெரிவித்தார்.

3—8—1972 ஆம் நாளன்று அனுப்பப்பெற்ற வேளாண்மைத்துறையின் பதிலில் திருப்பூர் உறுமையில் நீதிமன்றத்தில் மேற்படி கமிஷன் மண்டிதாரர்களை வெளி யேற்றுவதற்கு மனு தயார் நிலையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

9—12—1992 ஆம் நாளன்று இந்த உறுதிமொழியை ஆய்வு செய்த குழு, இதில் நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

6(3) உறுதிமொழி எண். 12/91—குடிசை மாற்று வாரியத்தின் மூலம் கட்டப்பட உள்ள வீடுகள் குறித்து : 21—1—1991 ஆம் நாளன்று உடுக்குறியிடாத வினா எண். 10005-க்கு எழுத்து மூலமாக பதிலளிக்கையில் மாண்புமிகு ஆதிதிராவிட நல அமைச்சர் அவர்கள் ''1990-91 ஆம் ஆண்டு 4000 அடுக்குமாடி வீடுகளும், அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளில் மீதிக் குடியிருப்புகளும் கட்டி முடிக்கப்படும்'' எனத் தெரிவித்திருந்தார்.

28 -2—1992 ஆம் நாளன்று அனுப்பப்பெற்ற வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் பதிலில் 1991-92 ல் கட்ட நிர்ணயிக்கப்பட்ட 5056 வீடுகளில் 2666 குடியிருப்புகள் தான் கட்டப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

9—12—1992 ஆம் நாளன்று இந்த உறுதிமொழியை ஆய்வு செய்த குழு, அடுக்கு மாடி வீடுகள் கட்ட விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய் கிறது.

6(4) உறுதிமொழி எண். 373/91—ஒகனேக்கல் கூட்டு குடிநீர்த் திட்டத்திற்குப் பதிலாக நாகமலை –பென்னாகரம் கூட்டு குடிநீர்த் திட்டத்தை ஆய்வு செய்தால் பாதி செலவுதான் என்பது குறித்து : 4—10—1991 ஆம் நாளன்று குறுகிய கால வினா எண். 4840க்குப் பதிலளிக்கும் போது மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் அவர்கள் ''அரசு பரிசீலிக்கும்'' எனத் தெரிவித்தார்.

2—7—1992 ஆம் நாளன்று அனுப்பப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடி நீர் வழங்கு துறையின் பதிலில் நாகமலையிலிருந்து பென்னாகரத்திற்கு குடிநீர் எடுக் கும் திட்டத்திற்கான தோராய செலவினங்கள் மிக அதிகமாகும் என எதிர்பார்க்கப் படுகிறது என தெரிவிக்கப்பட்டது.

9—12—1992 ஆம் நாளன்று இந்த உறுதிமொழியை ஆய்வு செய்த குழு, இது குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

6(5) உறுதிமொழி எண். 308/92—ஆரணி பகுதியிலே ஆழ்குழாய் கிணறுகள் அமைப்பது குறித்து ; 9—4—1992 ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண். 4036-க்குப் பதிலளிக்கையில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ''பல்வேறு நிலைகளை ஆராய்ந்து ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்படும்'' எனத் தெரிவித்தார்.

25—11—1992 ஆம் நாளன்று அனுப்பப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் பதிலில் ஆரணி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற் காக ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

29—12—1992 ஆம் நாளன்று இந்த உறுதிமொழியை ஆய்வு செய்த குழு, ஆய் வுப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

6(6) உறுதிமொழி எண். 378/92—திருவெறும்பூர், துவாக்குடி, கூத்தைப் பார்குடி குடிநீர் திட்டம் குறித்து : 27—4—1992 ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண். 5305-க்குப் பதிலளிக்கையில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் ''இந்த ஆண்டிலே பணிகள் தொடங்குவதற்கான ஆய்வுகள் நடந்து கொண் டிருக்கின்றன'' எனத் தெரிவித்தார்.

14—11—1992 ஆம் நாளன்று அனுப்பப்பெற்ற நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் பதிலில் தற்போது அரசின் நிதிநிலைமை சரியில்லாத காரணத்தால் 1992—93 நிதியாண்டில் புதிய குடிநீர்த் திட்டங்களுக்கான நிர்வாக ஒப்புதல் அளிக்க இயலாது எனத் தெரிவிக்கப்பட்டது.

29—12—1992 ஆம் நாளன்று இந்த உறுதிமொழியை ஆய்வு செய்த குழு, இது குறித்து மீண்டும் பாரிலனை செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

6(7) உறுதிமொழி எண். 282/92—கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பாதையில் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பது குறித்து : 7—4—1992 ஆம் நாளன்று உடுக்குறியிட்ட வினா எண். 3511-க்குப் பதிலளிக்கையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் ஆம் என பதிலளித்தார்.

26—10—1992 ஆம் நாளன்று அனுப்பப்பெற்ற பொதுப்பணித்துறையின் பதிலில், கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குமலை அபிவிருத்தி திட்ட ஆண்டு 1992-93 கீழ் எந்த ஒரு புதுச்சாலைப் பணிகளும் ஒப்புதலளிக்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

28—12—1992 ஆம் நாளன்று இந்த உறுதிமொழியை ஆய்வு செய்த குழு, கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பாதையில் சாலை அமைப்பது மிகவும் அவசியமானது என்றும், அதற்குச் சாலையின் தேவையைக் கருத்தில் கொண்டு அரசு மீண்டும் அதைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

6(8) உறுதிமொழி எண். 160/92—வனத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் தருவது குறித்து : 24—3—1992 ம் நாளன்று காட்டு வளம் குறித்த மூலதனம் செலவு பற்றிய மானிய கோரிக்கையின் மீது நடந்த விவாதத்திற்கு பதிலளிக்கும்போது, மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் அவர்கள் ''மாதந்தோறும் அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் 20 ரூபாய் வழங்கப்படும்'' எனத் தெரிவித்தார்.

1—9—1992 ஆம் நாளன்று அனுப்பப்பெற்ற சுற்றுப்புறம் மற்றும் வனத்துறையின் பதிலில் ரிஸ்க் அலவன்ஸ் 1—8—1992 முதல் வழங்குமாறு உரிய ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

28—12—1992 ஆம் நாளன்று இந்த உறுதிமொழியை ஆய்வு செய்த குழு, மாதம் ரூ. 20 வழங்குவது என்பது மிகக் குறைவாக இருக்கிறது. அவர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் இடர்பாடுகளைக் கருத்தில் கொண்டு, ரிஸ்க் அலவன்ஸ் உயர்த்திக் கொடுக்க மறு பரிசீலனை செய்ய வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

6(9) உறுதிமொழி எண். 263/90 காட்டு யானைகளால் விவசாயிகளுடைய பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும் போது நஷ்ட ஈடு கொடுப்பது குறித்து : 31—3—1990 ஆம் நாளன்று மானியக் கோரிக்கை எண். 45 காட்டுவளம் மீது நடந்த விவாதத்திற்கு பதிலளிக்கும்போது மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் ''அது பற்றியும் ஆய்வு செய்வோம்'' எனத் தெரிவித்தார்.

23—11—1992 ஆம் நாளன்று அனுப்பப்பெற்ற சுற்றுப்புறம் மற்றும் வனத்துறையின் பதிலில், ஆண்டிற்கு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

29—12—1992 ஆம் நாளன்று இந்த உறுதிமொழியை ஆய்வு செய்த குழு, ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ. 1 லட்சம் குறைவாக இருக்கிறது என்றும், அவர்களுடைய பாதிப்பு நிலையைக் கருத்திற் கொண்டு, அத்தொகையை மேலும் அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

6(10) உறுதிமொழி எண். 309/89—போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் பெண்களை நடத்துனர்களாக நியமிப்பது குறித்து : 13—4—1989 ஆம் நாளன்று சாலைப் போக்குவரத்து பணிகளும், கப்பல் போக்குவரத்தும் பற்றிய மானிய கோரிக்கைகளின் மீதான விவாதத்திற்குப் பதிலளிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ''பெண்களே மாத்திரம் பயணம் செய்கின்ற அந்த பணிகளில் அந்த முறையைக் கடைப்பிடிக்கலாமா என்பது பற்றி அரசு பரிசீலிக்கும்'' எனத் தெரிவித்தார்.

21—9—1992 ஆம் நாளன்று அனுப்பப்பெற்ற போக்குவரத்துத் துறையின் பதிலில் வேலை வாய்ப்பகம் மூலமாக பரிந்துரை செய்யப்பட்ட பெண்கள் உயரம் குறைவு காரணமாக தேர்வு செய்யப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

29—12—1992 ஆம் நாளன்று இந்த உறுதிமொழியை ஆய்வு செய்த குழு, இயற்கையிலேயே பெண்கள், வளர்ச்சிக் குறைவாக இருக்கிற காரணத்தினால், அதைக் கருத்திற்கொண்டு இரண்டு அங்குலம் உயரத்தைக் குறைத்து நிர்ணயம் செய்து அவர்களை அந்த வேலையில் சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பரிந்துரை செய்கிறது.

உறுதிமொழிகள் பற்றிய விவரம்.

7. அளிக்கப் பெற்ற உறுதிமொழிகளுள் நிறைவேற்றப் பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப் பெற்றவை மற்றும் நிலுவையில் உள்ள உறுதிமொழிகள் குறித்த ஆண்டுவாரியான பட்டியல் இணைப்பு 2-இல் உள்ளது.

8. 1981 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டுகளில் அளிக்கப்பெற்ற உறுதி மொழிகளுள் நிலுவையில் உள்ளவை குறித்து, துறைவாரியான எண்ணிக்கையை காட்டும் பட்டியல் இணைப்பு 3 இல் உள்ளது.

பொதுக் குறிப்புரைகள்

9. அரசின் உறுதிமொழிகளை துறைகள் நிறைவேற்றுவதில் சுமார் 8 முதல் 12 வருடங்கள் வரையில் காலதாமதம் ஏற்படுகிறது. இத்தகைய அதிக அளவிலான கால தாமதங்கள் தவிர்க்கப்பட வேண்டும். துறையில் ஏற்படுகின்ற காலதாமதத்தினால், அரசின் நடவடிக்கையின் பலன், உரிய மக்களுக்குச் சென்றடைய தாமதம் ஏற்படுகிறது. ஆனால், இந்த உறுதிமொழிகளை நிறைவேற்றுவதைப் பொறுத்தவரையில் அரசுத் தரப்பில் தேவையில்லாத காலதாமதங்களும், பலனில்லா கடிதப் போக்குவரத்துக்களும் நடைபெறுகின்றன. எனவே, பேரவைக்கு அளிக்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற பொறுப்புடன் அரசுச் செயலாளர்களும், துறைத் தலைவர்களும், மாவட்ட ஆட்சியாளர்களும் உரிய காலத்தில் தக்க உடன் நடவடிக்கை எடுத்து அவற்றை நிறைவேற்ற முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என குழு வலியுறுத்துகிறது.

10. குழுவின் இந்த அறிக்கைக்கு 1993 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 11ஆம் நாளன்று நடைபெற்ற கூட்டத்தில் ஒப்பளிப்பு வழங்கப்பெற்றது.

சட்டமன்றம் TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

நெய்வேலி,
11—01—1993,
மார்கழி 28, ஆங்கிரச
திருவள்ளுவராண்டு, 2023.

ரமணி நல்லதம்பி,
தலைவர்.

இணைப்பு 1.

நிறைவேற்றப்பெற்றவை அல்லது படித்துப் பதிவு செய்யப் பெற்றவை எனக் குழுவால் கருதப்பெற்ற உறுதிமொழிகளின் துறைவாரியான விவரம்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
1	192/90	மானியக் கோரிக்கை எண். 31—பழங்குடியினர் ஆதிதிராவிடர் முதலியோர் நலன் மீது விவாதத்திற்கு அமைச்சர் பதிலுரை 29-3-1990.	ஆதி திராவிடர்களுக்காக நகர பஞ்சாயத்துக்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் வழங்குதல் குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு டாக்டர் ஏ. இராமகிருஷ்ணன் : 1256, ஆட்டோ ரிக்ஷாக்கள் ரூ. 9.55 கோடி செலவில் 628 நகர பஞ்சாயத்துக்களுக்கு வழங்க திட்டமிடப்பட்டிருக்கிறது.	ஆட்டோ மூலம் செயல்படுத்தப்படும் தனிநபர் தொழில் முனைவோர் திட்டத்தில் கிழ் அனைத்து மாவட்டங்களிலும் ஆதி திராவிடர்களுக்குச் சிறப்பு மைய நிதியுதவியிலிருந்து ஆட்டோ ரிக்ஷாக்கள் வாங்க மானியமும் குறியீட்டுக் கடனுதவும் வழங்கப்படுவதால், ஆதி திராவிட இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு பெறும் பொருட்டு நகரப் பஞ்சாயத்துக்களுக்கு ஆட்டோ ரிக்ஷாக்கள் வழங்கத் தேவையில்லை என்று அரசு கருதுகிறது. ஆ. தி. (ம) ப. ந. துறையின் அ. சா. கு. எண். 17885/ தெஉ. 1/90-18, நாள் 6-5-1992.

(1)	(2)	(3)	(4)
2	421/90	உடுக்குறியிட்ட வினா எண். 6766—துணை வினா திரு. வே. பெரியசாமி, எம்.எல்.ஏ., 25-4-1990.	பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, பர்கூர் அரசு ஆரம்பப் பள்ளியை இந்த ஆண்டு நடுநிலைப் பள்ளியாக மாற்றி வருகிற ஆண்டிலே மேல் நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா ?

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
ஆவன செய்யப்படும்.	அரசு நிலை ஆணை எண். 121, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 3-6-1992-ல் பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதி, பர்கூர் அரசு உண்டுஉறை விட ஆரம்பப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. (அரசு ஆணையின் நகல் இணைக்கப்பட்டுள்ளது). ஆ. தி. (ம) ப.ந. துறையின் அ.சா.கு. எண். 33817/ஆதிந. 7/ 90-9, நாள் 4-8-1992.

வரிசை எண்.	அரசு உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
3	485/90	உடுக்குறியிடாத வினா எண். 6787, திரு. எஸ்.டி. உகம்சந்த், எம்.எல்.ஏ., 12-5-1990.	செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வடக்கு காலனி சமுதாய நலக்கூடம் கடந்த பத்து ஆண்டுகளாக இடிந்திருப்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

மாண்புமிகு டாக்டர் ஏ. இராமகிருஷ்ணன் : இக்கட்டிடத்தை பழுது பார்ப்பதைவிட புதியதொரு சமுதாய நலக்கூடம் கட்ட அரசு பரிசீலித்து வருகிறது.

(6)

1991-92 ஆம் ஆண்டில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் செய்யூர் வடக்கு காலனியில் ஒரு சமுதாயக்கூடம் ரூ. 6.25 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட 'தாட்கோ' மூலம் கட்டுமானப் பணியினை மேற்கொள்ள அரசு ஆணை (நிலை) எண். 55, ஆதி திராவிடர் நலம். நாள் 12-3-1992-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அ.சா.கு. எண். 12882/ஆதிந. 5/90-16, நாள் 7-5-1992.

(1)	(2)	(3)	(4)
4	180/91	ஆதிதிராவிடர் நலன் குறித்து மானியக் கோரிக்கையின் மீது அமைச்சரின் பதிலுரை 19-9-1991.	கல்வித் திட்டங்களில் மாற்றங்கள் செய்யப்படுவதால் ஆதி திராவிடர் பள்ளி ஆசிரியர்களுக்கு புத்தூட்டப் பயிற்சி அளிப்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : முதலாவதாக மூன்று மாவட்டங்களில் செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது.

(6)

இந்த உறுதிமொழியின் செயற்பாட்டிற்கான உத்தரவுகள் அரசு ஆணை எண். 223, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 10-10-1991-ன்படி பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் பணி புரியும் 120 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 360 இடைநிலை ஆசிரியர்களுக்கு செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர்., திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களில் புத்தறிவுப் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டு ஜனவரி 1991, திங்களில் செயல்படுத்தப்பட்டு இதுவரை 120 இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் 120 பட்டதாரி ஆசிரியர்கள் ஆக மொத்தம் 240 ஆசிரியர்கள் ஏற்கனவே பயனடைந்துள்ளார்கள். ** சேலம் மாவட்டத்தில் 150 இடைநிலை ஆசிரியர்களுக்கு 4-5-1992 முதல் 14-5-1992 முடிய இப்பயிற்சி வழங்கப்பட்டது.

அ.சா.கு. எண். 41484/ஆதிந.7/92, நாள் 21-10-1992.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
5	181/91	ஆதிதிராவிடர் நலன் குறித்த மானியக் கோரிக்கையின் மீது அமைச்சரின் பதிலுரை 19-8-1991.	ஆதிதிராவிடரி மற்றும் பழங்குடியினர் இனக் குடும்பங்களுக்கு வீட்டுமனைகள் வழங்குவது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : இந்த ஆண்டில் 75,000 வீட்டு மனைகள் வழங்கப்படும்.	அரசு புறம்போக்கு நிலங்களிலிருந்து மட்டுமே 1991-92ஆம் ஆண்டில் மார்ச்சு 1992 வரை 1,83,419 ஆதிதிராவிடர்களுக்கும் 3,725 பழங்குடியினர்களுக்கும் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் அரசு நிலங்களோ புறம்போக்கு நிலங்களோ இல்லாத இடங்களில் தனியார் நிலங்களை கையகப்படுத்தி ஆதிராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் பொருட்டு 1991-92 ஆம் ஆண்டில் ரூ. 500 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1992 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிய ரூ. 439.42 இலட்சம் செலவில் 42,771 இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது.

ஆ.தி.(ம) ப.ந. துறையின் அ.சா.கு. எண். 43352/நிஎ. 4 (2)/91-6, நாள் 3-11-1992.

(1)	(2)	(3)	(4)
6	182/91	ஆதி திராவிடர் நலன் குறித்து மானியக் கோரிக்கையின் மீது அமைச்சரின் பரிந்துரை 19-9-1991.	தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று வேலை வாய்ப்புக்காக காத்திருப்பவர்கள் குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : இந்த ஆண்டு சுமார் 1000 பேர்கள் பயன் பெறும் வகையில் பயிற்சிப் பணி அப்ரெண்டிசிப் டிரெயினிங் கொடுக்கப்படும்.	தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சியும் அப்ரெண்டிசிப் பயிற்சியும் பெற்று வேலை வாய்ப்புக்காகக் காத்திருக்கும் ஆதி திராவிடர்கள் நிரந்தர வேலை வாய்ப்புப் பெறும் பொருட்டு அவர்களுக்கு 3 ஆண்டுகள் சிறப்புப் பயிற்சி அளிக்க அரசு முடிவு எடுத்து முதல் கட்டமாக 1000 ஆதி திராவிட மாணவர்களுக்கு சிறப்புப் பயிற்சி அளிக்க ரூ. 30 லட்சம் செலவுத் தொகைக்கு அனுமதி அளித்து அரசு ஆணை எண். 28, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 18-2-1992-ல் ஆணையிடப்பட்டுள்ளது. முதலில் மேற்படி திட்டம் சென்னை, செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். பின்னர் பிற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படும்.

ஆ.தி. (ம) ப.ந. துறையின் அ.சா.கு. எண். 43436/நிஎ.1/91-2, நாள் 5-6-1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
7	221/87	உடுக்குறியிட்ட வினா 10223, துணை வினா திரு. ஆ. நடராஜன், எம்.எல்.ஏ., 2—4—1987.	வழக்கு மன்றங்களிலே இருக்கிற அதிகமான கட்டணத்தின் காரணமாக பல பேர்கள் நீதியை பெற முடியாமல் போகிற நிலை இருப்பதால் அந்தக் கட்டணத்தை குறைப்பதற்காக வாவது அரசு முன்வருமா என்பது பற்றி.

உறுதிமொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு திரு சி. பொன்னையன் : மத்திய அரசும் மாநில அரசுகளும் இது குறித்து ஏற்கனவே ஆராய்ந்து வருகின்றன. விரைவில் ஒரு முடிவு அறிவிக்கப்படும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

நீதிமன்றக் கட்டணத்தை ரத்து செய்வது பற்றி 1982-ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற மாநிலங்களின் சட்ட அமைச்சர்கள் மாநாட்டில் கட்டணங்களை ரத்து செய்வதற்குப் பதிலாக நீதிமன்றக் கட்டணங்களை சீராய்வு செய்வது என முடிவு செய்யப்பட்டது. இதற்கென மைய அரசின் சட்ட அமைச்சரைக் கன்வினராகக் கொண்டு, குஜராத், அரியானா, தமிழ்நாடு, உத்திரபிரதேசம், மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களைச் சேர்ந்த சட்ட அமைச்சர்களின் உபகுழுவை (கமிட்டி) இம்மாநாடு நியமித்தது. இந்தக்குழு பிற்பல சட்டங்களை அமைத்துக் கொண்டு மாநில அரசுகள் உயர்நீதிமன்றங்கள் வழக்கறிஞர்கள் குழுவும் மற்றும் வழக்கறிஞர்கள் சங்கங்கள் ஆகியவற்றோடு தொடர்பு கொண்டு அவைகளின் கருத்துக்களை ஆராய்ந்து பரிந்துரை செய்துள்ளது. சட்ட அமைச்சர்கள் உபகுழுவின் பரிந்துரைகள் இன்னமும் நீதிமன்றக் கட்டணங்களை சீராய்வு செய்வதற்கான குழுவின் மாநாட்டில் வைத்து முடிவு எடுக்கப்படவில்லை. நீதிமன்ற கட்டணத்தைச் சீராய்வுச் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவின் மாநாட்டு முடிவு தெரிந்து பிறகு உரிய முறையில் பரிசிலனை செய்து தக்க முடிவினை மேற்கொள்ளலாம் எனவும், இப்பொழுது இருந்து வரும் முறை அப்படியே நீடிக்கலாம் எனவும் எந்த வகையிலும் மாற்றம் செய்யத் தேவையில்லை எனவும் சுற்றோட்ட முறையில் ஆணை பெறப்பட்டுள்ளது. குழுவின் பரிந்துரை கிடைத்த வுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

அ.சா.கு. எண். 76948/கோர்ட்ஸ். 1/87-1, நாள் 29—10—1987.

The matter is under correspondence with the Registrar, High Court Madras.

(U.O. Note No. 12011/CTS. A/91-59, Dt. 25—3—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
8	487/87	உடுக்குறியிட்ட வினா 12319, திரு. ஆ. பிரேம்குமார், எம்.எல்.ஏ., 28—4—1987.	அண்ணா மாவட்டம், திண்டுக்கல்லில் சிப் ஜூடிசியல் மாஜிஸ்டிரேட் கோர்ட் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
4	269/89	காவல் துறை பற்றிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை 28—4—1989.	கோரிக்கை எண் 15 மீதான விவாதத்திற்கு மாண்புமிகு

உறுதிமொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழ்நாட்டிலே மொத்தம் உள்ள காவல் கோட்டங்கள் 108 ஜீப் வழங்கப்பட வேண்டிய கோட்டங்கள் 13 தான். 15 இடங்கள் தலிர மற்ற 8 இடங்களுக்கு இந்த ஆண்டே ஒரு கோட்டத்திற்கு ஒரு ஜீப் வீதம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

மதுவிலக்கு அமுல் பிரிவு கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பிரிவில் இருந்த 416 பலதரப்பட்ட வாகனங்கள் காவல் துறையின் பல்வேறு பிரிவுகளுக்கு பிரித்து வழங்க காவல் துறைத் தலைவரால் அனுப்பப்பட்ட கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்கூறிய உபரி வாகனங்களில் 82 ஜீப்புகள் இருந்தன. அவற்றிலிருந்து ஏற்கனவே ஜீப்புகள் வழங்கப்படாத கோட்டங்களுக்கு ஜீப்புகள் வழங்கப் படலாம் என்று அரசு முடிவு செய்தது. இதற்கிடையில் தற்போது மதுவிலக்கு அமுல் பிரிவை மீண்டும் தொடங்க காவல் துறைத் தலைவர் அனுப்பியுள்ள கருத்துரு மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வை துறையில் பரிசீலனையில் உள்ளதால், மேற்படி உபரி வாகனங்கள் மீண்டும் மதுவிலக்கு அமுல் பிரிவுக்கே தேவைப்படும். இது குறித்து காவல் துறைத் தலைவரின் அறிக்கை கோரப்பட்டுள்ளது. காவல் துறைத் தலைவரின் அறிக்கை கிடைக்கப் பெற்று பரிசீலித்த பின்பு இது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும்.

(அ.சா.கு. எண் 120222/91]1, நாள் : 29—8—1991.)

உறுதி மொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் தலைமை குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

குழுவின் குறிப்புரை.—19—6—1990 '' அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் தலைமை குற்றவியல் நீதிமன்றம் அமைக்கும் பணி எப்போது எடுத்துக் கொள்ளப்படும் ''.

மேலும் துறையிடமிருந்து வந்துள்ள பதில்.

தற்போதைய நிதி நிலையைக் கருத்தில் கொண்டு அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் தலைமை குற்றவியல் நீதி மன்றம் அமைப்பதற்கான செயற் குறிப்பினை 1992—93 ஆம் நிதியாண்டில் பரிசீலனை செய்ய அரசு உத்தேசித்துள்ளது.

(அ.சா.கு. எண் 120116/கோர்ட்ஸ்.பி/91-1, நாள் : 6—1—1992.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
10	73/90	உடுக்குறியிடாத வினா 5625—டாக்டர் எஸ். சுந்தரராஜ், எம்.எல்.ஏ., 27—1—1990.	பரமக்குடியில் சப் கோர்ட் திறக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா என்பது குறித்து.

உறுதி மொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பிரிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்திற்கு புதிய நீதிமன்றங்கள் அமைக்கும்போது பரமக்குடியில் ஒரு சார்பு நீதிமன்றம் அமைக்க உயர்நீதிமன்றம் கருத்துரு அனுப்பியுள்ளது. அரசின் பரிசிலனையில் உள்ளது.

(அ.சா.கு.எண் 142078/கோர்ட்ஸ். சி/92]1, நாள் : 25—10—1991.)

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

இந்த உறுதிமொழி தொடர்பாக செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளது.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
11	90/91	உடுக்குறியிட்ட வினா 1646—துணை வினா டாக்டர் சா. சுந்தரராஜ், எம்.எல்.ஏ., 10—9—1991.	பரமக்குடியில் சப் கோர்ட் அமைத்துத் தரபடுமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : புரட்சித் தலைவி அவர்களுடைய ஒப்புதலோடு சப் கோர்ட் நிச்சயம் பரமக்குடியில் வரும்.

(அ.சா.கு.எண் 120149 சிடிஎஸ்.சி.'91-1, நாள் : 25—11—1991.)

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

The matter is still under correspondence with the High Court and the final report will be sent as soon as decision is taken

(U.O. Note No. 33830/Courts. III/92–1, dated 26th October 1992)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
12	298/90	உடுக்குறியிட்ட வினா 2209—துணை வினா, திரு. வ. அன்பழகன், எம்.எல்.ஏ., 10—4—1990.	பேருந்துகளில் படிக்கட்டிலே பயணம் செய்வதால் விபத்துக்கள் நிகழ வாய்ப்பு இருக்கிற படியால் கதவுகள் வைத்து அவைகள் ஆட்டோ மெட்டிக்காக திறக்கவும், மூடவும் செய்ய ஏற்பாடுகள் செய்யப்படுமாஎன்பது குறித்து

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பொருள்.	பார்வை.
(1)	(2)	(3)	(4)
13	55/91	கவன ஈர்ப்பு திருவாளர்கள் வ. சத்தியமூர்த்தி மற்றும் மு. தென்னவன், எம்.எல்.ஏ., 12-7-1991.	இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து மூன்றாகப் பிரிக்கப் பட்ட ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனி மாவட்ட நீதி மன்றம் அமைக்கப்படாதது குறித்து.

உறுதிமொழியின் விவரம். (5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : நிச்சயமாக மூன்று மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் மாவட்ட நீதிமன்றம் அமைக்கப்படும்.	பழைய இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப் பட்டு, இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரத்தில் 28—8—1992 முதலும் பசும்பொன்முத்து ராமலிங்கத் தேவர் மாவட்டத்தில், விகங்கையில் 28—8—1992 முதலும் மற்றும் காமராசர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிப்புத்தூரில், 27—8—1992 முதலும் மாவட்ட நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பொருள்.	பார்வை.
(1)	(2)	(3)	(4)
2	91	உடுக்குறியிட்ட வினா எண் 7988—துணை வினா. திரு. எஸ். காதர் பாட்சா (எ) வெள்ளைச்சாமி, எம்.எல்.ஏ., 21-1-91.	காமராசர், இராமநாதபுரம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டங்களுக்கு அந்த மாவட்ட நீதிமன்றம் எப்போது பிரிக்கப்படும் என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம். (5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : இராமநாத புரம் மாவட்டத்திற்கான அந்த அலுவலர்கள் எல்லாம் போட உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. உடனடி யாக நடவடிக்கை எடுக்கப்படும்.	(வரிசை எண் 5ல் உள்ள மத்தி (6) யக்கண்க.)

(உள்துறை, அ.சா.கு.எண் 146212/நீதிமன்றங்கள். 3/92-1, நாள் : 20—10—1972.)

விதியை அமல்படுத்துவதை நிறுத்த அரசுக்குப் பரிந்துரை செய்தார். அவருடைய பரிந்துரையை ஏற்று, அரசாணை நிலை எண் 2812, உள்துறை, நாள் : 8—11—1982-ல் மேற்சொன்ன விதியை அமல் செய்வதை நிறுத்தி வைக்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

(அ.சா.கு. எண் 91942/போ.வ.எப்./90-10, நாள் 27-5-1991.)

11

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
15	112/87	சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்ட கவன ஈர்ப்பு தினை வினா திரு. டி. ஆர். வேங்கடரமணன், எம்.எல்.ஏ., 24—3—1987.	தமிழகமெங்கும் நீதிமன்றம் மற்றும் நீதிமன்றம் அல்லாத முத்திரை கட்டணங்களில் தோன்றி உள்ள கடுமையான தட்டுப்பாட்டினால் முத்திரை காகிதங்களை ஒரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு கொண்டு சென்று அதிக விலைக்கு விற்கிறார்கள். இந்நிலையை போக்க அந்த அந்த ஜுரிஸ்டிக்ஷனுக்குள் வாங்கக் கூடிய, முத்திரை காகிதம்தான் செல்லுபடியாகும் என்று உத்தரவிட அரசு முன்வருமா என்பது பற்றி.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன், முத்திரைத்தாள் தட்டுப்பாட்டை உத்தேசித்து பொதுமக்களுக்கு சிரமம் இல்லாமல் இருக்க முத்திரைச் சட்டத்தின் பிரிவு 41ன்படி முத்திரைத்தாள்களுக்குச் சமமான தொகையை ரொக்கமாகப் பெற்றுக் கொண்டு பிரிவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதே போன்று நீதிமன்றங்களிலும் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அது பற்றி அரசு ஆய்வு செய்யும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.	தற்போது நீதிமன்ற முத்திரைகள் பெறுவதில் எவ்வித தட்டுப்பாடும் இல்லை. தமிழகத்தின் எல்லாமாவட்ட கருவூலங்களிலும் போதுமான அளவு இருப்பு உள்ளது. மேலும் 1988-ஆம் ஆண்டும் இதுபோல கருத்து பரிசீலனைக்கு வந்தபோது உயர்நீதிமன்ற முத்திரைகளுக்கு பதிலாக அதற்குரிய தொகையை செலுத்துவதால் ஏற்படக்கூடிய பல சிக்கல்களால் இயலக்கூடியதாக இல்லையென்று தெரிவித்ததால் முத்திரைகளுக்குப் பதிலாக ரொக்கப்பணம் பெறுவது என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்படவில்லை. எனவே, இந்த யோசனையை நீதிமன்ற முத்திரைகள் பெறுவதில் தட்டுப்பாடு ஏற்படும் நேரத்தில் பிறகு பரிசீலிக்கலாம் என்று கருதப்படுகிறது. மேலும் தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணம் மற்றும் வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தின் பிரிவு 74ன்படி கட்டணங்கள் முத்திரைத்தாள் வாயிலாகத்தான் வசூலிக்கப்பட வேண்டும் என்றுள்ளது.
			(அ.சா.கு. எண் 150743/சி.ம 1/91-8, நாள் 23—10—1992.)
(1)	(2)	(3)	(4)
16	131/91	உடுக்குறியிட்ட வினா 160, துணை வினா திரு. டி. எம். ரங்கராஜன், எம்.எல்.ஏ., 18—9—1991.	கோர்ட் பீஸ் ஸ்டாம்ப்ஸ் சரியாக கிடைக்காத நிலையில் அதற்கான கட்டணத்தை கோர்ட் அலுவலகங்களில் கட்டுவதற்கான முறையை கொண்டு வர அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : அரசு பரிசீலனை செய்யும்.	(வரிசை எண் 15 உள்ள பத்தி (6) யைக் காண்க.)

(1)	(2)	(3)	(4)
17	132/91	உடுக்குறியிட்ட வினா 160, துணை வினா, திரு. ச. காந்திராஜன், எம். எல்.ஏ., 18—9—1991.	நீதிமன்றங்கள் மூலமாக அங்கேயுள்ள ஒரு அலுவலகம் மூலமாக கோர்ட் டில் ஸ்டாம்ப் வழங்க இந்த அரசு முன்வருமா என்பது குறித்து.

(5)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(6)

[வரிசை எண் 15ல் உள்ள பத்தி (6) ஐக் காண்க.]

உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை அனுதாபத்துடன் பரிசீலனை செய்யப்படும்.

(1)	(2)	(3)	(4)
18	133/91	உடுக்குறியிட்ட வினா 160, துணை வினா, திரு. ஜி. விசுவநாதன், எம்.எல்.ஏ., 18—9—1991.	கோர்ட் பீஸ் ஸ்டாம்ப்ஸ் வேண்டுமென்றே கிடைக்கவில்லை என்று சொல்லி விலையை அதிகமாக்கி விற்பதாக நிறைய புகார்கள் வந்துள்ளன. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது குறித்து.

(6)

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : எடுக்கப்படும்.

[வரிசை எண் 15ல் உள்ள பத்தி (6) ஐக் காண்க.]

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
19	216/91	குறுகிய கால வினா எண். 3561, துணை வினா, திரு. எஸ். டேனியல் ராஜ், எம்.எல்.ஏ., 23—9—1991.	தெம்பரனார் மாவட்டம் தூத்துக்குடியில் மாவட்ட சிவில் கிரிமினல் நீதிமன்றங்கள் ஏற்படுக்க வேண்டுவது குறித்து.
	உறுதிமொழியின் விவரம்.		அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
	(5)		(6)
	மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி		தூத்துக்குடியில் மாவட்ட சிவில் மற்றும் செஷன்ஸ் நீதிமன்றம் அமைக்கப் பட்டு 18—9—1991 முதல் செயல்பட்டு வருகின்றது.

அரசிரைவில் வ.உ.சி. மாவட்டத்தில் தூத்துக்குடியில் இந்த நீதிமன்றங்கள் வரும்.

(உள்துறை, அ.சா.கு. எண். 167328/நீதிமன்றங்கள், 3/92-1, நாள் 4—11—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
20	230/91	காவல் நியணைப்பு மானியக் கோரிக்கைகள் மீது முதல் அமைச்சரின் பதில் உரை 24—9—1991	காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுவது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்த நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தினை மீண்டும் புதுப்பித்து அதன் மூலமாக இந்த நடப்பாண்டில் 1000 குடியிருப்புகள் கட்டுவது என தீர்மானித்து உள்ளது.	தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தினை மீண்டும் புதுப்பித்து அதன் மூலமாக இந்த நடப்பாண்டில் காவலர்களுக்கு 1,000 குடியிருப்புகளை கட்டுவது தொடர்பாக மூன்று கோடி ரூபாய் திருத்திய மதிப்பீட்டில் அரசு ஆணை நிலை எண். 524 உள்துறை, நாள், 27—3—1992, ஆணைகள் வெளியிடப்பட்டு உள்ளது. 2. அரசு ஆணை நிலை எண். 612, உள்துறை, நாள் 8—4—1992ல் 1,000 வீடுகள் தமிழ்நாட்டில் 8 இடங்களில் கட்ட ஆணைகள் வெளியிடப்பட்டு உள்ளது.

(அ.சா.கு. எண். 167550/காவல். ஜி. 91-1, நாள், 25—5—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
21	347/91	உடுக்குறியிட்ட வினா எண். 1057 துணை வினா, திரு. கா. ப. பழனிசாமி, எம்.எல்.ஏ., 3—10—1991.	வாரத்திற்கு ஒரு முறை என்று பொன்னகரத்தில் குற்றவியல் அமரும் நீதிமன்றம் கூடுகிறது. அதனை வாரத்திற்கு இரண்டு நாட்கள் என்ற முறையில் கொண்டு வர முடியுமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி. உறுப்பினர் அவர்களுடைய மேலான யோசனை பரிசீலிக்கப்படும்.	பாலக்கோடு குற்றவியல் நீதிபதி 1—10—1991 முதல், வாரத்திற்கு இரண்டு முறை பொன்னகரத்தில் அமரும் (Camp Court) நீதிமன்றம் நடத்தி வருகிறார்.

(உள்துறையின் அ.சா.கு. எண். 170452/நீ.ம.-11/91-7, நாள், 4—11—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
22	357/91	உடுக்குறியிட்ட வினா எண். 1182, துணை வினா திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 4—10—1991.	பேராவூரணி மக்களுக்கு நீதியை வழங்க நீதிமன்றத்தினை துவக்குவதற்கு நீங்கள் மீண்டும் பரிசீலனை செய்வீர்களா ? என்பது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பரிசிலனை செய்யப்படும்.	தஞ்சாவூர் மாவட்டம் பேராவூரணியில் நீதிமன்றம் அமைக்கும் அளவிற்கு அங்கே உரிமையியல் வழக்குகள் குறித்த புள்ளி விவரங்கள் போதுமானதாக இல்லையாதலால் அங்கு மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் அமைக்கும் கருத்தும் தற்போது ஏதும் இல்லை என்று உயர் நீதிமன்றம் தெரிவித்த கருத்தை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

(உள்துறை அ.சா.கு. எண். 170473/நீதிமன்றங்கள். 3/91-4, நாள் 14—10—1992)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
23	7/92	உடுக்குறியிட்ட வினா எண். 4693, துணை வினா திரு. அ. தேவராஜ், எம்.எல்.ஏ.,	செய்யாறு தாலூக்காவில் துணை நீதிமன்றம் கொண்டு வர கோருவது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தாராளமாக நடவடிக்கையை அரசு எடுக்கும்.	வடாற்காடு மாவட்டம் செய்யாறு தாலூர்க்காவில் ஒரு துணை நீதிமன்றம் அமைக்கும் அளவிற்கு தற்போது அங்கு போதுமான வழக்குகள் பதிவாகவில்லை என்று புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன என்ற உயர் நீதி மன்றத்தின் கருத்தை அரசு ஏற்றுக் கொள்கிறது.

(உள்துறை, அ.சா.கு. எண். 40911/நீதிமன்றங்கள், 3192-6, நாள் 13—10—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
24	124/92	காவல், தியணைப்பு (ம) மாநில ஆயத்தீர்வை மானியக் கோரிக்கை மீது முதலமைச்சரின் பதிலுரை. 19—3—1992.	புதிய தீயணைப்பு நிலையங்கள் திறப்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	துறை எடுத்துள்ள நடவடிக்கை
(5)	(6)
இந்த ஆண்டில் மட்டும் கொளச்சல் தேன்கனிக்கோட்டை, சேத்தியாத்தோப்பு,வேதாரண்யம், மண்டபம் வில்லிவாக்கம் ஆகிய இடங்களில் புதியதாக தியணைப்பு நிலையங்கள் திறக்கவிருக்கிறோம்.	உறுதிமொழியில் கூறப்பட்ட ஆறு இடங்களிலும் தீயணைப்பு நிலையங்கள் திறக்க ஆணைகள் அரசாணை எண். 822, உள்துறை, நாள் 22—5—1992-ல் வெளியிடப்பட்டுள்ளன.

(உள்துறையின் அ.சா.கு. எண். 52440/காவல்-17/92-1, நாள் : 7—9— 1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
25	125/92	காவல் தியணைப்பு (ம) மாநில ஆயத் தீர்வை மான்யக் கோரிக்கைகள் மீது முதலமைச்சரின் பதிலுரை 19—3—1992.	கோட்டத் தீயணைப்பு படையினர் (ம) துணைக் கோட்டத் தியணைப்புப் படையினரின் படி உயர்வு குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : கோட்டத் தீயணைப்பு அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்படும் படி ரூ. 30 இனி உயர்த்தி ரூ. 40 என்று வழங்கப்படும். துணைக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் (ம) தீயணைப்பு நிலைய அலுவலர், நிலையப் போக்குவரத்து அலுவலர் உட்பட தற்போது வழங்கப்படும் படி 20 ரூபாய் இனி 30 ரூபாயாக வழங்கப்படும்.	30—7—1992 நாளிட்ட உள்துறை அரசாணை (நிலை) எண். 1342, இதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
26	129/92	உள்ளாட்சி நிதியணைப்பு (ம) மாநில **ஆயத் தீர்வை** மான்யக் கோரிக்கைகள் மீது, முதலமைச்சரின் பதிலுரை 19-3-1992.	லீடிங் பயர்மேன் மற்றும் அவர்களுக்கு கீழுள்ள அலுவலர்களுக்கு படி உயர்வு குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா லீடிங் பயர்மேன் அவர்களுக்கு மீதமுள்ள அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்படும் படி 15 ரூபாய் இனி உயர்த்தி 25 ரூபாய் வழங்கப்படும்.	30-7-1992 நாளிட்ட உள்துறை அ.ரா.கு. நிலை எண். 1342]ல் இதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. (நகல் இணைக்கப்பட்டுள்ளது). (உள்துறையின் அ.சா.கு. எண். 52441/காவல் 17/91, நாள் 9—9—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
27	279/92	உடுக்குறியிட்ட வினா எண். 2507 தவிர திரு. ஓ.எஸ். அமர்நாத், எம்.எல்.ஏ., 7-4-1992.	சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவில் பெரும்பாலும் ஏழைகளாக இருக்கிறார்கள். அதைப் போல் பணவசதி படைத்தவர்களும் சட்ட உதவி முகமில் பயன் பெறுகிறார்கள். அதற்கு ஏதேனும் விதிவிலக்கு கொண்டு வரப்படுமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : இந்த அமைப்பில் சில மாறுதல்களைக் கொண்டு வர அரசு தீவிரமாக பரிசீலனை செய்து வருகிறது.	இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39ஏ பிரிவின்படி ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனையளிக்க வேண்டியது அரசின் கடமையாகும். இக்கடமையை நிறைவேற்ற தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு 1977 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்குழுவின் நடைமுறைத் திட்டம் பின்வருமாறு.
	(1) வறிய நிலையிலுள்ள மக்கள் பல்வேறு அரசு ஆணைகளில் வழங்கப்பட்டுள்ள உரிமைகளை பெறுவதற்கு வகை செய்யும் பொருட்டு உதவி செய்தல்,
	(2) சிவில் நீதிமன்றங்கள், நடுவர் மன்றங்கள் ஆகியவற்றில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளை நடத்த அல்லது எதிர்த்து வாதிட வறிய மக்களுக்கு உதவி செய்தல் ;

(3) விவாகரத்து கோரும், மீண்டும் திருமண பந்தத்தை புதுப்பிக்கும், குழந்தைகளை பொறுப்பெடுத்துக் கொள்ளுதல் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மகளிருக்கு உதவி புரிதல் ;

(4) கைது செய்யப்படும் நேரத்திலிருந்து வழக்கு நடைபெறும் போதும், மேல்முறையிடு செய்யும் போதும் சிறைச்சாலையிலுள்ள தண்டனையளிக்கப்பட்ட கைதிகளின் குடும்ப சொத்து தொடர்பான பிரச்சினைகளை களைவது தொடர்பாக உதவி செய்தல் ;

(5) இராணுவத்தில் பணியாற்றுகின்றவர்களுக்கும், ஓய்வு பெற்றவர்களுக்கும் உதவி செய்தல் ;

(6) தொழிலாளர்களுக்கு உதவி செய்தல்.

(7) விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தல்.

(8) பொது நன்மைக்கான வழக்குகள் ;

(9) சமரச நிட்ட மையங்கள், பெண்களுக்கான மையங்கள், மக்கள் நீதிமன்றங்கள் (Lok Adalats) வழக்கு தொடர்வதற்கு முன் பிரச்சினைகளை சமரசமாக தீர்த்து வைப்பது என்பதே தொடக்க காலத்திலிருந்து சட்ட உதவிக் குழுவின் முக்கிய நோக்கமாக இருந்து வந்துள்ளது. இதனடிப்படையில் சமரச மையங்கள், பெண்களுக்கான மையங்கள், மக்கள் நீதிமன்றங்கள் ஆகியவற்றில் சட்ட ஆலோசனை வழங்கும் திட்டம் இலவசமாகவே செய்யப்படுகிறது. பெண்கள் தொழிலாளர்கள், இராணுவத்தில் பணியாற்றுபவர்கள்; மற்றும் ஓய்வு பெற்றவர்கள் சிறைக் கைதிகள் ஆகியோர்க்கான திட்டங்கள் இலவசமாகவே செய்யப்படுகின்றன. விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீட்டுத் தொகை பெறுவதற்கு இலவசமாக உதவி செய்யப்படுகிறது. இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும்பொழுது, செலவழிக்கப்பட்ட தொகை திரும்பப்பெறப்படுகிறது. ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும், தியாகிகளுக்கும் சட்ட ஆலோசனை தாராளமாக வழங்கப்படுகிறது. மீதி உள்ள சிவில் வழக்குகளில் பொதுவாக சொந்த வழக்கறிஞர்களை நியமித்த கொள்ளும் நிலையில் உள்ளவர்கள் இலவச சட்ட உதவியை நாடுவதில்லை. சிவில் வழக்குகளில் சட்ட உதவியை நாடும் இதர பிரிவினர், அவர்கள் தங்கள் நிதிநிலையைப் பற்றிச் சொல்லும் வார்த்தைகளையே அடிப்படையாகக் கொண்டு, பட்டியல் வழக்கறிஞர் முடிவு செய்வார். அந்தப் பகுதியில் உள்ள வழக்கறிஞர்களே பட்டியல் வழக்கறிஞர்களாக இருப்பதால் மனுதாரரைப் பற்றிய இவர்களின் முடிவு போதுமானதாக இருக்கும். இக்காரணங்களால் சட்ட உதவித் திட்டங்கள் தவறாக பயன்படுத்தப் படுவதில்லை. எனவே இலவச சட்ட உதவி வழங்குவதற்கு நற்போது பின்பற்றப் படும் விழிமுறைகளையே பின்பற்றலாம் என்று கருதப்படுகிறது. மேலும் இந்நாட்டின் பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டுவரும் சட்ட உதவித் திட்டப் பணிகளுக்குச் சட்டப்படிக்கான வடிவம் அளிக்கும்பொருட்டும், அவற்றை மிகவும் பயனுள்ள வகையில் செயல்படுத்தும் பொருட்டும் 1987 ஆம் ஆண்டு சட்டம் பணிகள் அதிகார மன்றங்கள் சட்டத்தை (மத்திய சட்டம் 39/1987) மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் செயலுக்கு வரும்பொழுது இலவச சட்ட உதவித் திட்டத்தில் மாறுதல்கள் செய்வது பற்றி பரிசீலிக்கலாம் என்று கருதப்படுகிறது.

(உள் துறை, அ.சா.கு. எண். 85546/நீ.மா. 4/92-4, நாள் 2-8-1992).

வரிசை எண். (1)	உறுதி மொழி எண். (2)	பார்வை. (3)	பொருள். (4)
310/92		(தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவைச் செயலகம் அ.சா.கு. எண். 17754/92-1, தமிழ்நாடு சட்ட மன்ற பேரவை செயலகம் (அ.கு) நாள் 10–6–1992) 1959 ஆம் ஆண்டு இந்துசமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம் குறித்த மாவியக் கோரிக்கையின்மீது முதலமைச்சரின் பதிலுரை 9–4–1992.	கோயில் பாதுகாப்புப் படை அமைப்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : கோயில்களில் உள்ள விலையுயர்ந்த திருமேனிகளையும், நிலைகளையும், ஆபரணங்களையும் மற்றும் ஸ்தானத்தை குறிய பொருள்களையும் முழுமையாகப் பாதுகாப்பதற்காக காவல்துறையில் 'கோயில் பாதுகாப்புப் படை' ஒன்று தனியே ஏற்படுத்தப்படும்.

தமிழ்நாட்டில் உள்ள கோயில்களில் உள்ள விலையுயர்ந்த பொருள்களை பாதுகாப்பதற்காக காவல்துறையில் 1000 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் 3000 முன்னாள் இராணுவத்தினர் அடங்கிய கோயில் பாதுகாப்புப் படை ஒன்று ஏற்படுத்த 19–6–1992 நாளிட்ட உள்துறை அரசாணை (நிலை) எண். 1019-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(நகல் இணைக்கப்பட்டுள்ளது).

(உள்துறையின் அ.சா.கு. எண். 92983/காவல் 14/92-1, நாள் 10–8–1992).

வரிசை எண்	உறுதி மொழி	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
29	495/92	உயர்நீதியிட்ட வினா 1761, நுணைவினா திரு. மா. சந்தரதாஸ், எம்.எல்.ஏ., 24–4–1992.	இலவச சட்ட உதவியைப் பொறுத்தவரை எஸ்டாபிளிஸ் மெண்ட் என்பதற்கு இவ்வளவு அதாவது ஒரு 10 சத விகிதம் என்றும் மீதி 90 விழுக்காடு பணத்தை ஏழை மக்களுக்கு எய்டுக்காகச் செலவழிக்கவும் அரசு ஆணை செய்யுமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு திரு. கே.ஏ. இருஷ்ணசாமி : மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல அவர்கள் சொன்ன கருத்துரு அடிப்படையில் இந்த நிர்வாகம் சீரமைக்கப் படும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 39-ஏ பிரிவின்படி ஏழை எளியவர்களுக்குச் சட்ட ஆலோசனை அளிக்க வேண்டியது அரசின் கடமையாகும். இப்பணிக்கு, 1977 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது. மாநில குழுவின் கட்டுப்

பாட்டில் 18 மாவட்டக் குழுக்கள் 89 வட்டக்குழுக்கள், 38 சட்ட உதவி மையங்கள், 149 ஆலோசனை மையங்கள், 85 சமரச மையங்கள், 36 பெண்களுக்கான ஆலோசனை மையங்கள் ஆகியவை உள்ளன. மாவட்டக் குழு ஒவ்வொன்றிலும் 3 நிர்வாக உதவியாளர்களும், வட்டக் குழு ஒவ்வொன்றிலும் 1 நிர்வாக உதவியாளரும் பணியாற்றுகின்றனர். இதர மையங்களிலுள்ள பணிகளை சம்பந்தப்பட்ட மாவட்ட/வட்டகுழு நிர்வாக உதவியாளர்கள் கவனிக்கின்றனர். தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழுவின் செயல்பாட்டிற்கென கீழ் குறிப்பிட்டுள்ள மூன்று வகை செலவினங்கள் ஏற்படுகின்றன.

1. வழக்கறிஞர் கட்டணம், நீதிமன்ற கட்டணம், சட்ட உதவி மற்றும் சட்ட அறிவை வளர்ப்பது, மக்கள் நீதிமன்றங்கள் கூட்டுதல் சமரசமையங்கள், பெண்களுக்கான மையங்கள், ஆகியவற்றில் ஏற்படும் செலவினங்கள்.
2. அலுவலர்களுக்கு தரப்படும் ஊதியம் மற்றும் இதர படிகளுக்கான செலவினங்கள்.
3. சட்ட உதவித் திட்டங்களை செயல்படுத்தும் பொழுது உடன் நிகழ்வாக ஏற்படும் தொலைபேசி, தபால் கட்டணம் போன்ற இதர செலவினங்கள்.

தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு வளர்ந்து வரும் நிலையில் உள்ளது. தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக்குழு, தொடக்கக் காலத்திலிருந்து, வழக்குத் தொடர்வதற்குமுன் பிரச்சனைகளுக்கு சமரச முயற்சியால் தீர்வுகாண வேண்டும் என்ற கருத்திற்கிணங்க திட்டங்களை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் சட்ட உதவி மையங்கள், பெண்களுக்கான உதவி மையங்கள் மற்றும் சட்ட ஆலோசனை மையங்கள் இயங்குகின்றன. இத்திட்டங்களின்கீழ் வழக்குத் தொடர்வதற்குமுன் இதுவரை சுமார் 10,000 நிகழ்வுகளில் தீர்வு காணப்பட்டுள்ளன. தினமும் இருப்பவர்களுக்கும் உதவி செய்யப்பட்டுள்ளது. மக்கள் நீதிமன்றங்களில் குறைந்த செலவில் சுமார் 15,000 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளன. இதனால் நீதிப்பாயங்களில் வேலைப்பளு குறைந்துள்ளது. இதனால் அரசுக்கு செலவினம் குறைக்கப்பட்டுள்ளது. அடுத்தப்படியாக நீதிமன்றத்திற்கு வழக்குகளை எடுத்துச் செல்வதற்கும், நிலுவையில் உள்ள வழக்குகளை தீர்த்து வைப்பதற்கும் இக்குழு முக்கியத்துவம் தருகிறது. இதன்படி சுமார் 1.75 லட்சம் வழக்குகள் நீதிமன்றங்களில் தொடுக்கப்பட்டு, 1.5 லட்சம் வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன. இலவச சட்ட உதவி திட்டங்களுக்காக எவ்வளவு செலவழிக்கப்படுகிறது என்று மதிப்பீடு செய்வதைக் காட்டிலும் இத்திட்டங்களால் சமுதாயம் எவ்வாறு பயன்பெற்றுள்ளது என்று மதிப்பீடு செய்வதே சிறப்பாக இருக்கும். தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் குழு முழுமையாக வளர்ச்சியடைந்த பின், பணியாளர்களுக்கென ஏற்படும் செலவினங்களை குறைப்பதற்கு முயற்சி செய்யலாம் என்று கருதப்படுகிறது. மேலும் இந்நாட்டின் பல்வேறு மாநிலங்களில் செயல்பட்டு வரும் சட்ட உதவித் திட்டப் பணிகளுக்குச் சட்டப்படிக்கான வடிவம் அளிக்கும் பொருட்டும், அவற்றை மிகவும் பயனுள்ள வகையில் செயற்படுத்தும் பொருட்டும் 1987 ஆம் ஆண்டு சட்டப் பணிகள் அதிகார மன்றங்கள் சட்டத்தை (மத்திய சட்டம் 39/1987) மத்திய அரசு இயற்றியுள்ளது. இச்சட்டம் செயற்பாட்டுக்கு வரும்பொழுது இலவச சட்ட உதவித் திட்டத்தில் மாறுதல்கள் செய்வது பற்றி பரிசீலிக்கலாம் என்று கருதப்படுகிறது.

(உண்துறை அ.சா.கு. எண் 85560/நீ. ம.4/92-5, நாள் 8–9–1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	உறுதிமொழியின் விவரம்.
(1)	(2)	(3)	(4)
30	211/85	சமுதாய வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் குறித்த மான்யம் கோரிக்கையின்மீதான பொது விவாதத்தில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் பதிலுரை 12—6—1985.	மாண்புமிகு திரு. ப. வ. சண்முகம்: **ஒசூர் தெலுங்கு பேசுகின்ற மக்கள் வாழ்கின்ற பகுதி டவுன்ஷிப் ஆக்க வேண்டும் என்பது அரசின் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கிறது.
உறுதிமொழிக்குழு கேட்டுள்ள கூடுதல் விபரங்கள்.			அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)			(6)
ஊராட்சிகளை பேரூராட்சிகளாகவும் நகரியமாகவும் மற்றும் பேரூராட்சிகளை நகராட்சிகளாகவும் தரம் உயர்த்தி நிதி இலக்கு மற்றும் தகுதிகள் நிர்ணயம் செய்வது பற்றி பதிலில் குறிப்பிட்டுள்ள உயர் அதிகாரிகளுடன் எப்போது கலந்தாலோசிக்கப்படும்?			உறுதிமொழியானது ஒசூர் பேரூராட்சியை பேரூராட்சி நகரியமாக்குவது தொடர்புடையது. ஆனால் இப்பேரூராட்சியை இரண்டாம்நிலை நகராட்சியாகவே (Grade II Municipality) தரம் உயர்த்துவதற்காக அரசாணை நிலை எண். 24, ந.நி. மற்றும் கு. வ. நாள் 23—1—1991-ல் மூலம் தொடக்க நிலை அறிவிக்கையினை ந. நி. மற்றும் கு. வ. துறை வெளியிட்டுள்ளது. இதன் மூலம் உறுதிமொழி நிறைவேற்றப்பட்டதாக ஆகிறது.
			மேலும், எற்கனவே தெரிவிக்கப்பட்டது போலல்லாது உயர் மட்டக் குழு அமைக்கப்படவில்லை. ஆகவும் ஊராட்சிகளைப் பேரூராட்சிகளாகவும் பேரூராட்சிகளை நகரியங்களாகவும் தரம் உயர்த்த தகுதிகள் நிர்ணயம் செய்து குறித்து உயர்மட்ட அதிகாரிகள் மட்டத்தில் கலந்தாலோசிக்கப்படவில்லை. மேலும், மக்கட் தொகைக் கணக்கெடுப்புப் பணிகள் நடைபெற்று வந்ததால் ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் நிர்வாக மாற்றங்கள் செய்வதற்கு 30—6—1991 முடிய அரசு தடை ஆணை அமுலில் இருந்தது. 30—6—1991-க்குப் பினனர் இத்தடையாணை நீக்கப்பட்டதால் ஊராட்சிகளையோ அல்லது பேரூராட்சிகளையோ தரம் உயர்த்துவதற்கான செயற்குறிப்புகள் வரப் பெற்றால் அது தொடர்பான பல அம்சங்களையும் கருத்தில் கொண்டு பரிசிலித்து அவ்வப்போது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
			(ஊரக வளர்ச்சித் துறையின் அ.சா.கு. எண். 60641/பி1/90-7, நாள் 29—7—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
31	99/90	உறுதியீட்டு வினா எண். 3246 துணை வினா ஆ. பாலையா, எம்.எல்.ஏ., 21—3—1990.	திரு. குளச்சல் தொகுதியில் ராஜாக்கமங்கலம் பேரூராட்சி, அது போல் கணபதிபுரம் பேரூராட்சி போன்ற பகுதிகளில் தெரு விளக்குகள் அமைக்க பேரூராட்சிகள் பணம் கட்டி பல வருடங்கள் ஆகியும் அவைப்போடப்படாதது குறித்து.

	உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்த நடவடிக்கை.
	(5)	(6)
	மாண்புமிகு கோ.சி. மணி அதை நிராகரிப்படுத்துவதற்காக இரண்டு இலாக்காக்களும் சேர்ந்து நடவடிக்கை எடுக்கும்.	குளச்சல் தொகுதியில் இராஜாக்கமங்கலம் மற்றும் கணபதிபுரம் பேரூராட்சிகளில் வைப்புத் தொகை பெறப்பட்ட முறையே 14 மற்றும் 117 தெரு விளக்குகள் அனைத்தும் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

((ஊரக வளர்ச்சித் துறையின் அ.சா.கு. எண். 30684/தி 2/90-15, நாள் 23—11—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை	பொருள்
(1)	(2)	(3)	(4)
32	204/90	உடுக்குறியிட்ட வினா எண். 6325, திரு. கு. அர்ச்சுனன், எம்.எல்.ஏ., 31—3—90.	சேலம் மாவட்டம் காரமங்கலம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்டப்படுமா என்பது குறித்து.

	உறுதிமொழியின் விவரம்.	குழு கோரிய விவரம்.
	(5)	(6)
	மாண்புமிகு திரு. கோ. சி மணி: தற்பொழுதுள்ள பேருந்து நிலையத்தை பேரூராட்சிக்குச் சொந்தமான நிலத்திலேயே கட்டுவதற்கு திட்டம் பரிசீலனையில் உள்ளது.	நகர ஊரமைப்பு இயக்குநர் இத் திட்டத்திற்கு கடன் வழங்க சம்மதம் அளித்துள்ளாரா? 13—7—1989-ஆம் தேதிய பேரூராட்சி இயக்குநரால் எழுதப்பட்டும் கடன் வழங்குவதில் கால தாமதம் ஏன்?

		அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(7)
		காரமங்கலம் பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்ட ரூ. 16.00 இலட்சம் கடனுதவி வழங்க நகர் ஊரமைப்பு இயக்குநர் தனது கடித எண். 22226/89/பி1, நாள். 12—2—1992ல் நிர்வாக அலுமதி வழங்கியுள்ளதாகவும் அதன்படி, பேருந்து நிலையம் கட்ட இருக்கும் இடம் 19—6—1992 பொதுப்பணித் துறையிடம் ஒப்படைக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

(ஊ.வ. துறையின் அ.சா.கு. எண் 3535/தி3/91-10, நாள்: 26-10-92)

(1)	(2)	(3)	(4)
33	412/90	மானியக் கோரிக்கை எண்: 28 சமுதாய நல வளர்ச்சி திட்டங்களும் நகராட்சி நிருவாகமும்	பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்ப்பது குறித்து

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு கோ. சி. மணி 11532, பள்ளிக்கட்டிடங்களையும் ரூ. 3 கோடி செலவில் இந்த ஆண்டு பழுது பார்த்து முடித்து விடுவோம்

1990-91ம் ஆண்டு கிராம அடிப்படை வசதிகளுக்கான சிறப்புத திட்டத்தின் கீழ் ரூபாய் 500.00 இலட்சம் ஊராட்சி ஒன்றிய பள்ளிகளை பழுது பார்ப்பதற்காக ஒதுக்கப்பட்டது மேலும் அதே ஆண்டு இறுதி சேமிப்பு ஊக்குவிப்புத் தொகையிலிருந்து ரூ. 92.00 இலட்சம் பள்ளிக் கட்டிடங்கள் பழுது பார்ப்பதற்காக ஒதுக்கப்பட்டது மொத்தம் ரூ. 592.00 இலட்சம் ஒதுக்கீட்டில் 22,061 பள்ளிக் கூடங்கள் 31—3—1991 முடிய பழுது பார்க்கப்பட்டன.

(ஊ. வ. துறையின் அ.கா.கு. எண். 47719/இ.1/90-11, நாள்:14-8-92.)

உறுதி மொழியின் விபரம்.

(1)	(2)	(3)	(4)
34	126/91	சமுதாய நலம் நகராட்சி நிர்வாகம் பற்றிய மானிய கோரிக்கைகள் மீது அமைச்சரின் பதில் 17—9—91.	காவல் துறை பொதுப் பணித்துறை போன்று ஊரக வளர்ச்சி துறையிலும் சிறப்பாக செயல் புரியும் அலுவலர்களுக்கு ஆண்டு தோறும் பரிசு வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை
(5)

இந்த உறுதி மொழி தொடர்பாக அரசாணை நிலை எண். 93 ஊரக வளர்ச்சித் துறை நாள்: 8—4—92-ல் ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளில் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பணிகளைச் செய்தல், மக்களிடையே எற்படும் இன வேறுபாடுகளைக் களைவது போன்றவற்றில் சிறப்பாகச் செயல்படும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்றும், அதிக அளவில் பரிசுகள் பெற்ற மாவட்டத்தில் இட்ட அலுவலர் மற்றும் ஆட்சித் தலைவர் ஆகியோர் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கும் தங்கப்பதக்கம் வழங்கப்படும் என்றும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அரசாணையில் நகல் இணைக்கப்பட்டுள்ளது. இந்தப் பரிசுக்குரியவர்களை தேர்ந்தெடுப்பதற்கு குழு ஒன்று அமைப்பது தொடர்பாக ஊரக வளர்ச்சி இயக்குநர், பேரூராட்சிகள் இயக்குநரிடமிருந்து கருத்துரு கோரப்பட்டுள்ளது. அக்கருத்துரு கிடைக்கப்பெற்றதும், இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது."

(ஊ.வ. துறையின் அ.கா.கு. எண். 58379/இ2/91-1, நாள்: 27-10-92.)

ஊரக வளர்ச்சித் துறை — மாண்பு கோரிக்கை தொடர்பாக அறிவிக்கப்பட்ட முடிவுகள் — அரசாணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி துறை.

அரசாணை (நிலை) எண். 93, ஊரக வளர்ச்சித் (தி1) துறை, நாள் 8-4-92.

ஆணை :

6—4—92 அன்று சட்டப் பேரவையில் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய மானிய கோரிக்கையின் போது ஊரக வளர்ச்சித் துறையின் சார்பாக கீழ்க்கண்ட திட்டங்கள் அறிவிக்கப்பட்டன:—

(1) அயல்நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள், தாங்கள் பிறந்து வளர்ந்த கிராமங்களில், வளர்ச்சிப் பணிகளைச் செய்வதற்குத் தேவையான நன்கொடையைப் பெற்று வளர்ச்சிப் பணிகளைச் செய்வதற்கு தமிழ்நாடு ஊரக வளர்ச்சிக் குழுமம், (Tamil Nadu Rural Development Authority) என்ற நிறுவனம் உருவாக்கப்படும்.

(2) ஊராட்சி ஒன்றியங்களில் பல்வேறு பணிகளை ஊராட்சி அளவிலே மேற்கொள்வதற்கு ஒரு நிலையான அமைப்பாக, இரண்டு அல்லது மூன்று ஊராட்சிகள் அடங்கிய ஒரு தொகுதிக்கு ஒரு கிராமப்புற மேம்பாட்டு அலுவலர் (Village Development Officer) கொண்ட ஒரு அமைப்பு உருவாக்கப்படும்.

(3) ஊராட்சிகளிலுள்ள தெருவிளக்குகள், கை இறைப்பான்கள், விசை இறைப்பான்கள், குடிநீர்க் குழாய்கள் மற்றும் வானொலி, தொலைக் காட்சிப் பெட்டிகள் ஆகியவற்றை திறம்பட செயல்படுத்துவதற்காகவும், கிராமப்புற மேம்பாட்டு அலுவலருக்கு உதவியாக ஊராட்சி செயலர் என்ற ஒரு பணியிடமும், தொழில் நுட்ப உதவியாளர் என்ற ஒரு பணியிடமும், புதியதாக உருவாக்கப்படும்.

(4) சாதி சமயமற்ற சமுதாயத்தினை அமைத்து, அனைத்து சமுதாயத்தினரும் சமூக உறவோடு வாழ வழி வகுக்கும்'' புரட்சித் தலைவிநகர் தருமபுரி மாவட்டம் பர்கூரில் உருவாக்கப்பட்டு வருகிறது. இது போன்ற மாதிரி நகர் தமிழகத்தில் உள்ள 21 மாவட்டங்களிலும் ''புரட்சித் தலைவி ஜெயலலிதா நகர்'' என்ற பெயரில் உருவாக்கப்படும்.

(5) ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளில் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பணிகளைச் செய்தல், மக்களிடையே ஏற்படும் இன்வேறுபாடுகளைக் களைவது போன்றவற்றில் சிறப்பாகச் செயல்படும் அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு தங்கப் பதக்கம் வழங்கப்படும்.

(6) மேலே குறிப்பிட்டுள்ள பரிசுகளில், அதிக அளவில் பரிசுகள் பெற்ற மாவட்டத்தின் திட்ட அலுவலர் மற்றும் ஆட்சித் தலைவர் ஆகியோர் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கும் தங்கப் பதக்கம் வழங்கப்படும்.

(7) இத்தப் பரிசுக்குரியவகளைத் தேர்ந்தெடுப்பதற்கு, ஊரக வளர்ச்சித் துறைச் செயலாளர், ஊரக வளர்ச்சி இயக்குநர், சட்டமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு ஒன்று அமைக்கப்படும்.

(8) (அ) வளர்ச்சித் திட்டப் பணிகளை விரைவாகச் செய்வதற்கு வசதியாகவும், மக்கள் எளிதில் அலுவலர்களை அனுகுவதற்கு வசதியாகவும், உத்திரமேரூர் ஒன்றியத்தை இரண்டு ஒன்றியங்களாகவும், கடலாடி ஒன்றியத்தை இரண்டு ஒன்றியங்களாகவும், ஒரத்தநாடு மற்றும் தஞ்சாவூர் ஒன்றியங்களை மூன்று ஒன்றியங்களாகவும் பிரிக்கப்படும்.

(ஆ) நரிமணம், வேதாரண்யம், நாவல்பட்டு, இடங்களைச் சாலை (சேலம் இரும்பு எஃகு தொழிற்சாலையைச் சுற்றியுள்ள பகுதி) ஆகிய நான்கு பேரூராட்சிக்கும் நகரிய மாக்கப்படும்.

(9) தமிழ்நாட்டிலுள்ள 630 பேரூராட்சிகளில் அடிப்படை வசதிகளைச் செய்து தரு வதற்காக சுமார் 150 கோடி செலவில் சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் மூன்று ஆண்டு களில் நிறைவேற்றப்படும்.

(2) மேலே குறிப்பிட்டுள்ள திட்டங்களை செயல்படுத்த அரசு முடிவெடுத்துள்ளது. மேலே கண்டுள்ள பொருள்கள் பற்றிய செயற்குறிப்புகள் அனுப்பும்படி ஊரகவளர்ச்சி இயக்குநர்-பேரூராட்சிகள் இயக்குநர் ஆணையிடப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கல்வித் துறை

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	உறுதிமொழியின் விவரம்.
(1)	(2)	(3)	(4)
35	204/85	சமுதாய நல வளர்ச்சி மற்றும் நகராட்சி நிர் வாகம் குறித்த மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் மாண்புமிகு உள்ளாட் சித் துறை அமைச்சர் அவர்களின் பதில் 12-6-1985.	மாண்புமிகு திரு. பா. உ. சண்முகம் : **** ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், குறிப்பாக ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களை பொறுத்த மட்டில் அரசாங்க ஊழியர்களாக ஆக்க வேண்டும் என்ற நெடுநாளைய கோரிக்கை இருந்தது. அந்தக் கோரிக்கையை முதலமைச்சர் அவர்கள் ஏற்றுக் கொண்டு, அரசாங்க ஊழியர்களாக அறிவித்தார்கள். அதன்படி அவர்களுக்கு முன்பு அளிக்கப்பட்டது. 4 ஆண்டு காலத்திற்குப் பிறகு, இப்போது எல்லோரும் சில குறைகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அரசு அவைகளைப் பரிசீலிக்கும் என்ற உத்திரவாதத்தை கொடுக்கிறேன்.

25

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)

இவ்வுறுதி மொழி 12-6-1985 அன்று அளிக்கப்பட்டதாகும். அதன் பிறகு அரசால் சம்பள ஊதிய குழு அமைக்கப்பட்டு 1-6-1988 முதல் ஆசிரியர்களுக்கு கணிசமான அளவில் புதிய ஊதிய விகிதம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், பஞ்சாயத்து யூனியன் ஆசிரியர்கள் அரசு ஊழியர்களாக மாற்றப்பட்ட பிறகு அரசு ஊழியர்களுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்கப்படுகிறதோ அவைகள் அவர்களுக் கும் நீட்டிக்கப்பட்டு வருகிறது. உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக் கும் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் என்னென்ன பஞ்சப்படி விகிதங்கள் அவ்வப்போது பெறுகின்றனரோ அவைகள் தரப்படுகின்றன. மேலும் ஆசிரியர்களின் குறைகள் அரசின் நிதி நிலைமைக்கேற்ப அவ்வப்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை	பொருள்.
(1)	(2)	(3)	(4)
36	46/89	உடுக்குறியிட்ட வினா எண். 49, துணை வினா உ. ரா. வரதராசன், எம்.எல்.ஏ., 10—4—1989.	அம்பத்தூர் முகப்போ் பகுதிகளில் 5 ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் மற்றும் ஒரு உயர்நிலைப் பள்ளிக்கான கட்டிடங்கள் எம். எம்.டி. எ. வினால் கட்டப்பட்டு பள்ளிகள் துவக்கப்படாமல் இருப்பது குறித்து.

உறுதி மொழியின் விவரம்.
(5)

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :

அந்த விவரங்கள் பரிசீலிக்கப்படும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)

முகப்போ் பகுதியில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தினால் எம். எம்.டி.எ. கட்டப்பட்ட பள்ளிக் கட்டிடங்களில் ஓர் உயர் நிலைப் பள்ளிதொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. அம்பத்தூர் தொகுதி முகப்போ் பகுதிகளில் புதிதாக 1990-91 முதல் 5 தொடக்கப் பள்ளிகள் எம்.எம்.டி.எ. கட்டித் தந்துள்ள கட்டிடங்களில் செயல் பட்டு வருகின்றன.

(கல்வித் துறையின் அ.சா.கு. எண். 49647/இ-1/89-18, நாள்: 6-2-92.)

(1)	(2)	(3)	(4)
37	23/91	உடுக்குறியிட்ட வினா எண். 11060, வினா திரு. பிச்சாண்டி, எம்.எல்.ஏ., 23-1-91.	பெண்கள் விளையாட்டுத் துறையில் சிறந்த முறையில் முன்னேறுகின்ற வகையில் விடுதியுடன் கூடிய பள்ளியை அமைக்க அரசு முன்வருமா என்பது குறித்து.

உறுதி மொழியின் விவரம். (5)	துறையில் எடுத்த நடவடிக்கை. (6)
மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: அது பற்றி ஆராய்ந்து பார்க்கப்படும்.	பெண்கள் விளையாட்டுத் துறையில் சிறந்த முறையில் முன்னேறும் வகையில் பெண்களுக்கென தனியாக விடுதியுடன் கூடிய விளையாட்டுப் பள்ளி 1982-83-ம் கல்வி ஆண்டில் கோயம்பத்தூர் பி.எஸ்.ஜி.ஆர். கிருஷ்ணம்மாள் உயர்நிலைப் பள்ளியில் ஆரம்பிக்கலாம் என அரசாணை நிலை எண். 1063, கல்வி, விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பவியல் துறை, நாள் 29—5—1982-ல் ஆணையிடப்பட்டது. மேற்படி பள்ளியில் 8 மற்றும் 9-ம் வகுப்பில் மட்டும் மாணவிகள் சேர்க்கப்பட்டு தடகளம், கையுந்துபந்து மற்றும்கூடைப்பந்து விளையாட்டுக்களில் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தது. 1989-90ம் ஆண்டிலிருந்து இவ்விளையாட்டுப் பள்ளி மதுரையிலுள்ள ஒ. சி. பி. எம். பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு மாற்றப்பட்டு செயல்பட்டு வருகிறது. மேலும் பெண்கள் விளையாட்டுத் துறையில் சிறந்த முறையில் முன்னேறுகின்ற வகையில் பெண்களுக்கென தனியாக விளையாட்டு விடுதி நிறுவிட பகுதி II திட்டத்தின் கீழ் 1992-93-ம் ஆண்டில் தருமபுரியில் அமைக்க அரசாணை நிலை எண் 504, கல்வி, நாள் 21—5—92ல் ஆணையிடப்பட்டுள்ளது. பொதுவாக, பெண்களுக்கென தனியாக இயங்கி வரும் விளையாட்டுப் பள்ளிகளில் சேர்ந்திட மாணவிகள் போதுமான அளவு ஆர்வம் காட்டுவதில்லை. விளையாட்டுப் பள்ளிகளில் சேர்ந்திட விருப்பம் தெரிவித்து பெருமளவில் மாணவிகளிடமிருந்து விண்ணப்பம் பெறப்படின் பெண்களுக்கான விடுதியுடன் கூடிய விளையாட்டுப் பள்ளிகளை மேலும் பல இடங்களில் அமைத்திட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். **(கல்வித் துறையின் அ.சா.கு. எண். 9530/ஒய்.1/91-9, நாள்: 24-9-92.)**

COPY OF:

GOVERNMENT OF TAMIL NADU

Abstract.

TECHNICAL EDUCATION—THANTHAI PERIYAR GOVERNMENT INSTITUTE OF TECHNOLOGY, VELLORE—Shifting to Dharmapuri District—Orders—Issued.

(G.O. Ms. No. 485, Education Department, dated 12th May 1992.
READ—

1. G.O. Ms. No. 973, Education, dated 11th July 1990.
2. From the Director of Technical Education, letter No. 48117/H1/91, dated 23rd August 1991.

ORDER

In the G.O. read above, orders have been issued for the starting of Thanthai Periyar Government Institute of Technology at Vellore. The College has been functioning in the premises of Thanthai E.V.R. Government Polytechnic, Vellore as a temporary arrangement pending a decision regarding the permanent location for establishing the college. This temporary arrangement has thrown up difficulties as both the Polytechnic and the Engineering College have to share the common infrastructural facilities like workshops, laboratories etc.,

2. The question of relocating the college in a suitable place and providing it with adequate infra-structural facilities has been engaging the attention of the Government for some time. It is considered that adequate facilities for technical education are available in Vellore and its neighbourhood but these facilities are not adequate in the backward district of Dharmapuri. The location of the College in Dharmapuri district will also serve the purpose of accelaration of the industrial development of Dharmapuri District. The Government have therefore decided to shift the Thanthai Periar Government Institute of Technology from Vellore to Dharmapuri District.

3. The Government accordingly direct that Thanthai Periar Government Institute of Technology, Vellore be shifted to Dharmapuri District and be located between Bargur and Krishnagiri abutting the National Highway.

4. The Collector of Dharmapuri District is requested to select a suitable site for the location of the Institute between Bargur and Krishnagiri abutting the National Highway and send up suitable proposals to the Government without delay.

5. Orders regarding other issues like programme of phased shifting, courses to be started, allocation of funds, etc. will be issued seprately.

(BY ORDER OF THE GOVERNOR)

J. R. RAMANATHAN
Secretary to Government.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை	பொருள்.
(1)	(2)	(3)	(4)
38	251/92	கல்வி பற்றிய மாணியக் கோரிக்கையின் மீது அமைச்சரின் பதிலுரை 2—4—92.	வேலூரில் நடைபெறுகிற தந்தை பெரியார் பொறியியல் கல்லூரி குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை
(5)	(6)
மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : வேலூரிலே நடைபெறுகின்ற தந்தை பெரியார் பொறியியல் கல்லூரி பார்கூருக்கு மாற்றப்படும். பார்கூருக்கும் திருவண்ணாமலைக்கும் இடையே தேவையான நெடுஞ்சாலையில் தேவையான இடத்தை எடுத்து அந்த இடத்திலேயே அமைக்கப்படும்.	அரசாணை (நிலை) எண். 485, கல்வி, நாள், 12—5—92-ல் வேலூர் ஈ.வெ.ரா. அரசு பாலிடெக்னிக்கில் தற்பொழுது இயங்கிவரும் வேலூர் தந்தை பெரியார் பொறியியல் கல்லூரியை தருமபுரி மாவட்டம், பார்கூருக்கு மாற்றம் செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பார்கூருக்கும் திருவண்ணாமலைக்கும் இடையே தேசிய நெடுஞ்சாலையில் தேவையான இடத்தை எடுத்து, அந்த இடத்தில் பொறியியல் கல்லூரி அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. ஆணையின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

(கல்வித் துறையின் அ.சா.கு. எண் 47887/ஜே-1/92, நாள்: 10—8—92)

29

கால் நடை பராமரிப்பு மற்றும் மீனவத் துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை	பொருள்	உறுதி மொழியின் விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
31.	506-87	உடுக்குறியிட்ட வினா எண் 2567 மற்றும் துணை வினா திரு. சைதை சா. துரைசாமி, எம்.எல்.ஏ. 25—4—87.	சென்னையில் மேலும் புதிதாக பால் பண்ணைகள் தொடங்குவது குறித்து தானியங்கி பால் நிலையங்கள் பெருமளவிற்கு மக்களுக்குப் பயன்படும் என்கிற காரணத்தால் அவற்றை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?	மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் — சென்னையில் மேலும் புதிதாக ஒரு பால் பண்ணை துவங்கப்பட இருக்கிறது. புதிதாக மேலும் விஸ்தரிக்கலாமா என்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

குழுவின் குறிப்புரை.
(6)

குழுவிற்கு விவரமான அறிக்கை அனுப்பவும்.

அரசு எடுத்த நடவடிக்கை.
(7)

சென்னையில் மூன்றாவது பால்பண்ணை அமைப்பது.— மூன்றாம் பால் பெருக்குத் திட்டம் 1987-ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் 7 ஆண்டு காலத்தில் (1987-94) நிறை வேற்றத் திட்டமிடப்பட்டு 13 மாவட்டங்கள் உள்ளடக்கிய கருத்துரு ரூ. 68.19 கோடி செலவில் திட்டமிட்டு தேசிய பால்வள வாரியத்திற்கு 1987-ஆம் வருடம் அனுப்பப்பட்டு ஒப்புதல் எதிர்பார்க்கப்பட்டது. இத்திட்டத்தில் நாளொன் றுக்கு 3.00 லட்சம் லிட்டர் கொள்திறன் கொண்ட புதிய மூன்றாவது பால்பண்ணை சென்னையில் அமைக்கும் திட்டமும் ஒன்றாகும்.

இப்புதிய பால்பண்ணை அமைக்கும் திட்டத்திற்கான ஒப்புதல் தேசிய பால்வள வாரியத்திலிருந்து 8—5—90 அன்று பெறப்பட்டது.

நாளொன்றுக்கு 3 இலட்சம் லிட்டருக்கு ஏற்கனவே தேசிய பால்வள வாரியத்துடன் ஒப்புதல் பெறப்பட்டிருந்தது. மேற்படி கருத்துரு நாளொன்றுக்கு 4 இலட்சம் லிட்டராக உயர்த்த தேசிய பால்வள வாரியத்திற்கு ஜனவரி 1991-ம் ஆண்டு அனுப்பப்பட்டது. இக்கருத்துருவை தேசிய பால் வள வாரியம் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு அக்டோபர் 1991ஆம் ஆண்டு ஒப்புதல் அளித்தது. இப் பண்ணையின் கட்டுமானப் பணிகள் தற்பொழுது நடந்து வருகின்றன. மற்றும் இயந்திரங்கள் வந்து நிறுவுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன. இது விரைவில் செயல்படத்துவங்கும்.

தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் :

சென்னையில் புதிய தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் அமைக்க 56 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில்,

21 இடங்களில் கட்டுமானப்பணிகள்/இயந்திர தளவாடங்கள் அமைக்கும் பணி நடந்து வருகிறது.

15 இடங்களில் கட்டுமானப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப் பட்டுள்ளன. மற்றும்

20 இடங்களில் ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது. இதுதவிர, மேலும் தேவைக்கேற்ப இடங்கள் தேர்ந்தெடுக்கும் பணி நடந்துவருகிறது.

(அவை சார்பற்ற குறிப்பெண். 24134/பா.உ.2/90-13 நாள். 24—11—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை	உறுதிமொழியின் விவரம்.
(1)	(2)	(3)	(4)
46	228-89	பால் வழங்கு திட்டங்கள் பற்றிய மாணியக் கோரிக்கை எண் 10-இன் மீதான விவாதத்திற்கு மாண்புமிகு மீன் துறை அமைச்சர் திரு. கே. எஸ். நேரு அவர்களின் பதிலுரை. 2—5—1989.	சின்னசேலம் ஆம்பூர், நாமக்கல் பாளையம் முசுரபுரம், பரம்பலூர், குரூர், மன்னார்குடி, ஆகிய இடங்களில் உள்ள பால் குளிரூட்டும் நிலையங்களின் கொள்திறன் விரிவாக்கப்படும். சேத்தியா தோப்பு திண்டிவனம், திருவண்ணாமலை, அனக்காவூர், சதுரியமங்கலம், சங்கராண்டான் திருப்பூர், சுல்தான்பேட்டை, சண் பழனி, திண்டுக்கல், தேனீ, ஜெயங்கொண்ட சோழ புரம், விழுப்புரம், திருவள்ளூர்	
		குழுவின் குறிப்புரை.	அரசு எடுத்த நடவடிக்கை.
		(5)	(6)
		நாமக்கல்லில் பால் குளிரூட்டும் நிலையம் புதிய இடத்தில் எப்போது அமைக்கப்படும், புதிய இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டதா என்றும் குழு அறிய விரும்புகிறது.	நாமக்கல்லில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் குளிரூட்டும் திறன் கொண்ட பால் குளிரூட்டும் நிலையம் புதிய இடத்தில் அமைக்கத் தகுந்த இடம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலை கழகத்தின் வளாகத்தில் கையகப் படுத்தப்பட்டுள்ளது. இக்குளிரூட்டு நிலையத்தின் கட்டுமானங் கள் தொடங்கத் தேவையான வரைபடம் நீர் வசதிகள் மற்றும் இதர தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணிகள் முடிந்தவுடன் இக்குளிரூட்டு நிலையத்தின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படும். அ. சா. கு. எண். 21542-பா2-89-16, நாள் : 22—6—1992.
வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
41	158-51	உடுக்குறியிட்ட வினா எண். 1504 நுனை வினா ஊராட்சி ஒன்றிய பொது நிதியில் பணம் இல்லாத திரு. இரா. பழனிசாமி எம்.எல்.ஏ. 15—9—91.	நிலையில் அரசு முழு மானியம் கொடுத்து கால்நடை மருத்துவ மனை கட்ட முன் வருமா என்பது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்த நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் உறுப்பினர் அவர்கள் கூறியதைப் பரிவுடன் பரிசீலிப்போம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.	தமிழ் நாட்டில் தற்பொழுது 758 கால்நடை மருந்தகங்கள் செயல்பட்டு வருகின்றன. இதுவரை தோற்றுவிக்கப்பட்ட 758 கால்நடை மருந்தகங்கள் 588 மருந்தகங்களுக்குத் தான் நிரந்தரக்கட்டிடம் உள்ளது. மீதி 170 கால்நடை மருந்தகங்களுக்கு கட்டிடம் கட்டுவதற்கு தற்போதைய மதிப்பீட்டின் அடிப்படையில் சுமார் ரூ. 620.50 இலட்சம்

தேவைப்படுகிறது. (ஒரு கால்நடை மருந்தகம் கட்டுவதற்கு சுமார் ரூ. 3.65 இலட்சம் செலவு ஆகும்) நிதி வசதியில்லாத காரணத்தால் மேற்கூறிய 170 கால்நடை மருந்தகங்களுக்கு இன்னும் கட்டிடம் கட்டப்படவில்லை பல ஊராட்சி ஒன்றியங்கள் தீர்மானம் நிறைவேற்றி ஒன்றியத்தின் பங்குத்தொகையினை அளிக்க தயார் நிலையில் இருந்தும் அரசின் பங்குத்தொகை அளிக்க போதிய நிதிவசதியில்லாத காரணத்தால் கட்டிடம் கட்டப் படாமல் உள்ளது. மேலும் கால்நடை மருந்தகங்களுக்கு ஏற்படும் தொடர் செலவினம் அனைத்தையும் அரசு ஆண்டு தோறும் ஏற்கின்றது. (ஒரு கால்நடை மருந்தகத்திற்கு ஆகும் தொடர் செலவினம் ரூ. 1.26 இலட்சமாகும்) இந்த அடிப்படையில் அரசு முழுச் செலவையும் ஏற்று கால்நடை மருந்தகம் தோற்றுவிக்க அதிக நிதி தேவைப் படுகின்றது. மேற்படி செலவினத்தை மூழு மானியத்துடன் தற்போதுள்ள நிதி நிலைமையில் அரசு மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

கால்நடை பராமரிப்பு(ம)மீன் துறையின் அ.சா.கு. எண் 32492-கா.ப.3-91-8, நாள் : 11-9-92.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
		(3)	(4)
42	280/91	பால் வழங்கு திட்டங்கள், மீன்வளம், கால் நடை வளர்ப்பு மற்றும் காட்டு வளத்துறை குறித்து மானியக் கோரிக்கைகள் மீது அமைச்சரின் பதில் 25-9-1991.	பால் பண்ணைகள் விரிவாக்கம் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் விரிவாக்கம் குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்த நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : அம்பத்தூர், சேலம், ஈரோடு, திருவண்ணாமலை, மதுரை, கோவை, வேலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள பால் பண்ணைகளை விரிவாக்கம் செய்யவும் திட்டம் தீட்டப்பட்டுள்ளன. கூடுதலாக 12 இடங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் விரிவாக்கம் செய்யப்பட உள்ளது.

1. பால்பண்ணை விரிவாக்கம் :—அம்பத்தூர் : அம்பத்தூர். பால்பண்ணை விரிவாக்கம் (நாளொன்றுக்கு 3.0 இலட்சம் லிட்டரிலிருந்து 4.0 இலட்சம் லிட்டராக உயர்த்த 50 தானியங்கி பால் வழங்கும் நிலையங்களையும் உள்ளடக்கியது) இணையத்தின் மூலம் நிறுவப்பட உள்ளது. பத்து தானியங்கி நிலையங்கள் முடிவடைந்துள்ளன. 21 தானியங்கி நிலையங்களுக்குப் பணிக்கான ஆணை பிறப்பித்து வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 15 தானியங்கி நிலையங்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சில இயந்திர தளவாடங்கள் வரப்பெற்று சேர்த்துள்ளன. செலவின் மதிப்பீடு ரூ. 258.14 இலட்சம்.

2. சேலம் :

சேலம் பால்பண்ணை விரிவாக்க (2.0 இலட்சம் லிட்டரிலிருந்து நாளொன்றுக்கு 3.00 இலட்சம் லிட்டராக உயர்த்துதல்) தேசிய பால்வள வாரியத்தால் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகளுக்கான ஆணை கொடுக்கப் பட்டு வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. இயந்திரங்கள் வந்துள்ளன. செலவின் மதிப்பீடு ரூ. 146.15 இலட்சம்.

3. ஈரோடு :

ஈரோடு பால்பண்ணையின் கொள்திறன் நாளொன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டரிலிருந்து 3.0 இலட்சம் லிட்டராக விரிவாக்கம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது.

4. திருவண்ணாமலை :

திருவண்ணாமலை பால்பண்ணை விரிவாக்கம் (1 இலட்சம் லிட்டரிலிருந்து 1.5 இலட்சம் லிட்டராக உயர்த்த) இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விட்டது. சில இயந்திரங்கள் வரப்பெற்று நிறுவுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. செலவின் மதிப்பீடு ரூ. 36.55 இலட்சம்.

5. மதுரை :

மதுரை பால்பண்ணை விரிவாக்கம் (நாளொன்றுக்கு 1.50 இலட்சம் லிட்டரிலிருந்து 2.0 இலட்சம் லிட்டராக உயர்த்த) இணையத்தின் மூலம் நிறுவப்படவுள்ளது. இயந்திரங்களுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. செலவின் மதிப்பீடு ரூ. 60.10 இலட்சம்.

6. கோவை :

கோயம்புத்தூர் பால்பண்ணை விரிவாக்கம் நாளொன்றுக்கு 1.0 இலட்சம் லிட்டரிலிருந்து 2.0 இலட்சம் லிட்டராக உயர்த்த, தேசிய பால்வள வாரியத்தால் நிறுவப்படவுள்ளது. கட்டுமானப் பணிகளுக்கான ஒப்பந்தம் பரிசீலனையில் உள்ளது. இயந்திரங்களுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செலவின் மதிப்பீடு ரூ. 99.32 இலட்சம்).

7. வேலூர் :

வேலூர் பால்பண்ணை விரிவாக்கம் (70,000 லிட்டரிலிருந்து 1.5 இலட்சம் கொள்திறன்) இணையத்தின் மூலம் நிறுவப்பட உள்ளது. அதற்கான திருத்தியமைக்கப்பட்ட ஆணைக்கு தேசிய பால்வள வாரியத்திடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

8 தஞ்சாவூர் :

தஞ்சாவூர் பால்பண்ணையை நாளொன்றுக்கு 26,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக விரிவாக்கம் செய்ய கருத்துரு தேசிய பால்வள வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதன் ஒப்புதல் இன்னும் பெறப்படவில்லை.

பால் குளிரூட்டும் நிலையங்கள்:—

1. **திருவண்ணாமலை :** நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து ஒரு இலட்சம் லிட்டராக உயர்த்த இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமான பணிகள் முடியும் தருவாயில் உள்ளன. சில இயந்திர தளவாடங்கள் வரப்பெற்று நிறுவுவதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (செலவின் மதிப்பீடு ரூ. 88.41 இலட்சம்).

2. **ஆம்பூர் :** நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்த இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமான பணிகள் 90 சதவீதம் நடந்துள்ளன. வேலைக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சில இயந்திரங்கள் வந்துள்ளன. (செலவின் மதிப்பீடு ரூ. 336.26 இலட்சம்)

3. **அனக்காவூர் :** இந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தினை நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 60,000 லிட்டராக உயர்த்த இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமான பணிகள் நிறைவடைந்துள்ளன. சில இயந்திரங்கள் வந்துள்ளன. (செலவின் மதிப்பீடு ரூ. 26.95 இலட்சம்)

4. **சங்கராண்டாம் பாளையம் :—**

இந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தினை நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டருக்கு உயர்த்த இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது.

5. **ஆத்தூர் :—**

இந்தப்பால் குளிரூட்டும் நிலையத்தினை நாளொன்றுக்கு 50,000 லிட்டரிலிருந்து 80, 000 லிட்டராக உயர்த்த இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகளுக்கான ஆணை மற்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இயந்திரங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படவுள்ளது. (செலவின் மதிப்பீடு ரூ. 47.49 இலட்சம்).

6. **நாமக்கல் :**

இந்தப்பால் குளிரூட்டும் நிலையத்தினை நாளொன்றுக்கு 30,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்த தேசிய பால்வள வாரியத்தால் நிறுவப்படவுள்ளது. கட்டுமானப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி பரிசீலனையில் உள்ளது. இயந்திரங்களுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (செலவின் மதிப்பீடு ரூ. 96.08 இலட்சம்.)

7. சண்முகாபுரம் :

இந்தப் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் நாளொன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்த பணிகள் இணையத்தின் மூலம் செய்யப்பட்டு வருகின்றன. கட்டுமான பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளது. இயந்திரங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படவுள்ளது. (செலவின் மதிப்பீடு ரூ. 45.42 இலட்சம்).

8. சுல்தான்பேட்டை :

இந்தப் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் நாளொன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்த இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளது. இயந்திரங்கள் வாங்குவதற்கான ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்பட உள்ளது. (செலவின் மதிப்பீடு ரூ. 45.47 இலட்சம்).

9. தருமபுரி

இந்தப் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் நாளொன்றுக்கு 40,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக இணையத்தின் மூலம் நிறுவப்பட்டு வருகிறது. கட்டுமானப் பணிகள் முடிவடைந்து விட்டன. சில இயந்திரங்கள் வரப்பெற்று நிறுவுவதற்கான வேலை நடந்துக்கொண்டிருக்கின்றன. (செலவின் மதிப்பீடு ரூ. 24.69 இலட்சம்).

10. தேவி :

இந்தப் பால் குளிரூட்டும் நிலையம் விரிவாக்கம் நாளொன்றுக்கு 10,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்த இணையத்தின் மூலம் நிறுவப்படவுள்ளது. கட்டுமானப் பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இயந்திரங்களுக்கான ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படவுள்ளது. (செலவின் மதிப்பீடு ரூ. 84.50 இலட்சம்).

11. விழுப்புரம் :

இந்தப் பால் குளிரூட்டும் நிலையம் தற்போதைய கொள்ளளவு 30,000 லிட்டரிலிருந்து 1.0 லிட்சம் லிட்டராக நாளொன்றுக்கு உயர்த்தி 50,000 லிட்டர் பதப்படுத்தும் திறனுடன் கூடிய ஒரு பால் பண்ணையாக தேசிய பால்வள வாரியத்தால் நிறுவப்பட்டு வருகிறது. இதற்கான கட்டுமான பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. இயந்திரங்களுக்கான ஆணை பிறப்பிக்கப்பட்டு சில இயந்திரங்கள் பெறப்பட்டுள்ளன. (செலவின் மதிப்பீடு ரூ. 174.22 இலட்சம்.)

12. பெரம்பலூர் :

இந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தினை நாளொன்றுக்கு 8,000 லிட்டரிலிருந்து 50,000 லிட்டராக உயர்த்தி இணையத்தின்

(6)

மூலம் நிறுவப்படவுள்ளது. கட்டுமானப் பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இயந்திரங்கள் வாங்குவது பற்றிய ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படவுள்ளது. (செலவின் மதிப்பீடு ரூ. 113.93 இலட்சம்).

13. கரூர் :

இந்தப் பால் குளிரூட்டும் நிலையத்தினை நாளொன்றுக்கு 8,000 லிட்டரிலிருந்து 30,000 லிட்டராக உயர்த்தி இணையத்தின் மூலம் நிறுவப்படவுள்ளது. கட்டுமானப் பணிக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இயந்திரங்கள் வாங்குவது பற்றிய ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படவுள்ளது. (செலவின் மதிப்பீடு ரூ. 68.01 இலட்சம்.)

மேற்கூறிய பாலிபண்ணை விரிவாக்கம் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் விரிவாக்கம் அனைத்தும், தேசிய பால் வளர்ச்சி நிறுவன நிதி உதவி பெற்று, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(அ.சா.கு. எண். 35883/பா.உ. 2/91/5, நாள் : 18—5—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி. எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
43	55/92	உடுக்குறியிட்ட வினா எண் : 1185, துணை வினா— திரு. ஆர். சிங்காரம், எம்.எல்.ஏ., 19—2—1992.	பட்டுக்கோட்டை ஒன்றியம், ஏரிப்புறக்கரையிலுள்ள மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்திற்கு விரைவில் கடன் வழங்க அரசு முயற்சி எடுக்குமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்த நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : நடவடிக்கை உடன் மேற்கொள்ளப்படும்.

ஏரிப்புறக்கரை மீனவர் மகளிர் கூட்டுறவுச் சங்கத்தின் கோரிக்கைக்கு இணங்க 1991 மார்ச் திங்களில் பங்கு மூலதனக் கடன் ரூ. 20,000 (அரசு மானியம்) வழங்கப்பட்டது. இத்தொகை இச்சங்கத்தின் கடன்பெறும் சக்தியை/உச்சக்கடன் அளவை (Maximum Borrowing Power) அதிகபடுத்தும் அளவிலேயே வழங்கப்பட்டது. சங்கம் இவ்வாய்ப்பினை பயன்படுத்தி தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்/மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன்பெற்ற உறுப்பினர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது தொடர்பாக சங்கத்தின் தனி அலுவலருக்கும் மீன்துறை உதவி இயக்குநர் (விரிவாக்கம்) நாச்சிப்பட்டினத்திற்கும் தக்க அறிவுரைகள் வழங்கப் பட்டுள்ளன.

2. அரசின் கடன் சங்க உறுப்பினர்களுக்கு நேரடியாகவும் பணமாகவும் வழங்க வாய்ப்பில்லை. சங்க உறுப்பினர்கள் வங்கிகளை அணுகியே கடன்பெறவேண்டும். ஏரிப்புறக் கரை மீனவ மகளிர் கூட்டுறவு சங்கத்தின் வளர்ச்சிக்கென நடைமுறை மூலதனக் கடன் (Working Capital Loan) தேவைப்படின், அதற்குரிய முறையான கருத்துருவை அனுப்பி வைக்குமாறு மீன்துறை ஆணையர் மீன்துறை உதவி இயக்குநருக்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

(கா.ப. (ம) மீன் துறையின் அ.சா.கு. எண். 8331/மீன் 3/92/8, நாள் : 30—10—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
10	100/92	உடுக்குறியிட்ட வினா எண். 4988, திருமதி என். சி. கனக வல்லி, எம்.எல்.ஏ., 13—8—1992.	விளாத்திகுளம் தொகுதியில் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ள மீனவர்களுக்கு கடன் வழங்கப்படுவதில்லை. பதிலாக வசதி படைத்தவர்களுக்கு தனியார்களுக்குத்தான் வழங்கப்பட்டுகிறது. இது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம். (4)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (5)
மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.	விளாத்திகுளம் தொகுதியில் கீழ்க்கண்ட மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1. கீழவைப்பார் மீனவர் கூட்டுறவுச் சங்கம். 2. சிப்பிகுளம் மீனவர் கூட்டுறவுச் சங்கம். 3. வேம்பார் மீனவர் கூட்டுறவுச் சங்கம் தவிப்பட்ட நபர் யாருக்கும் விளாத்திகுளம் தொகுதியில் உள்ள எந்த மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலும் கடன் வழங்கப்படவில்லை. மீன் துறையில் பகுதி–2 திட்டத்தின் கீழ் 20 விழுக்காடு மானியத்தில் விசைப்படகு, கட்டு மரம், வலை வழங்கும் திட்டம் உள்ளது. இத்திட்டத்தில் மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் வங்கியின் விதிமுறைகளுக்குட்பட்டு வங்கியினர் கோரும் பிணை வைப்பு (Collateral Security) கொடுத்துள்ள 60 விழுக்காடு கடன்பெற வாய்ப்புள்ளது. அரசு மானியம் 20 விழுக்காடு வழங்கப்படும். உறுப்பினர் 20 விழுக்காடு செலுத்த வேண்டும். உறுப்பினர் வாங்கும்

மீன்பிடி சாதனத்தின் விலைக்கேற்ப இத்தொகைகள் மாறுபடும். உதாரணமாக 43 அடி விசை படகு கட்டவேண்மெனில் சுமார் ரூ. 5.00 இலட்சம் செலவாகும். இதற்கு 60 விழுக்காடு வங்கிக்கடன் ரூ. 3.00 இலட்சம் கிடைக்கும்.

உறுப்பினர் பங்கு 20 விழுக்காடு ரூ. 1.00 இலட்சம், அரசு மான்யம் 20 விழுக்காடு ரூ. 1.00 இலட்சம். கடன்பெற வேண்டுமெனில் அதற்கான பிணை வைப்புத்தொகையாக வங்கி கோரும் பிணை வைப்பிலான கொடுக்கவேண்டும். வங்கிக் கடன் பெற கூடுதலாக பிணைவைப்பு கொடுத்தால்தான் கடன்பெற முடியும். இந்நிலையில் தகுதியுடைய மீனவ உறுப்பினர்கள் மட்டுமே வங்கிமூலம் கடன்பெற வசதியுள்ளது. அரசு மான்ய உதவிகளையும் அவர்கள் பெறுகின்றனர்.

2. மேற்படி திட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட விவரப்படி மீனவர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் பயன் பெற்றுள்ளனர்

உள்/வெளிப் பொருத்தும். இயந்திரம் வாங்குவதற்கு மான்யம் வழங்குதல்:

ஆண்டு.	சங்கம் பெயர்.	பயன்பெற்ற உறுப்பினர் எண்ணிக்கை.
(1)	(2)	(3)
1987—88	சிப்பிகுளம் மீனவர் கூட்டுறவுச் சங்கம்.	7 உறுப்பினர்கள்.
1988—89	சிப்பிகுளம் மீனவர் கூட்டுறவுச் சங்கம்.	4 உறுப்பினர்கள்.
1987—88	கீழவைப்பார் மீனவர் கூட்டுறவுச் சங்கம்.	8 உறுப்பினர்கள்.
1988—89	கீழவைப்பார் மீனவர் கூட்டுறவுச் சங்கம்.	3 உறுப்பினர்கள்.

வேம்பார் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு உறுப்பினர் பெரிய மீன்பிடி விசைப்படகு கட்டுவதற்காக தூத்துக்குடி பாரத் ஸ்டேட் வங்கியில் ரூ. 3.60 இலட்சம் கடன்பெற்று விசைப் படகு கட்டியுள்ளார். இவருக்கு 1988—89—ம் ஆண்டில் ரூ. 1.00 இலட்சம் அரசு மான்யம் வழங்கப்பட்டது. பொதுவாக மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்கள் மட்டும்தான் அரசின் திட்டங்களினால் பயன்பெற முடியும்.

(ஊ.ப. (ம) மீன் துறையின் அ.சா.கு. எண். 9328/மீன் 3/88-3, நாள் : 11—8—1988.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
45	180/92	உடுக்குறியீட்ட வினா எண். 4363 துணை வினா திரு எஸ். டேனியல்ராஜ், எம்.எல்.ஏ., 25—3—1992.	மீனவர்களை உடனடியாக தேடி கண்டுபிடிப்பதற்கு அதிவேக மாக செல்லக்கூடிய இயந்திரப்படகு ஒன்றை தூத்துக்குடி யில் நிறுத்துவதற்கு அரசு முன்வருமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்த நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : அதுபற்றியும் அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும்.

தமிழ்நாட்டில் தூத்துக்குடியில் காணாமல்போகும் மீனவர் களைத் தேடுவதற்கு ஒரு வேகப் படகு வாங்கும் தனி யான கருத்து ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் மத்திய அரசு, போக்குவரத்து அமைச்சகத்தின் கீழ் வளர்ச்சி ஆலோசகர் (Development Adviser) தலைமையின் கீழ் அமைக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுவின் பரிந்துரைப் படி 1983-ம் ஆண்டைய தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு முறைப் படுத்தும் சட்டத்தைச் செயல்படுத்த 43* அடி நீளமுள்ள 5 ரோந்துப் படகுகள் தூத்துக்குடி உட்பட 5 மீன்பிடி மையங் களுக்கு 100 கதவீத மான்யத்தில் வழங்க முன்வந்துள்ளது. இதன்படி ரூ. 4.5. கோடி செலவில் 5 படகுகள் வாங்க மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இவற்றைப் பரா மரிக்க ஆண்டொன்றுக்கு ரூ. 60 இலட்சம் மாநில நிதியிலி ருந்து செலவிடப்படும். இவ்வாறு வாங்கப்பட உள்ள தூத்துக்குடி மீன்படி மையத்துக்கு ஒதுக்கப்படும் படகு காணாமல்போகும் மீனவர்களைத் தேடும் பணிக்கும் பயன் படுத்திக் கொள்ளப்படும்.

(அ.சா.கு. எண். 15394/மீன்-3/92/2, நாள் : 24—7—1992)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
46	245/92	உடுக்குறியிட்ட வினா எண். 1960 துணை வினா திரு. ஜே. லாரன்ஸ், எம்.எல்.ஏ., 2—4—1992.	கன்னியாகுமரி மாவட்டத்தில் வீடற்ற மக்களுக்கு வீடுகள் கொடுக்கும் முன்னுரிமை இந்தத் திட்டத்தில் அறிவிக்கப் படுமா என்பது குறித்து.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

	உறுதிமொழின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
	(5)	(6)
	மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : அரசு கவிவுடன் பரிசீலிக்கும்.	மீனவர் இலவச வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்துவதில் மீன் துறை பொதுவாகவே கன்னியாகுமரி மாவட்டத்திற்கு முன்னுரிமை அளித்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடலோர மீன் பிடி கிராம மக்கள் பெரும் பகுதியினர் மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளதாலும், வீட்டுவசதி அளித்திட இத்துறையை அணுகுவதாலும் இவ்விதம் முன்னுரிமை அளிக்கப்படுகிறது. உதாரணமாக, 1989—90-ல் மொத்தம் 698 வீடுகளும் 1990—91-ல் 601வீடுகளும் ஒதுக்கீடு செய்யப் பட்டன. அதைத் தொடர்ந்து 1991—92-ல், 699 வீடுகள் கட்டி வழங்கிட அரசு ஆணையிட்டுள்ளது. இவ்வீடுகள் கட்டுவதற்கு தேவைப்படும் நிதி, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கப்பட்டுவிட்டது. இவ்வீடுகள் கட்டு மானப்பணி நடப்பு ஆண்டில், (1992—93)-ல் துவக்கப்படும். அதேபோல இந்த ஆண்டிலும் இலவச வீட்டுவசதி திட்டத்தில் மீனவர்களுக்கு வீடுகட்டி வழங்கிட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

[கா.ப. (ம) மீன் துறையின் அ.சா.கு. எண். 16710/மீன்-3/92-2 நாள் : 24—7—1992.]

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை.

வரிசை எண்	உறுதி மொழி எண்.	பார்வை	பொருள்.
(1)	(2)	(3)	(4)
47	30/90	உடுக்குறியிட்ட வினா எண். 4098, திரு. கே. ரமணி, எம்.எல்.ஏ., 20—1—1990.	கோவை சித்தாமணி நெற்பங்காடிக்குச் சொந்தமான ஒண்டிப் புதூரில் உள்ள கடலை எண்ணெய் உற்பத்தி ஆலை சரிவர செயல்படாமலிருப்பது குறித்து.

	உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
	(5)	(6)
	மாண்புமி குதிரு. பொன் முத்துராமலிங்கம்: மாற்று ஏற்பாடாக டால்கேப் விதை உற்பத்தியாளர் கூட்டுறவு இணையத்தில் இதை கூலி ஒப்பந்த முறையிலே ஒப்படைக்க வாமா அல்லது இதனை தனியாக பிரித்து ஒரு சங்கத்தை ஏற்படுத்தலாமா என்ற ஆய்வும் அரசின் சார்பில்நடத்தி கொண்டிருக்கிறது.	இவ்வுறுதிமொழியைச் செயல்படுத்துவது தொடர்பாகக் கீழ்க் காணும் மூன்று அம்சங்கள் பரிசீலிக்கப்பட்டன :—
	புதிய கூட்டுறவு நிறுவனம் அமைப்பது குறித்து நடவடிக்கை எந்த நிலையில் உள்ளது.	(1) ஒண்டிப்புதூர் எண்ணெய் ஆலையை அதன் புத்தக மதிப் பிற்கு அல்லது இருதரப்பிற்கும் ஏற்புடைய மதிப்பிற்கு தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் இணையத்திற்கு விற்றுவிடல்.
		(2) கூலி ஒப்பந்த அடிப்படையில் தமிழ்நாடு கூட்டுறவு எண் ணெய்வித்துக்கள் இணையத்திற்குக் குத்தகைக்கு விடல்,

(5) எண்ணெய் ஆலையை கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையிடமிருந்து தனியாகப் பிரித்து புதிய கூட்டுறவு நிறுவனமாக அமைத்தல்.

முதல் இரு அம்சங்கள் தொடர்பாக கோவை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை எண்ணெய் வித்துக்கள் இணையத்துடன் தொடர்பு கொண்டது. இதில் ஒரு முடிவெடுக்குமுன், ஆலை செயல்படும்போது அதனைப் பார்வையிட ஒரு குழுவை அனுப்ப இணையம் விருப்பம் தெரிவித்தது. ஆனால் ஆலை தற்போது செயல்படாததால் குழு இன்னும் பார்வையிடவில்லை.

ஆலை வரும் அக்டோபர் மாதம் முதல் செயல்படும் வாய்ப்புள்ளது. ஏனெனில் அப்போதுதான் ஆலைக்குத் தேவையான மூலப்பொருட்கள் கிடைக்கும். எனவே ஆலை செயல்படும் போது எண்ணெய் வித்துக்கள் இணையத்தின் குழு பார்வையிட்ட பின்னர் அதன் முடிவினை அறிந்து, அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படும்.

எண்ணெய் ஆலையை இந்த ஆண்டில் முழு அளவில் செயல்படுத்தும் பொருட்டு திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போதைக்கு அதனைப் புதிய கூட்டுறவு நிறுவனமாக அமைப்பது குறித்த நடவடிக்கை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. ஆலையின் செயல்பாட்டுத் திறனைக் கண்காணித்து, பின்னர் தேவை எனில் புதிய நிறுவனமாக அமைப்பது குறித்து நடவடிக்கை தொடரப்படும்.

ஒண்டிப்புதூர் எண்ணெய் ஆலையை அதன் முழுத் திறனுக்குச் செயல்படுத்த திட்டம் வகுக்கப்பட்டு, அந்த ஆலை தற்போது சீராக இயங்கி வருகிறது. இந்த நிலையில் கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின் ஒரு பிரிவாக இயங்கும் அந்த எண்ணெய் ஆலையைத் தனியாகப் பிரித்து புதிய கூட்டுறவு அமைப்பு ஒன்றை நிறுவுவதற்கான தேவை ஏற்படவில்லை.

அ.சா.கு.எண் 50634/சிஎ1/91—6, நாள் : 26—6—92

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	சொருள்.
(1)	(2)	(3)	(4)
48	105/91	தமிழ்நாடு சட்டமன்ற பேரவை அ.சா.கு. எண். 23792, 91-1, (அ.கே.கு.) நாள் 9-2-1991.	கூட்டுறவுத்துறை மானியக்கொரிக்கையின் மீது அமைச்சரின் 14—9—1991-ஆம் தேதியு பதிலுரை.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்த நடவடிக்கை.
(5)	(6)
தஞ்சை மாவட்டத்தில் ஏற்பூர் என்ற ஊரில் நாள்தோறுக்கு 100 மெட்ரிக் டன் அரவை செய்யும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு வெகுவிரைவிலே நடைமுறைக்கு அது வர இருக்கிறது.	தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் தஞ்சை மாவட்டம் எருக்கூர் கிராமத்தில் நாள் ஒன்றுக்கு 100 மெட்ரிக் டன் அரவை செய்யும் ஆலை ஒன்று நிறுவப்பட்டு 23—8—1988 முதல் அது இயங்கி வருகிறது. மேலும் எருக்கூர் வளாகத்தில் 100 மெட்ரிக் டன் அரவை செய்யும் இரண்டாவது ஆலை ஒன்று நிறுவப்பட்டு அதில் கொதிகலன் மற்றும் அரவை பிரிவுகளில் இயந்திரங்கள் நிர்மானிக்கும் பணிகள் முடிவு பெற்று உள்ளன. தற்பொழுது இப்பிரிவில் பச்சை அரிசி ஏப்ரல் 1991 முதல் அரைக்கப்பட்டு வருகிறது. அவியல் பகுதியில் இயந்திரங்கள் பொருத்தும் பணி முடிவுற்றவுடன் புழுங்கல் அரிசி உற்பத்தி தொடங்கும். (தஞ்சை மாவட்டத்தில் எருக்கூரில் தான் அரவை ஆலை உள்ளது).

(அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 60775/ஏ1/91-8, நாள் : 4—11—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
49	51/92	உடுக்குறியிட்ட வினா எண். 4438, துணை வினா திரு. பா. சா. பழனிசாமி, எம்.எல்.ஏ., 10—2—1992.	திருப்பூரில் பனியன் தொழிலுக்கு நிலவள வங்கி கடன் கொடுக்கிறது. விவசாயத்தை சார்ந்த தொழில்களை துவக்குவதற்கு அதுவும் கிராமங்களிலேயே துவங்குவதற்கு நிலவள வங்கிகள் கடன் கொடுக்காமல் இருப்பதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்த நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திரு. ஜி. விஸ்வநாதன் : நடவடிக்கை எடுக்கப்படும்.	தமிழகத்தில் உள்ள 181 நிலவள வங்கிகள் பொதுவாக சிறு பாசனம் மற்றும் சிறுபாசனமில்லாத திட்டங்களுக்கு நாபார்டின் நெறிமுறைகளின்படி. நிர்ணயிக்கப்பட்டுள்ள கடன் வழங்கும் தகுதிக்குட்பட்டே கடன்களை வழங்கி வருகின்றன. ஆயினும், மேற்காண் வினாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல, கிராம கைவினைஞர்கள், கைத்தறித் தொழிலாளர்கள், கிராமக் குடிசை மற்றும் சிறு அளவுத் தொழில்கள் முதலியவற்றிற்கு கடன் வழங்கும் தகுதியைக் கணக்கில் கொள்ளாமலே பிரதம நிலவள வங்கிகள் புண்ணை சாராத் திட்டத்தின்கீழ் கடன்களை வழங்கி வருகின்றன.

தொழிலகுள் தொடங்குவதற்கான கடன் வசதி செய்து தரு வதற்கான நெறிமுறைகளை நாபார்டு நிர்ணயம் செய்து உள்ளது. பிரதம நிலவள வங்கிகளைப் பொறுத்த வரையில் நாபார்டினால் தெரிவிக்கப்பட்டுள்ள 22 வகையான தொழில் கட்கு கடன் வழங்கலாம். சட்டப் பேரவை வினாவில் கோரி யுள்ளபடியால் பண்ணை சாராத் இட்டத்தின்கீழ் விவசாயத் தைச் சார்ந்த தொழில்கள் தொடங்குவதற்கு அதுவும் கிராமங்களிலேயே தொடங்குவதற்கு நிலவள வங்கிகள் 1991—92-ம் ஆண்டில் (31—3—1992 வரை) 1247 நேர்வு களுக்குத் தொழில்கள் தொடங்குவதற்காக ரூ. 383.79 லட்சம் அளவிற்கு நீண்ட காலக் கடன்களை வழங்கியுள்ளன. விவசாயத்தைச் சேர்ந்த தொழில்கள் துவங்குவதற்கு அதுவும் கிராமங்களிலேயே துவங்குவதற்கு மட்டும் 1991—92-ம் ஆண்டில் (31—3—1992 வரை) நீண்டக் காலக் கடன்கள் 167 நபர்கட்கு ரூ. 47.22 லட்சம் வழங்கப்பட்டுள்ளது. இவ் வகையான தொழில்களுக்கு பிரதம நிலவள வங்கிகள் தொடர்ந்து கடன்கள் வழங்க இயலும் என்றும் தெரிவித் துள்ளார்.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை,	பொருள்.
(1)	(2)	(3)	(4)
59	235/92	உடுக்குறியிட்ட வினா எண் 7935, நாள் வினா திரு. ஏ. ஞானசேகரன், எம்.எல்.ஏ., 1—4—1992.	நெசவு கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள போலி உறுப்பினர்களை நீக்க இப்போதே ஒரு அரசு ஆணைப் பிறப்பித்து, அந்த போலி உறுப்பினர்களை உடனடியாக நீக்குவதற்கு உத்தர விடுவாரா என்பது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு (அமைச்சர்) : திரு. ஜி. விசுவநாதன் : சட் டத் திருத்தத்தின் மூலம் செய்ய இருக்கிறோம்.	இது குறித்து சட்டத் திருத்தம் 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனிவகை முறை கள்) சட்டமாக (தமிழ்நாடு சட்ட எண் 19 92) பிரகடனப் படுத்தப்பட்டு, தமிழ்நாடு அரசு அரசிதழில் 11—5—1992 அன்று வெளியிடப்பட்டது. (சட்ட நகல் இணைக்கப்படுகிறது.

[கூ.உ.(ம) நு.ப.பா. துறையின் அ.சா.கு. எண் 33274/சி.கு.1/92-1, நாள் : 21—9—1992.]

The following Act of the Tamil Nadu Legislative Assembly received the assent of the Governor on the 8th May 1992 and is hereby published for general informations :—

ACT No. 19 of 1992.

An Act further to amend the Tamil Nadu Co-operative Societies Act, 1988.

Be it enacted by the Legislative Assembly of the State of Tamil Nadu in the Forty-third Year of the Republic of India as follows :—

1. *Short title and commencement.*—(1) This Act may be called the Tamil Nadu Co-operative Societies (Amendment and Special Provisions) Act, 1992.

(2) It shall come into force at once.

2. *Amendment of section* 23.—In section 23 of the Tamil Nadu Co-operative Societies Act, 1983 (Tamil Nadu Act 30 of 1983) (hereinafter referred to as the principal Act).—

(i) in sub-section (1)—

(*a*) in clause (*g*), the word "or" shall be added at the end ;

(*b*) after clause (*g*), the following clause shall be added, namely:

"(*h*) does not possess the qualification, with reference to the principal object of the society prescribed in the rules or the by-laws.";

(2) in sub-section (2),—

(*a*) in the proviso to clause (*f*), the word "or" shall be added at the end ;

(*b*) after clsrse (*f*), the following clause shall be added, namely :—

"(*g*) does not possess the qualification, with reference to the principal object of the society, prescribed in the rules or the by-laws."

3. *Amendment of section* 33. In section 33 of the principal Act,—

(1) in sub-section (1), in clause (*a*) for the first and second provisos, the following provisos shall be substituted, namely :—

Tribes and if the representatives of women or Scheduled Castes and Scheduled Tribes are not, elected to that extent, then, the elected members of the board shall, at the first meeting of the board after the election, co-opt to the board, from among the members of the registered society the representatives of woman or Scheduled Castes and Scheduled Tribes, as the case may be in accordance with such procedure as may be prescribed, and, notwithstanding anything contained in sub-section (3), the number of members of the board shall stand increased by such number as is co-opted under this proviso :

Provided further that among the members elected to the board of every weavers society, there shall be thirty per cent representation for women and if the representatives of women are not elected to that extent, then, the elected members of the board shall, at the first meeting of the board after the election, co-opt to the board, from among the members of such society, the representatives of women, in accordance with such procedure as may be prescribed, and, notwithstanding anything contained in sub-section (3), the number of members of the board of such society shall stand increased by such number as is co-opted under this proviso " ;

(2) in sub-section (2), or the proviso, the following proviso shall be substituted, namely:—

" Provided that in the case of scheduled co-operative societies in which the majority of members are individuals, among the members elected to this board of every such scheduled co-operative society as may be prescribed, there shall be thirty per cent representation for women and women and eighteen per cent representation for Scheduled Castes and Scheduled Tribes and the representatives of women or Scheduled Castes and Scheduled Tribes are not elected to that extent, then, elected members of the board shall, at the first meeting of the board after the

the election, co-opt to the board, from among the members if available, of the scheduled co-operative society, and if nor so available, from among the members of the societies—

(i) affiliated the scheduled co-operative society, or

(ii) affiliated to the societies which are affiliated to the scheduled co-operative society

the representatives of women and Scheduled Castes and Scheduled Tribes, as the case may be and, notwithstanding anything contained in sub-section (3), the number of members of the board shall stand increased by such number as is co-opted under this proviso,"

(3) in sub-section (3),—

(*a*) in clause (*b*), for the expression, "not less than nine and not more than twenty-five members", the expression "not less than eleven and not more than twenty-seven members" shall be substituted :

(*b*) in clause (*c*), for the expression "not more than fifteen members", the expression "not more than seventeen members" shall be substituted :

(4) in sub-section (4), in clause (*b*), in sub-clause (i), for the proviso, the following proviso shall be subsituted, namely ;—

"Provided that amog the members elected to te board of such od the societies referred to in clause (*a*) as may be prescribed, there shall be thirty penr cet representation for women and eighteen per cent representation for Scheduled Castes and Scheduled Tribes and if the representation of women or Scheduled Castes and Scheduled Tribes are not elected to that extent, then, the elected members of the board shall, at the first meeting of the board after the election, co-opt to the board, from among the members of the registered society, the represetatives of women or Scheduled Castes and Scheduled Tribes, as the case may be, in accordance with such proceaure as may be prescribed, and, notwithstanding anything cotained in sub-section (3), te numebr of members of the board shall stand increased by such number as is co-opted under this proviso,",

(5) in sub-section (10), after clause (*a*) the following clause shall be inserted ame ly I

"(*aa*) Every co-opted member of the board shall hold office only for such period for which such member would have been entitled to hold office if such member had been elected to We board,":

(6) after sub-section (16), the following sub-section shall be added, namely I—

"(17) Every co-opted member of the board shall have all the rights, powers, and privileges of an elected member of the board,":

4. *Instruction.*—After section 36 of the principal Act, the following sectiom shall be insterted, namely ;—

"36A. *Qualifications an Isqualifications fo co-option of members to board.*— Notwithstanding anything contained in this Act, the provisions relating to the qualifications and disqualifications of the members ogf the board elected under this Act shall, as far as may be, apply in relation to the members co-opted to the board under sub-sections (1), (2) and (4) of sections 33, as they apply to the members elected to the board ":

5. *Amendment of section* 174.—In section 174 of the principal Act, in clause (*b*), after the words "in the election", the words "or co-option" shall be inserted.

6. *Amendment of section* 180.—In sub-section (2) of section 180 of the principal Act,—

(1) in clause (i), after the words "for the election", the word "co-option" shall be inserted.

(2) in clause (j), after the words "from electing", the words "or co-optiing" shall be insterted.

7. *Term of office of members of certain primary societies to expire.*—(1) Notwithstanding anything contained in the principal Act or the rules made thereunder, or in any other law for the time being in force, or in any judgment, decree or order of any court, tribunal or other authority, the term of office of every member, including the president and vice-president (whether elected or nominated), of the board of every primary society to which elections were held under the principa

Act on or after the 1st day of Uanuary 1111 and before the date of the publication of this Act in the *Tamil Na u Government Gazette*, holdding office as such immediately before the date of such publication shall expire on the date of the publicatio of this Act in the *Tamil Nadu Government Gazette* and such member shall vacate his office on and from the date of publication.

(2) (*a*) Notwithstanding anything contained in the principal Act, or in any other law for the time being in force, or in any decree or order of any court, tribunal or other authority, on and from the date of the publication of this Act in the *Tamli Nau Goverrment Ga ette*, the Government shall appoint a person as Special Officer to manage the affairs of any primary society referred to in sub-section (1).

(*b*) Northing in this sub-section shall preevent the appointmen of the same person as Spec'al Officer for two or more primary societies.

(3) The provisions of the Tamil Nauu Co-operative Societies(Appointment of Special Officers) Act, 1991 (Tamil Nauu Act 30 of 1991). shall, as far as may be, apply to the Special Officers appointed under sub-section (2) as they apply to the Special Officers appointed under he said Tamil Nauu Act 30 of 1991.

(By order of the Governor).

MD. ISMAIL,
Secretary to Government, Law Department.

TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
51	296/92	கூட்டுறவு மற்றும் நுகர்வு பொருள்கள் வழங்குதல் பற்றிய மானியய் கோரிக்கையின்மீது அமைச்சரின் பதிலுரை. 8—4—1992.	கூட்டுறவு சிறப்பு அம்சங்களை எடுத்துச் சொல்லுகின்ற விளம்பரம் குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : '' கூட்டுறவின் சிறப்பு அம்சங்களை ஆண்டு முழுவதும் எடுத்துச் சொல்லுகின்ற விளக்கத் திரைப்படம் தயாரிக்கப்படும். இதற்குத் தேவையான விளம்பரச் சாதனங்களும் அவற்றிற்கு அளிக்கப்படும் ''.	தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவு பிரச்சாரத்திற்கென 'கூட்டுறவு', 'சித்தாள் செங்கமலம்', 'இப்பத்தான் புரியுதுங்க', 'நமது கடன்' என்ற 4 திரைப்படங்களை கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தயாரித்தது. இத்துடன் இந்திய அரசு திரைப்பட பிரிவினர் தயாரித்துள்ள கூட்டுறவு பற்றிய திரைப்படங்களும், பிறபடங்களும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றிய பிரச்சாரப் பிரிவின் மூலம் உறுப்பினர் கல்வி வகுப்புகளில் காட்டப்பட்டு வருகிறது. கூட்டுறவு இயக்கத்தின் பல்வேறு செயல்முறைகளையும் ஒருங்கே விளக்கும் வகையில் அனைத்து செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் கூட்டுறவு நிறுவனங்களின் பணிகளை விளக்கும் பொருட்டு கதையம்சத்துடன் கூடிய வண்ணத்திரைப்படம் 60 நிமிட அளவிற்கு தயாரிக்க தமிழ்நாடு திரைப்படப் பிரிவினர் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. இதற்கான சிறந்த கதை வசனம் மற்றும் பாடல்களைக் கோரி 16—7—1992 அன்று தினத்தந்தியில் ஓர் விளம்பரமும் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்படும் சிறந்த கதை வசனத்திற்கு ரூ. 10,000 பரிசும் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேர்வு செய்யப்பட்ட கதை வசனத்தை தமிழ்நாடு திரைப்பட பிரிவினரின் மூலம் முன்னணி திரைப்படக் கலைஞர்கள் பங்கேற்குமாறு செய்து படமெடுத்து, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் பிரச்சார வாரிகள் மூலம் கிராமங்கள் தோறும் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கும் பொதுமக்களுக்கும் காண்பிக்கப்படும். இந்தப் படத்தினை பொது மக்கள் அனைவரும் பார்த்து பயன்பெறும் வகையில் தமிழகத்திலுள்ள அனைத்து திரையரங்குகளிலும் காட்டவும் 20 நிமிட அளவில் பிரதிகள் எடுக்கவும் ஏற்பாடு செய்யப்படும். இந்தப் படத்தை ஒளிப்பேழையில் பதிவு செய்து தமிழக அரசு திரைப்பட பிரிவின் மூலம் கிராமங்களில் சமூகக் கூடங்களிலும் காட்ட ஏற்பாடு செய்யப்படும். புதியதாக தோன்றியுள்ள மாவட்டங்களுக்கும் கூட்டுறவு உதவி வளர்ச்சி அலுவலர் அல்லது கல்வி பயிற்றுநர் நியமிக்கப்பட்டு அவர்கள் மூலம் இந்தப் பிரச்சாரப்பணி மிகவும் சிறப்பாக நடக்கத் தேவையான வாரிகள் திரைப்படக் கருவிகள் வாங்கித் தர ஏற்பாடு செய்யப்படுகிறது.

இந்த ஒளிப்பேழையைத் தற்போது வடாற்காடு மாவட்டத்தில் உள்ள தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் வீடியோ பிரச்சார வாரி மூலம் காட்டப்படும்.

கிராமங்களில் நடத்தப்படும் உறுப்பினர் கல்வித் திட்டத்திற்கு எல்லாத் துறை அலுவலர்களும் அழைக்கப்பட்டு கூட்டுறவு மற்றும் கூட்டுறவு சார்ந்த பொருள் பற்றியும் அரசின் திட்டங்கள் பற்றியும் விளக்கம் அளிக்கப்படுகிறது. இதனால் சங்க உறுப்பினர்களுக்கு கூட்டுறவு பற்றிய ஓர் விழிப்புணர்வும், ஈடுபாடும் ஏற்படுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் தயாரிக்க இருக்கும் புதிய ஒளிப்படம் சங்க உறுப்பினர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் புதிய விழிப் புணர்வினை பெறத்தூண்டும் வகையில் அமையும்.

[கூ. உ. (ம) நு. பா. துறையின் அ.சா.கு. எண். 33754/கே. 2/92-4, நாள் : 15—9—1992.]

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
52	324/92	உடுக்குறியிட்ட வினா 4085, செல்வி கோ. மல்லிகா, எம்.எல்.ஏ., 10—4—1992.	புவனகிரி தொகுதியில் உள்ள புதுக்குப்பத்தில் நியாயவிலைக் கடை அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு திரு. ஜீ. விசுவநாதன் :

பரிசீலனை செய்யப்படும்.

தற்பொழுது புதுப்பேட்டை கிராமத்தில் புதுக்குப்பம், கரிக்குப்பம், காலனி, தேசப்பிருப்பு, தைக்கால், குட்டியாண்டவர் கோயில் மற்றும் பஞ்சங்குப்பம் கிராமங்களிலுள்ள 482 குடும்ப அட்டைகளுக்கு ஒரு நியாய விலை கடையுள்ளது. புதுப்பேட்டை நியாய விலை கடைக்கும், இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைதாரர்களின் குடியிருப்புக்கும் இடையே 3 கி.மீ. தூரம் ஆகும். மேலும், ஒரு நியாயவிலைக்கடைக்கு குறைந்த பட்சம் 400 குடும்ப அட்டைகளும் அதிகபட்சம் 800 குடும்ப அட்டைகளும் இணைக்கப்பட்டால்தான் புதிய நியாயவிலைக்கடை துவங்க இயலும். புதுக்குப்பம் கிராமத்தில் 200 குடும்ப அட்டைதாரர்களே உள்ளதாலும், தற்பொழுதுள்ள புதுப்பேட்டை நியாயவிலைக்கடையில் 482 குடும்ப அட்டைகளே இணைக்கப்பட்டுள்ளதாலும் புதுக்குப்பம் கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை துவக்க வழிவகையில்லை.

[கூ. உ. (ம) நு.பா. துறையின் அ.சா.கு. எண் 33876/எப்-1192-2, நாள் : 21—9—1992.]

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	கைத்தறி, கைவினைப் பொருட்கள், துணிநூல் மற்றும் கதர் துறை. பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
53	190/91	கைத்தறி மற்றும் துணித் தொழில் குறித்த மானியக் கோரிக்கை மீது அமைச்சரின் பதில் 20—9—1991.	நெசவாளர்களுக்கு மருத்துவ முகாம்கள் அமைப்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

(6)

ஈரோடு, ஆரணி, காஞ்சிபுரம் போன்ற அதிக நெசவாளர்கள் வாழ்கிற பகுதிகளில் மருத்துவ முகாம்களை அமைத்து அவர்களுக்கு சிகிச்சை தரவேண்டும் என்று புரட்சித் தலைவி அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

பெரியார் மாவட்டத்தில் நெசவாளர்கள் அதிகம் வாழும் பகுதியான, நாண்டம்பாளையம் பகுதியில் இலவச கண் மருத்துவ முகாம் 29—6—1991-ல் தனிப்பட்ட நிறுவனங்கள் மூலம் நடத்தப்பட்டு அதில் 318 கைத்தறி நெசவாளர்கள் பயன்பெற்றனர். மேலும் சென்னிமலை போன்ற பகுதியில் விரைவில் மருத்துவ முகாம்கள் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

காஞ்சிபுரம் கோட்டத்தில் 29—2—1992 முதல் 5—3—1992 வரை இலவச கண் சிகிச்சை முகாம், கோட்ட வளர்ச்சி அலுவலர் உதவியுடன் நடைபெற்றது. காஞ்சிபுரம் மற்றும் வாலாஜாபாத் ஒன்றியத்திலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்க மற்றும் பருத்தி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களைக் கொண்ட 15 நெசவாளர் கூட்டுறவு சங்கத்தினைச் சார்ந்த 169 உறுப்பினர்கள் கண் சிகிச்சை முகாமில் பயன் பெற்றனர்.

வேலூர் சரகத்தைச் சார்ந்த ஆரணி பகுதியில் விரைவில் மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது. மேலும் வட ஆற்காடு அம்பேத்கார் கோட்டத்திலுள்ள குடியாத்தம் பகுதியில் கடந்த 4—12—1991-ல் குடியாத்தம் பொது மருத்துவமனை மருத்துவ அதிகாரிகள் கொண்ட குழு (நான்கு மருத்துவர்கள், நான்கு செவிலியர் மற்றும் ஒரு மருந்தாளுநர்) கண் சிகிச்சை மற்றும் இதர நலப்பணிகள் மேற்கொண்டதில் 23 கைத்தறி நேசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் பயன் பெற்றனர்.

கண் சிகிச்சை தொடர்பாக 566 நபர்களைப் பரிசீலித்ததில், 276 பேருக்கு கண்சிகிச்சையையும், பொது மருத்துவம் 200 பேர்களுக்கும் பார்க்கப்பட்டு, மருந்துமான வழங்கப்பட்டன. 90 நபர்களுக்கு பல் மற்றும் தோல் சம்பந்தமான வியாதிகளை ஆய்வு செய்து, உரிய மருத்துவ நலக்குறிப்புரைகள் வழங்கப்பட்டது.

மேலும் காமராஜர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டையில் 30—6—91ல் மேற்கொண்ட முகாமின்போது 1107 பேர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டதில், 83 பேர்களுக்கு எக்ஸ்ரே பரிசோதனை மேற்கொண்டும், 60 நபர்களுக்கு மூக்கு கண்ணாடி வழங்கவும் 47 நபர்

களுக்கு கண் அறுவை சிகிச்சைக்கும் பரிந்துரைக்கப்பட்டதில். உறுப்பினர்களுக்கு ரூ. 6,135 செலவில் கண்ணாடி வழங்கப்பட்டது. மீதமுள்ளவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும் கண் அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள் மதுரை அரசினர் கண் மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்துகொள்வதாக தெரிவித்துள்ளார்கள்.

மேலும் 31—12—1991-ல் திருச்சி தலைமையக அரசு மருத்துவமனையில், நெசவாளர்களுக்காக, பிரத்தியேகமாக கண் சிகிச்சை முகாம் நடத்தியதில் 57 ஆண்களும், 53 பெண்களும் பலன் பெற்றனர்.

மதுரை மாவட்டத்தில் ஆண்டிப்பட்டி செக்கம்பட்டியில் 22—1—1992-ல் நடைபெற்ற கண் மருத்துவ முகாமில் 68 பெண்களும், 45 ஆண்களும் கண்ணாடி அணிய அறிவுறுத்தப்பட்டது. 5 பெண்களும், 5 ஆண்களும் கண் அறுவை சிகிச்சைக்கு பரிந்துரை செய்யப்பட்டது.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள கும்பகோணம் வட்டத்தில் 20—12—1991 அன்று நடைபெற்ற கண்சிகிச்சை முகாமில் 27 நபர்கள் கண்சிகிச்சை பெற்றனர்.

(கை. கை. து. (ப) கதர்துறையின் அ.சா.கு. எண். 17973/டி1/91-6, நாள் : 14—8—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
54	193/91	கைத்தறி மற்றும் துணித்தொழில் குறித்த மானியக் கோரிக்கை மீது அமைச்சரின் பதில். 20—9—1991.	லுங்கிகள் ஏற்றுமதி செய்வது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :

அம்பேத்கார் மாவட்டத்திலே குடியாத்தம் பகுதியில் நெசவுத்தரம் உள்ள லுங்கிகளை உற்பத்தி செய்து அவைகளை வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற திட்டத்தை இந்த துறை முடிவு எடுத்திருக்கிறது.

குடியாத்தம் பகுதியில் உற்பத்தி செய்யப்படும் லுங்கிகளுக்கு நல்ல வரவேற்பு இருப்பினும், தேவைக்கும், மற்றும் ஏற்றுமதிக்கும் ஏற்ற அளவிற்கு தரமுடைய லுங்கிகள் உற்பத்தியாவதில்லை. இதனால் பிற்கேற்ற ஊதியமின்றி வறுமையில் உழல்கின்றனர். பழமையான தறிகளை நவீனப்படுத்தவும், பாவு தோய்த்தல் மற்றும் சாயமிடுதல் ஆகியவற்றின் தற்கால யுக்திகளை புகுத்தி அதன் வாயிலாக ஏற்றுமதிக்கு ஏற்ற தரமான லுங்கிகளை உற்பத்தி செய்யவும், தறிகளின் உற்பத்தியினை அதிகரித்து அதன்மூலம் நெசவாளர்களின் வருவாயைப் பெருக்கும் முகத்தான் இப்பகுதிக்கென " ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டம் " தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்

கொள்கை விளக்கத்திற்கிற்கென முதலில் வேலூர் மாவட்ட கூட்டுறவு வங்கி, சேலம், தருமபுரி மற்றும் வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளின் ஆட்சியர்கள் மற்றும் குடியாத்தம் பகுதி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தனி அலுவலர்கள் உள்ளடக்கிய ஒருங்கிணைப்பு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் நிதி தேவை மற்றும் நூல் தேவை மற்றும் இதர பிரச்சினைகள் குறித்து விவாதித்து செயல் திட்டம் வரையப்பட்டது. இத்திட்ட செயல்பாட்டிற்கு வேலூர் மாவட்ட கூட்டுறவு வங்கி மூலம் நிதி வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதைப்போன்றே ஒரே சீரான தரமான நூலினை இயன்றவரையில் ஒரே சீரான விலையில் அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் தேவைக்கேற்ப நூல் வழங்க, சேலம், தர்மபுரி மற்றும் வட ஆற்காடு மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அனைத்து சங்கங்களுக்கும் தேவையான வகை நூல், தேவையான அளவிற்கு கிடைக்கும்.

நீண்ட காலமாக பின்பற்றப்பட்டு வரும் பாவு தோய்த்தல் மற்றும் சாயமிடும் பணிகளில் நவீன யுக்திகளை கையாளலாம் என்பதை கண்டறிவதற்கென வல்லுநர்களின் அறிக்கை கோரப்பட்டதில் (தென் இந்திய துணிநூல் ஆராய்ச்சிக் கழகம் மற்றும் தேசிய கைத்தறி அபிவிருத்திக் கழகம்) (South India Textile Research Association and National Handloom Development Corporation), பாவு தோய்த்தலில், எவ்வகை மாற்றம் செய்யப்படலாம் என அறிக்கை கொடுத்துள்ளது. சாயமிடுதல் குறித்து இன்னும் அறிக்கை பெறப்படவில்லை. இது குறித்து அறிக்கையினை விரைந்தனுப்ப ''தேசிய கைத்தறி அபிவிருத்தி கழகம்'' கோரப்பட்டுள்ளது.

ஆகையால், அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும், ஏற்று மதிக்குகந்த தரம் வாய்ந்த லுங்கி இரகங்களின் உற்பத்தியினை விரைவில் துவக்க உள்ளது என்பதனையும் இத்திட்ட முன்னேற்றம் பகுதி அளவில் ஒரு அரசு அலுவலராலும் இயக்கக அளவில் ஒரு ஒருங்கிணைப்பாளராலும் நிரந்தரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

(அ.சா.கு. எண். 17972/டி.1/91-5, நாள் : 15—6—1992).

தமிழ்நாடு TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
55	196/91	கைத்தறி மற்றும் துணித் தொழில் மானியக் கோரிக்கையின் மீது, அமைச்சரின் பதில், 20—9—1991.	பார்கூர் திருநகரத்தில் புதிய நூற்பாலை உருவாக்குவது குறித்து.

உறுதிமொழியின் விவரம்	அரசு எடுத்த நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் : பார்கூர் திருநகரத்தில் 22.47 கோடி ரூபாய் செலவில் ஒரு நூற்பாலை உருவாக்க வேண்டுமென்ற திட்டத்தை வகுத்திருக்கிறோம்.	1991-92 வரவு-செலவுத் திட்ட அறிக்கை (கைத்தறி மான்ய கோரிக்கை) கூட்டப்பேரவையில் சமர்ப்பித்து பேசுகையில், மாண்புமிகு முதல்வர் அவர்கள், தருமபுரி மாவட்டம், பார்கூரில் 25,000 நூற்புக்கதிர்களுடன் கூட்டுறவு நூற்பாலை ஒன்று துவங்கப்படும் என்றும் அதற்கு அன்னை சத்தியா கூட்டுறவு நூற்பாலை என்று பெயரிடப்படும் என்றும் அறிவித்தார். இது குறித்து, கைத்தறி மற்றும் துணி நூல் இயக்குநர், 1992-93 ஆம் ஆண்டு 'பகுதி இரண்டு' திட்டத்தில் சேர்க்கலாம் எனவும், இவ்வாலையினை அமைக்க மொத்தம் ரூ. 22 கோடி செலவாகும் எனவும், முதல் கட்டமாக ரூ. 248 லட்சம் ஒப்பளிப்பு செய்யவும் அரசினை கேட்டுக்கொண்டார். பார்கூரில் நூற்பாலை அமைக்கும் திட்டம் 1992-93 'பகுதி இரண்டு' திட்டத்தில் சேர்க்கப்பட்டு நிதிநிலைக் குழுவின் ஒப்புதலும் பெற்றுள்ளது. நிதிநிலைக்குழு, இத்திட்டத்திற்கென 1992-93 ஆம் ஆண்டில், ரூ. 50 இலட்சம் ஒதுக்க ஒப்புக்கொண்டுள்ளது. இந்த தொகையினை, ஒப்பளிப்பு செய்ய தாரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்கூட்டுறவு நூற்பாலைக்கு 'அன்னை சத்தியா கூட்டுறவு நூற்பாலை' என்று பெயரிடப்பட்டுள்ளது. ஆலை அமைப்பதற்காக, திருவண்ணாமலை மாவட்டம், கொண்டப்ப நாயக்கன்பள்ளி கிராமத்தில் 10.5 ஏக்கர் நிலம் மாவட்ட ஆட்சியாளரிடம் கேட்கப்பட்டுள்ளது. இது குறித்து, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர், அந்நிலத்தினை மாற்றம் செய்ய, மாவட்ட ஆட்சியாளரிடம் விண்ணப்பித்துள்ளார். அந்நிலம் விரைவில் கிடைத்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்நிலம் கிடைத்தவுடன் ஆலை அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

[கை. கை, து(ம). கதர் துறையின் அ.சா.கு. எண். 17953/கி-1/91, நாள்: 19—5—1992.[

52

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
56	77/92	உடுக்குறியிட்ட வினா எண் 1058, துணை வினா, டாக்டர் வெ. புருஷோத்தமன், எம்.ஏல்.ஏ., 11—3—1992.	ஓசியரி நூல்கள் 25 ஆயிரம் கதிர்கள் கொண்ட கூட்டுறவு நூற்பாலையை தமிழ்நாட்டிலேயே முதலாவதாக தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் தொகுதியில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் :

அன்னை சந்தியா அவர்கள் பெயரால் பார்கூரில் முழுமையாக பெண்களையே கொண்ட ஒரு நூற்பாலையை உருவாக்க இருக்கிறோம்.

தர்மபுரி மாவட்டம், பார்கூரில் 2,500 நூற்புக் கதிர்களுடன் கூட்டுறவு நூற்பாலை ஒன்று, ரூ. 22 கோடி முதலீட்டுடன், தொடங்கப்பட வுள்ளது. 1992-93ல் இதற்கு ரூ. 50 லட்சம் ஒப்பளிப்பு செய்யப் படும். இந்த நூற்பாலை அமைப்பதற்காக திருவண்ணகிரி தாலுகா, கொண்டப்ப நாயக்கன்பள்ளி கிராமத்தில், 10.5 ஹெக்டேர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலத்தை ஒதுக்கீடு செய்யுமாறு, மாவட்ட ஆட்சியரிடம், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் மனு சமர்ப்பித்துள்ளார். இந்நூற்பாலை அமைப்பதற்கு நிதியுதவி குறித்து, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், ஜூன் திங்களில் முடிவு செய்யுமென்றும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் கூறியுள்ளார்.

இந்நூற்பாலை பெண் தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்காகவே துவக்கப்பட்டுள்ளது.

இந்நூற்பாலைக்கு, 'அன்னை சந்தியா' கூட்டுறவு நூற்பாலை என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதற்கு ரூ. 248 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்படவுள்ளது.

(கை. கை, து (ம) கதர் துறையின் அ.சா.ரு. எண் 6553/சி1/92-2, நாள் : 11—6—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
57	86/92	உடுக்குறியிட்ட வினா எண் 1136, துணை வினா, திரு. ஏ. தேவராஜ் எம்.எல்.ஏ., 12—3—1992.	கைத்தறி நெசவுத் தொழில் நசிந்து கொண்டிருப்பதால் ரிபேட் தொகையை உடனே கொடுக்கவும், கோ-ஆப்டெக்ஸ் வாங்கிய துணி களுக்கு உடனே கிரயத்தொகை கொடுக்கவும், நூலை காசு கொடுக் காமல் வாங்கவும், ஏற்பாடு செய்யப்படுமா என்பது குறித்து.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்

கூட்டுறவில் அங்கத்தினர்களாக இருப்பவர்களுக்கு கூட்டுறவின் கீழ் இருக்கின்ற அனைத்து சலுகைகளும் தரப்படும்.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில், உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு கீழ்க்கண்டவாறு சலுகைகள் வழங்கப்படுகின்றன.

1. கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்வதற்கு அவர்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையில் 90 விழுக்காடு, அரசால் கடனாக வழங்கப்படுகிறது.

2. கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நெசவாளர்களுக்கு தொடர்ந்து தொழில் அளிப்பதற்கு வசதியாக, சலுகை அடிப்படையில் நடைமுறை மூலதனம் வழங்கப்படுகிறது. இவ்வாறு சலுகை அடிப்படையில் மூலதனக்கடன் வழங்குவதால், கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்பினை ஈடுகட்டுவதற்காக மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 3 சதவீதமும் தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கு 1 சதவீதமும் வட்டி மானியமாக அரசு வழங்குகிறது.

3. கூட்டுறவுச் சங்கங்களில், உறுப்பினர்களாக உள்ள நெசவாளர்களுக்கு தொடர்ந்து தொழில் வழங்குவதற்காக தமிழ்நாட்டில் உள்ள 18 கூட்டுறவு நூற்பாலைகளில் உற்பத்தியாகும் நூலில் சுமார் 80,000 பேல்கள் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு விநியோகிக்கப்படுகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை நூல் தட்டுப்பாடு ஏதும் இல்லை.

4. கூட்டுறவு அமைப்புகளால் நெய்யப்படும் கைத்தறித் துணிகளின் தேக்கத்தைத் தவிர்ப்பதற்காக, ஒரு வருடத்தில் குறிப்பிட்ட நூறு நாட்களில் விற்கப்படும் துணி, விற்பனையின் மீது 20 சதவீதம் தள்ளுபடி மானியம் அரசு அளித்து வருகிறது. இதன் காரணமாக விற்பனை அளவு பெருகுவதோடன்றி, நெசவாளர்கள் தொடர்ந்த வேலையும், வருமானமும் பெற இயலுகிறது. இத்திட்டத்திற்கென 1992-93-ம் ஆண்டிற்கு ரூ. 42.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

5. கூட்டுறவின்கீழ் உள்ள கைத்தறிகளின் திறன், தரம் இவற்றை அதிகரிக்கவும், நெசவாளர்களின் சேர்வை அகற்றவும், கூட்டுறவில் அங்கத்தினர்களாக உள்ள நெசவாளர்களுக்கு தறிகளை நவீனப்படுத்தும் திட்டத்தை அரசு செயல்படுத்துகிறது. இதற்கென, ஐந்து ஆண்டுகளில் ரூ. 42.30 கோடி செலவில் 50,000 கைத்தறிகளை நவீனமயமாக்கும் மாபெரும் திட்டத்தினை அரசு நீட்டியுள்ளது. இதன்படி 1992-93-ல் 5,000 தறிகள் நவீனப்படுத்தப்பட உள்ளன.

மேற்கண்ட, திட்டங்கள் மூலம் பெறப்படும் சலுகைகள் தவிர, நெசவாளர்களின் நலனுக்கென அரசு மேற்கண்ட நல்வாழ்வுத் திட்டங்களையும் செயல்படுத்துகிறது.

4. கூட்டுறவில் உள்ள நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, மேற்படி உறுப்பினர்கள் இறக்க

நேரிட்டால், அவர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ. 15,000 காப்பீட்டுத் தொகை வழங்கப்படுகிறது.

2. மேற்படித் திட்டத்தில் உள்ள கூட்டுறவு நெசவாளர்கள், இறக்க நேரிட்டால் அவரது வாரிசுதாரருக்கு மாதம் ரூ. 250 வீதம் 10 ஆண்டுகள் ஒய்வூதியம், வழங்கும் புரட்சிகரமான திட்டத்தினை அரசு 1—1—1992 முதல் தொடங்கியுள்ளது.

3. வீடின்றி வாழும், ஏழை நெசவாளர்களுக்காக தொழிற்கூடத்துடன் இணைந்த வீடுகள், அரசு மான்யம் மற்றும் ''ஹட்கோ'' கடனுடன் கட்டப்படுகிறது.

மேற்கண்ட, அனைத்து சலுகைகளும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்தினர்களாக தொடர்ந்து தொழில் புரிகிற அனைத்து நெசவாளர்களுக்கும் வழங்கப்படுகிறது.

(கை. கை. து. (ம) சுதர் துறையின் அ.சா.கு. எண். 6564/டி1/92-3, நாள் : 10—8—1992.)

வினை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை	பொருள் .
(1)	(2)	(3)	(4)
58	287/92	கைத்தறியும், துணித் தொழிலும் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது, பதிலுக்கு திரு. கே. சுந்தரசாமி, எம். எல். ஏ. 7—4—1992.	சேலம்-அமமாப்பேட்டை நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தில் உள்ள ஊழியர்களுக்கு சம்பளம் கூட கொடுக்க முடியாமல் நிலைமை உள்ளன. ஆகவே அரசு இதை உடனடியாக கொடுக்க முன்வருமா.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	நாள்தோறும் இச்சங்க உறுப்பினர்களுக்கு கூலி வழங்கப்பட்டு வருகிறது. நாளது தேதி வரை வழங்கவேண்டிய கூலி எதுவும் நிலுவையில் இல்லை. இச்சங்கத்தில் 105 பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். சங்கப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் முறையாக சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. சங்கப் பணியாளர்களுக்கு ஊதிய பாக்கி ஏதுமில்லை.

(கை. கை. து. (ம) சுதர் துறையின் அ.சா.கு.எண். 10643/டி1/91-4, நாள் : 10—8—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(6)
59	289/82	உடுக்குறியிட்ட வினா 5432, துணை வினா திரு. மா. சின்னசாமி, எம்.எல்.ஏ., 8—4—1992.	ஜனதா ரக சேலை என்ற அந்தப் பெயரை மாற்றி வேறு பெயர் வைக்கப்படுமா ?

உறுதிமொழியின் விவரம்.
(5)

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன் பரிசீலிக்கப்படும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)

ஜனதா துணி மைய அரசு, நாடு முழுவதற்கும், மான்ய அடிப்படையில், சப்ளை செய்வதால், நமது மாநிலத்தில் தனியாக பெயர் வைக்க முடியாது என்றும், மேலும், இன்னும் சில ஆண்டுகளில், இதன் உற்பத்தியே நிறுத்தப்பட இருப்பதால், இதைப்பற்றி மைய அரசுக்கு எழுத வேண்டியதில்லை என்றும் கருதப்படுகிறது.

(கை. ங்க. து (ம) கதர் துறையின் அ.சா.கு. எண். 10644/டி2/92-3, நாள் : 9—11—1992.)

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
60	363/90	உடுக்குறியிட்ட வினா எண். 4994, துணை வினா திரு. ர.வி. அருணன், எம்.எல்.ஏ., 19—4—90.	திருநெல்வேலி— கட்டபொம்மன் மாவட்டத்தில் அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லம் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.
(5)

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் இந்த மாவட்டத்தில் அரசு ஆதரவு அற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லம் அமைக்க வேண்டும் என்ற சமூக நல இயக்குநர் அவர்களின் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)

இதுவரை அந்த இல்லத்துக்கு தேவை ஏற்படவில்லை. அடுத்த ஆண்டு பரிசீலனைக்கு புதிய திட்டமாக மேற்கொள்ளப்படும்.

உறுதிமொழிக் குழுவின் குறிப்பு.
(7)

குழந்தைகள் பராமரிப்புஇல்லம் கட்டுவதற்கான திட்டம் இவ்வாண்டு எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளதா என்பது குறித்து அறிய குழு விரும்புகிறது.

மேலும் துறையிடமிருந்து வந்த பதில்.
(8)

நெல்லைக் கட்டப்பொம்மன் மாவட்டத்தில் 100 குழந்தைகள் கொண்ட ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லம் ஒன்று துவக்க அரசாணை எண். 531 [சந(ம) ச.தி. துறை], நாள் 16—12—91-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது

ச.ந.(ம)ச.தி. துறையின் அ.சா.கு. எண் 26804/ச.ந. 5/92-1 நாள் 19—6—92.

வரிசை எண். (1)	உறுதி மொழி எண். (2)	பார்வை. (3)	பொருள். (4)
61	198/91	சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டம் மானியக் கோரிக்கை மீது அமைச்சரின் பதிலுரை 20—9—1991.	பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதை கண்காணிக்க தனிக்குழு அமைப்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம். (5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி : பெண்களுக்கு 30 சதவீதம் வேலை வாய்ப்பு அளிப்பதையும், 5 ஆம் வகுப்பு வரை பெண்களையே ஆசிரியைகளாக நியமிப்பதையும் கண்காணிப்பதற்கென சமூக நல இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனிக் குழு நிறுவப்படும்.	பெண்களுக்கு 30 சதவீதம் வேலை வாய்ப்பு அளிப்பதையும் 5 ஆம் வகுப்பு வரை பெண்களையே ஆசிரியைகளாக நியமிப்பதையும் கண்காணிப்பதற்கென சமூக நல இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. [அரசு ஆணை (நிலை) எண் 107, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 20—2—1992.]

அ.சா.கு. எண் 32949/ச.ந. 3/91-2, நாள் 29—7—1992).

வரிசை எண். (1)	உறுதி மொழி எண். (2)	பார்வை. (3)	பொருள். (4)
62	118/92	சட்டப் பேரவை செயலகத்தின் அ.சா.கு. எண் 11853/92-1, நாள் 9—4—1992.	செய்யாறு நகரில் இலவச காலணி திட்டம் எடுக்கப்பட்டு நிறைய பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். உடனடியாக அவர்களுக்கு வேலை கிடைக்க ஆவன செய்யுமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம். (5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : இதில் 22 பேர்களுக்கு காஞ்சீபுரம் டால்கோ கூடத்தில் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு இருக்கிறது. மீதி உள்ளவர்களுக்கும் விரைவில் அரசு ஆவன செய்யும்.	செய்யாறில் 1—8—1987 அன்று இலவச காலணி தயாரிக்கும் தொழிற் கூடம், தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகத்தால் தொடங்கப்பட்டது. 1989 ஆம் ஆண்டு மகளிருக்கு காலணி வழங்கும் திட்டத்தை கைவிட்டதுடன் பள்ளிச் சிறார்களுக்கு இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை காலணி வழங்கும் முறை பின்பற்றப்பட்டதாலும் காலணியின் உற்பத்தி ஆண்டுக்கு 65 இலட்சத்திலிருந்து 32.50 இலட்சமாக குறைக்கப்பட்டதாலும் காலணி தயாரிக்கும் நிறுவனங்களின் ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. அதனால் தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சிக் கழகம் 27 உற்பத்திக் கூடங்களை மூட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. அதில் செய்யாறு உற்பத்திக் கூடமும் ஒன்றாகும். செய்யாறு உற்பத்திக் கூடத்தில் வேலை பார்த்து வந்த 69 தொழிலாளர்களில் 22 தொழிலாளர்களுக்கு ஏற்கனவே காஞ்சீபுரம் தொழிற் கூடத்தில் வேலை வழங்கப்பட்டு உள்ளது. மீதமுள்ள நபர்களுக்கும் வேலை வழங்க காஞ்சீபுரம் தொழிற்கூட வளை மேலாளருக்கு அறிவுரை வழங்கப்பட்டு உள்ளது.

(சமூகநலம் மற்றும் சத்துணவுதிட்டத் துறை அ.சா.கு. எண் 14724/சந11/92-4, நாள் 18—8—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
63	186/92	உடுக்குறியிட்ட வினா எண் 8835, திரு. எம். பெரியவீரன், எம்.எல்.ஏ., 5—5—1992.	பெரியகுளம் தொகுதியில் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். சத்துணவு மையங்கள் நடைபெறும் கட்டிடங்களை புதுப்பிக்கும் திட்டம் அரசின் செயற் குறிப்பில் உள்ளதா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி: தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.	மதுரை மாவட்டம், பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி, பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் 1991–92 ஆம் ஆண்டு ரூ. 1.04 இலட்சம் மதிப்பீட்டில் 12 குழந்தைகள் நல மையங்கள், 12 பள்ளி சத்துணவு மையங்கள் பழுது பார்க்கப்பட்டன. 1991–92 ஆம் ஆண்டு பிறப்பு தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் பெரியகுளம் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 6.30 லட்சம் மதிப்பீட்டில் 9 சத்துணவு மையங்கள் புதிதாக கட்டப்பட்டுள்ளன. மேலும் நடப்பு ஆண்டில் (1992–93) ரூ. 4.20 இலட்சம் மதிப்பீட்டில் 6 புதிய சத்துணவு மையங்கள் கட்டப்பட உள்ளது. 16 சத்துணவு மையங்கள் ரூ. 0.67 லட்சம் மதிப்பீட்டில் மராமத்து செய்யப்பட உள்ளன. (ச.ந.(ம) ச.தி. துறையின் அ.சா.கு. எண் 26975/ச.தி.–4/92-4, நாள் 29—9—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
64	330/92	சமூக நலம் குறித்த மானியக் கோரிக்கையின் மீது அமைச்சரின் பதிலுரை 10—4—1992	ஆதரவற்ற பெண்களுக்கு அளிக்கும் நிதியுதவியை உயர்த்துவது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள விவரம்.
(5)	(6)
மாண்புமிகு திருமதி. இரா. இந்திரகுமாரி: ஆதரவற்ற பெண்களுக்கு இனி மேல் ஆயிரம் ரூபாய் அரசு அளித்த தொகையை ரூ. 2,000 ஆக அளிக்கும்.	ஆதரவற்ற பெண்கள் திருமண உதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட உதவித் தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து ரூபாய் இரண்டாயிரமாக நடப்பு ஆண்டிலிருந்து உயர்த்தப் பட்டுள்ளது. (அரசு ஆணை நிலை எண் 299, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 11—5—1992). [ச.ந.(ம)ச.தி. துறையின் அ.சா.கு. எண் 26908/ச.ந. 3/91-1 நாள் 29—7—1992).

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.	உறுதிமொழி விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
65	137/87	அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்து திரு. கே. ஆர். சின்னராஜ், எம். எல்.ஏ., அவர்களின் வினாவிற்கு மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் அவர்கள் அளித்த உறுதிமொழி 26—3—1987.	கிருஷ்ணகிரி வட்டம், ஆலபட்டி மகராஜக் கடைக்கங்கலேரி போன்ற கிராமப் பகுதிகளில் காட்டு யானைகள் சுற்றிக் கொண்டு பொது மக்களை துன்புறுத்தியும், பயிர்களை அழிப்பதையும் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது குறித்து.	மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : அவைகள் எந்த எந்த இடங்களில் இம் மாதிரி பயிர்களை பாழ் செய்கின்றனவோ அந்த இடங்களைப் பற்றிய விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமும் வன இலாகா அதிகாரி மூலமும் விரைவாக கணக்கு எடுத்து நட்ட பட்டு உள்ள தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இனிமேல் யானைகள் தொல்லை தராமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்கும்.

குழுவின் குறிப்புரைகள்.	குறிப்புரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)	(7)
எந்தெந்த இடங்களில் காட்டு யானைகள் அடிக்கடி பயிர்களை சேதப்படுத்துகிறது என்பதை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவும் வன இலாகா அதிகாரிகள் மூலமாகவும் கணக்கெடுப்பு செய்து அவ்வாறு உள்ள பகுதிகளில் மின் வேலி அமைக்க துறை எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன ? *(20—8—1990 நாளிட்ட இத்துறையின் அறிக்கை மீதான 14—9—1990 நாளன்று நடைபெற்ற குழுவின் குறிப்புரை).*	பொதுவாக வட ஆற்காடு, தர்மபுரி மாவட்டங்கள் மற்றும் கிருஷ்ணகிரி பகுதிகளில் காட்டு யானைகள் அடிக்கடி பயிர் சேதம் விளைவிப்பதால் அந்தப் பகுதி விவசாயிகளிடமிருந்து புகார்கள் வந்ததின் பேரில் வன உயிரின சரணாலயங்களைச் சுற்றி மின் வேலி அமைக்கும் திட்டம், ''யானைகள் பாதுகாப்புத் திட்டம்'' என்ற திட்டத்தின் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி மின் வேலி அமைக்கும் பணியினைச் செயல்படுத்தவுள்ள இடங்களில் பேரணாம்பட்டு பகுதியும் ஒன்றாகும். எனவே, இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் அரசும், வனத் துறையும் தனிக் கவனம் செலுத்தி வருகிறது.

சுற்றுப்புறம் (மற்றும்) வனத் துறையின் அ.சா.கு.எண் 52452/வனம். 2/90-7, நாள் 17—9—1992.)

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.	
(1)	(2)	(3)	(4)	
66	213/90	மானியக் கோரிக்கை எண் 45. காட்டுவளம்—இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரின் பதிலுரை, 31—3—1990.	காட்டு யானைகளால் விவசாயிகளுடைய பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படும் போது நஷ்டஈடு கொடுப்பது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை.	

உறுதிமொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :

உறுப்பினர் திரு. திருவேங்கடம் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்று இது பற்றியும் ஆய்வு செய்வோம்.

(6)

அரசாணை நிலை எண் 349, சுற்றுப்புறம், வனத் துறை, நாள் 7—9—1992ல் காட்டு விலங்குகளால் ஏற்படும் பயிர் இழப்பிற்கு 50 சதவீதம் நஷ்ட ஈட்டினை சிறு விவசாயிகளுக்கும், குறுநில விவசாயிகள் மற்றும் பழங்குடியினருக்கும் வழங்க முடிவு செய்து ஆண்டிற்கு ஒரு லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது. இழப்பு, வருவாய்த் துறையை கலந்தாலோசித்து மதிப்பிடப் படும்.

சு (ம) வனத்துறையின் அ.சா.கு. எண் 28573/வனம்-5/90, நாள் 23—11—1992.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
67	1/92	உடுக்குறியிட்ட வினா எண் 4173, துணை வினா திரு. சி. தருமலிங்கம், எம்.எல்.ஏ., 30—1—1992.	காட்டு வளத்தை மேம்படுத்த அப்பகுதியிலேயே வாழும் இளைஞர்களுக்கு வேலை கொடுக்கக் கோருவது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.
(5)

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :

அந்தந்தப் பகுதியிலே இருக்கிறவர்களுக்குத்தான் முன்னுரிமை வழங்கப்படும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)

வனத்துறையில் தற்போது தினக்கூலி அடிப்படையில் சமூக வன ஊழியர்களாகவும், தோட்டக் காவலர்களாகவும், பயிற்சி முடித்து வரும் இளைஞர்களை நிரந்தரப் பணியில் அமர்த்தும்போது அந்தந்த பகுதியில் வாழும் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டுமென்று அனைத்து வனப் பாதுகாவலர்களுக்கும் முதன்மை வனத்துறைத் தலைவரால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

அ. சா. கு. எண் 10400/வனம். எல்.ஜி./92-4, நாள் 18—5—1992.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
68	10/92	உடுக்குறியிட்ட வினா எண் 1509, துணை வினா—திரு. இரா. நடேசன், எம்.எல்.ஏ.	கன்னியாகுமரி மாவட்டம், பெருஞ்சாணி அருகே ரப்பர் பேக்டரியைத் துவக்கி அங்குள்ள ஏழை எளியவர்களுக்கு வேலை கிடைக்க ஆவன செய்ய வேண்டுவது குறித்து.

உறுதிமொழி விவரம்.
(5)

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் :

விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)

கன்னியாகுமரி மாவட்டம், பெருஞ்சாணி தொழிற்சாலை ரப்பர் ஷீட்டுகள் தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டது. 9-5-91-ல் அதைவிட வசதியான இடத்தில் அமைந்துள்ள மைலார் தொழிற்கூடம் துவங்கப்பட்டது. இந்த புது தொழிற் கூடம் நீரோத், டயூன் போன்றவைகளை தயாரிக்க பயன் படுவது சைனக்ஸ் தொழிற்கூடமாகும். இந்த இரண்டு தொழிற் கூடங்களைத் தவிர ஏற்கனவே கீரிப்பாறையில் ரப்பர் ஷீட்டுகளும் சைனக்ஸ்-ம் தயாரிக்கவல்ல ஒரு தொழிற் கூடம் உள்ளது. 1990-91 ஆம் நிதியாண்டில் ஆரம்பத் திலிருந்தே ரப்பர் மார்க்கெட்டில் சைனக்ஸ்-க்கு அதிகமான தேவை (Demand) ஏற்பட்டு சைனக்ஸ் விற்பனையில் ஷீட் விற்பனையைவிட கழகம் ஒரு கிலோவிற்கு சுமார்

ரூ. 20 அதிக லாபம் ஈட்டி வந்துள்ளது. 1990-91 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட செனக்ஸ் மற்றும் ஆர்.எம்.ஏ.-யின் உற்பத்தி செலவு மற்றும் கிடைக்கப்பெற்ற வருவாய் முதலியன பின்வருமாறு :

(1)	செனக்ஸ் (ஒரு கிலோவிற்கு). (2)	ஆர். எம். ஏ. (ஒரு கிலோவிற்கு). பெருஞ்சாணி (3)	கிரிப்பாறை. (4)
	ரூபாய்	ரூபாய்	ரூபாய்
உற்பத்தி செலவு	34.89	31.26	30.87
சராசரி விற்பனை விலை கிடைக்கப் பெற்றது . .	44.09	24.89	24.89
லாபம் (+) நஷ்டம் (—) . . .	(+) 9.19	(—) 6.38	(—) 5.98

எனவே, வியாபார நோக்கத்தோடு நடத்தப்படும் அரசு ரப்பர் கழகம் பெருஞ்சாணி தொழிற் கூடத்தில் ஷிட்டுகள் தயாரிப்பதற்காக அனுப்பி வந்த ரப்பர் பாலை மைலார் மற்றும் கிரிப்பாறை தொழிற்கூடங்களுக்கு செனக்ஸ் உற்பத்திக்காக திருப்பி விட்டுள்ளது. இதன் காரணமாக பெருஞ்சாணி தொழிற்கூட தொழிலாளிகள் கழகத்தின் புது தொழிற்கூடமாகிய மைலாருக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அங்கே அவர்கள் திருப்தியோடு வேலைசெய்து வருகிறார்கள். ஆட்குறைப்பு ஏதும் செய்யப்படவில்லை.

2. பெருஞ்சாணி தொழிற்கூடத்தில் ஷிட் உற்பத்திக்குப் பதில் தற்போதைய நிலையில் செனக்ஸ் உற்பத்தி செய்ய இயலாது. செனக்ஸ் உற்பத்திக்கு தேவையான இயந்திரங்கள் வெளி நாட்டிலிருந்து வாங்கப்பட வேண்டும். அதற்கு பல லட்சங்கள் செலவாகும். மேலும் தற்போதுள்ள கட்டிட அமைப்பினை மாற்ற வேண்டும். அவ்வாறு இருந்தாலும் தண்ணீர் வசதி முதலியன செனக்ஸ் உற்பத்திக்கு உகந்ததாக இல்லை. எனவே அங்கு செனக்ஸ் உற்பத்தி செய்ய இயலாது. பெருஞ்சாணி தொழிற்கூடத்தில் ரப்பர் ஷிட் தயாரிக்க பயன்படுத்தப்பட்ட இயந்திரங்கள் தற்போது பயன்படுத்தப்படாமல் உள்ளது. ஆனால் அவைகளை எப்போது தேவைப்பட்டாலும் பயன்படுத்தும் நிலையில் வைக்கப்பட்டுள்ளது.

[சு. (ம) வ. துறையின் அ.சா.கு. எண். 10398/வ்ய. கழகங்கள்/92-5, நாள் 3—9—1992.]

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
69	109/92	உடுக்குறியிட்ட வினா எண். 4496, நுணை வினா— திரு. ஜெ. பாலகங்காதரன், எம்.எல்.ஏ., 16—3—1992.	சிவகாசி தொகுதியில் உள்ள தொழிற்சாலைகளினாலும், ஆலங்குளத்தில் உள்ள சிமெண்ட் தொழிற்சாலையாலும் கற்றுப்புறச்சூழல் பாதிக்கப்படுகிறது. அவற்றை யெல்லாம் கட்டுப்படுத்தும்படி மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கும்படி அறிவிப்பார்களா என்பது குறித்து.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :

ஒழுங்கான நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப் படும்.

காமராஜர் மாவட்டம், ஆலங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு சிமெண்ட கார்பரேஷன் லிமிடெட் என்ற தொழிற்சாலை கீழ்க்கண்ட பொருட்களை உற்பத்தி செய்கின்றன :—

1. போர்ட்லேண்டு பொசலோனா சிமெண்ட் மாதத்திற்கு 30,000 டன்.
2. போர்ட்லேண்டு சிமெண்ட் மாதத்திற்கு 3,330 டன்.

இந்தத் தொழிற்சாலையில் செய்முறைக் கழிவுநீர் உற்பத்தி யாவதில்லை. ஆனால் தூசு வெவ்வேறு பகுதிகளிலிருந்து வெளியேற்றப்படும். புகை போக்கியிலிருந்து வெளியேறும் தூசியினை கண்காணிக்க 1991 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் நடந்த ஆய்வின்போது தூசியின் அளவு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரிய வரைமுறைக்கு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது. ஆகவே இத்தொழிற்சாலையில் பொருத்தப்பட்டுள்ள அனைத்து மாசு கட்டுப்பாடு சாதனங்களைத் தொடர்ந்து இயக்கவேண்டும் என வாரியம் வலியுறுத்தியுள்ளது. இத்தொழிற்சாலையில் பொருத்தப்பட்டுள்ள காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களை வாரியம் முனைப்பாக கண்காணித்து வருகின்றது.

சிவகாசியில் சுமார் 218 தீப்பெட்டி தொழிற்சாலைகளும் 99 பட்டாசு தொழிற்சாலைகளும் உள்ளன. தீப்பெட்டி தொழிற்சாலைகள், பொட்டாசியம் குளோரேட், சல்பர், கருநிறக் கனிப் பொருள் தனிமம், கண்ணாடித்தூள், மண்டித் தைலம், குளூ, பொட்டாஷ் பைகுரோமேட் போன்ற மூலப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றது. தீப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலைகளில் நாளொன்றிற்கு 0.5 கிலோ லிட்டர் தண்ணீர் செய்முறைக்காக பயன்படுத்தப்பட்டு 0.5 கிலோ லிட்டர் செய்முறைக்கு பின்னர் கழிவுநீராக வெளியேற்றப்படுகின்றது. தீப்பெட்டி தொழிற் சாலைகளிலிருந்து வெளியேற்றப்படுகின்ற செய்முறைக் கழிவுநீரினை சுத்திகரிப்பு செய்ய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவில்லை. இத்தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரக் கூடிய செய்முறைக் கழிவுநீர் நிலத்தில் வெளியேற்றப்படுகின்றது. ஆகவே தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், பொதுகழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க யோசனை தெரிவித்துள்ளது. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான முன்னோடிப் பணிகள்நடைபெற்று வருகின்றன. பட்டாசுத் தொழிற்சாலைகள், அலுமினியம்தூள், பேரியம் நைட்ரேட், உப்புக்கள், அலுமினியம் தூசுகள், பி.வி.சி. தூள், கோந்து, சணல் ஆகியவற்றை மூலப் பொருட்களாக பயன்படுத்துகின்றன. இவ்வகை தொழிற்சாலைகளிலிருந்து புகை ஏதும் வெளியேற்றப்படுவதில்லை. ஆனால் இரசாயனப் பொருட்களை நிரப்பும் பகுதிகளிலிருந்து தூசு பறக்க வாய்ப்புகள் உள்ளன. இவ்வகை தொழிற்சாலைகளில் உள்ள கட்டிடத்தை சுற்றிலும் பெரிய சுற்றுச்சுவர், 1988 ஆம் ஆண்டு இந்திய வெடிமருந்து சட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ளது.

[சு. (ம) வ. துறையின் அ.சா.கு. எண். 12879/சு.2/92-3, நாள் 1—7—1992.]

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை எண்.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
70	169/92	மோட்டார் வண்டிகள் சட்டங்கள், நிர்வாகம் சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்துப் பணிகள், காட்டுவளம், காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது அமைச்சரின் பதிலுரை 24 -3 -1992.	வனத்துறையில் பணியாற்றுபவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் தருவது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், "மாதந் தோறும் அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் 20 ரூபாய் வழங் கப்படும்.	வனத்துறையில் பணியாற்றும் அனைத்து வனச்சரகர்கள் வனவர்கள், வனக்காப்பாளர்கள், மற்றும் வனக்காவலர் கள், ஆகியோருக்கு மாதந்தோறும் ரூ. 20 (இருபது மட்டும்) இடர்ப்பாட்டுப் படி (Risk Allawance 1—8—1992 முதல் வழங்குமாறு உரிய ஆணைகள் வெளி யிடப்பட்டுள்ளன. கூ. (ம) வா. துறையின் அ.சா.கு. எண். 19325/வனம் என்ஜி 92-2, நாள் 1 -9 -1992.
வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
71	170/92	காட்டுவளம், காட்டுவளம் குறித்த மூலதனம் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது அமைச்சரின் பதிலுரை 24—3—1992.	தேயிலை தொழிற்சாலைகள் உருவாக்குவது குறித்து.
		உறுதிமொழி விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், 1992-93-ம் ஆண்டு வால்பாறை, நீலகிரி போன்ற இடங்களில் கூடு தலாக 4 (நான்கு) தேயிலைத் தொழிற்சாலைகள் உரு வாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	(1) கோத்தகிரிக்கு அருகில் குயின் சோலா என்ற இடத்தில் ரூ.278.55 இலட்சம் செலவில் தேயிலைத் தொழிற் சாலை கட்டும் பணி முன்னேற்றத்தில் இருந்து வருகிறது.

(2) நெல்லியாளம் தேயிலைத் தோட்டத்தில் ரூ. 420 லட்சம் செலவில் தேயிலை தொழிற்சாலை அமைப்பதற்கான கட்டிடப்பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

(3) வால்பாறையில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தில் முதலாவது தேயிலைத் தொழிற்சாலையினை அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு (ரூ. 170 லட்சம்) நிர்வாக குழுவின் பரிசீலனையில் உள்ளது. இதற்காக விரைவில் அங்கீகாரம் பெற்று பணிகள் ஆரம்பிக்கப்படும்.

(4) நீலகிரி மாவட்டம் நடுவட்டத்தில் ordhcdox முறையில் தேயிலை பக்குவப்படுத்தும் தொழிற்சாலை (ரூ. 237 லட்சம் முதலீட்டில்) இவ்வருடத்தில் தொடங்க நிர்வாகக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. தேவிய விவசாய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (NABARD) நிதி ஒதுக்கீடு கிடைத்த பின் இப்பணி இவ்வாண்டில் ஆரம்பிக்கப்படும்.

சுற்றுப்புறம் மற்றும் வனத்துறையின் அ.சா.கு. எண். 19326/வன. கழகங்கள்/92க2, நாள் : 31 –7 –1992.

64

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
72	202/92	உடுக்குறியிட்ட வினா எண். 5207 துணை வினா டாக்டர் (திருமதி) வெ. சரோஜா எம்.எல்.ஏ., 26—3—1992.	சந்தனக் கூட்டை கடத்தலில் பிடிபட்ட கட்டைகளை குறிப்பிட்ட காலத்திற்குள் ஏலம் விட்டு, அரசுக்கு நிதியைச் சேர்க்க ஆணை பிறப்பிக்குமா ? அப்படிப் பிறப்பித்திருந்தால் குறிப்பிட்ட காலம் என்ன என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிகை.

(5)

(6)

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், உடனடியாக ஏலம் விடுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும்.

நடைமுறையிலுள்ள அரசு விதிகளின்படி சந்தனமரக் கடத்தலில் கைப்பற்றப்பட்ட சந்தனக்கட்டைகளை வழக்கு முடியும் வரை பாதுகாப்பாக வைத்திருந்து நீதிமன்றம் கேட்கும்போது சாட்சிப்பொருளாக காண்பிக்கப்பட்டு,

(6)—தொடர்ச்சி

வழக்கில் தீர்ப்பும் வழங்கிய பின்னரே அவற்றை விற்பதற்கு இயலும். எனவே, சந்தனக்கட்டைகளை உடனுக்குடன் ஏலம் விடுவதில் நடைமுறை சிக்கல்கள் இருந்து வந்தன. இந்த இடர்பாடுகளையும் நோக்கோடு, சந்தனமரக் கடத்தலில் பிடிக்கப்படும் வழக்குகளை உடனுக்குடன் விசாரித்து முடிக்க வேலூர் மண்டலத்தில் திருப்பத்தூரில் ''சந்தனமரங்கள் கடத்தல்'' குறித்த வழக்குகளை மட்டும் விசாரிக்க தனி நீதிமன்றம் ஒன்று கடந்த 21—3—1992 அன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, வழக்குகள் உடனுக்குடன் முடிவு செய்யப்பட்டு கடத்தலில் பிடிக்கப்பட்ட சந்தனக்கட்டைகளை வழக்கு முடிந்தவுடன், அரசு மரக்கிடங்கிற்கு கொண்டு வந்து, அரையாண்டிற்கு ஒரு முறை ஏலம் விடுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

(சுற்றுப்புறம் மற்றும் வனத்துறையின் அ.சா.கு. எண். 19329/வனம். கா.பொ. மற்றும் ச8./92-3, நாள் : 20—8—1992

செய்தி மற்றும் சுற்றுலா துறை.

பார்வை.

(3)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	எழுதுபொருள் அச்சுத் துறை பற்றிய 4 ஆம் எண் மானிய கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது மாண்புமிகு அமைச்சர் அளித்த உறுதி மொழி 20—4—1987.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(1)	(2)	(4)	(5)
73	394/87	மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அச்சுத் துறையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு எற்கனவே விடுமுறைகுறைக்கப்பட்டதாலும் வேலை நேரமும் அப்படியே இருக்கின்ற காரணத்தினாலும், மருத்துவ விடுப்பும் குறைக்கப்பட்டிருப்பதாலும் அவர்களுக்குத் தனி திட்டம் உருவாக்கப்பட்டு அவர்களுக்கு தக்க ஊதியம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.	தற்காலிக பருவம் விளம்பல் பெற்ற அரசு அச்சகத் தொழிலாளர்கள் மற்றும் நிரந்தர அச்சகத் தொழிலாளர்கள் ஆகியோருக்கு ஈட்டிய விடுப்பு இருப்பை, 240 நாட்களாக உயர்த்தியும் மற்றும் அரசு அச்சக நிரந்தரப் பெண் தொழிலாளர்களுக்கு பேறுகால விடுப்பை விஸ்தரித்தும் அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அரசு அச்சகத்திலுள்ள பொது முறை மாற்ற நேரத்தை காலை 9.45 பணி முதல் மாலை 5.45 மணியாக (உணவு இடைவெளி நேரம் அரை மணி பிற்பகல் 1.30 முதல் 2.00 மணிவரை) மாற்றி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. அரசு அச்சகத் தொழில் நுட்பப் பணியாளர்களுக்கும், மற்ற அரசு ஊழியர்களைப் போல், தமிழ்நாடு விடுப்பு விதிகளில் உள்ளது போல், பணிக்காலம் முழுவதும் முழுச் சம்பளத்துடன் 18 மாத மருத்துவ விடுப்பு அளித்து அரசு ஆணை எண். 100, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை, நாள் : 3—4—1992ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(அ.சா.கு. எண் 23013/எ2அ/91-4, நாள் : 29/5/1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
74	315/89	உடுக்குறியிட்ட வினா எண் 104, திரு. வி. தமிழ்மணி, எம். எல்.ஏ., 19—4—1989.	மாமல்லபுரத்தில் சுற்றுலாத்துறையின் சார்பாக ஒலி ஒளிக் காட்சி அமைப்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்த நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாமல்லபுரத்தில் சுற்றுலாத்துறையின் சார்பாக ஒலி ஒளி காட்சி அமைக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.	இத்துறை 1981–82–லும், 1990–91–லும் மாமல்லபுரத்தில் ஐந்து ரதம் அருகே ஒலி ஒளிக்காட்சி அமைக்க திட்டம் வகுத்தது. 1981–82–ல் மைய அரசு சுற்றுலாத்துறை இசைவு தரவில்லை. 1990–91–ல் இந்தியத் தொல்பொருள் இயல் துறை இசைவு தரவில்லை. எனவே, இத்திட்டம் கைவிடப்பட்டது. ஆனால், மறுபடியும் 1992–93 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை நிறைவேற்ற இத்துறை மைய அரசு சுற்றுலாத்துறையையும் இந்திய தொல் பொருள் இயல் துறையையும் கலந்து உரையாடியதன் பயனாக அவர்கள் இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளனர். எனவே, மாமல்லபுரத்தில் ஒலி ஒளிக்காட்சி அமைக்கும் திட்டம் விரைவில் மேற்கொள்ளப்படும்.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
75	496/90	உடுக்குறியிட்ட வினா எண் 1516—திரு. வி. தமிழ்மணி, எம்.எல்.ஏ., 9—5—90.	மாமல்லபுரத்தில் பல்லவர் கோட்டம் அமைக்க அரசு முன் வருமா என்பது குறித்து.

உறுதி மொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாமல்லபுரத்தில் பல்லவபுரம் சுற்றுலா வளாகம் மத்திய அரசு சுற்றுலாத் துறை நிதி உதவியுடன் அமைக்கப்படும்.	மத்திய அரசு நிதி உதவியுடன் மாமல்லபுரம் சுற்றுலா வளாகம் அமைக்கும் திட்டம் இந்தியத் தொல் பொருள் துறையின் ஒப்புதல் கிடைக்கப் பெறாததால் கைவிடப்பட்டது. இருப்பினும் இத்திட்டத்தினை மாமல்லபுரம் செல்லும் வழியிலுள்ள முட்டுக்காடு கிராமத்தில் (Intach) இன்டாக் நிறுவனம் மூலமாக நிறை வேறுவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	உறுதி மொழியின் விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
76	23/90	உடுக்குறியிட்ட வினா எண் : 1089—துணை வினா திரு. குமரி அனந்தன் எம்.எல்.ஏ., 20.1.90.	அயோடைஸ்ட் சால்ட் என்ற அயோடின் கந்த உப்பு தயாரிப்பதின் மூலம் நோய் வராமல் தடுப்பதற்குரிய வழி இருக்கிறது என்று சொல் வதைக் கருத்திற்கொண்டு அப்படிப்பட்ட உப்பினுடைய உற்பத்தியை பெருக்குவதற் கான ஏற்பாடு செய்வது குறித்து.	விஞ்ஞான முறையிலே இந்த உற்பத்தியை செய்தால் தரம் உயரவும் உற்பத்தி பெருக வும் வழி உண்டு. உறுப்பினர் சொன்ன ஆபத்துக்கள் நீக்கப்படுவதற்கும் வழி யுண்டு. அவைகளை அரசு பரிசிலிக்கும்.
		குழு வின் குறிப்புரை கள்.		அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(6)		(7)
		அயோடைஸ்டு சால்ட் என்கிற அயோடின் கலந்த மூலநோயைத் தடுக்கின்ற உப்பினுடைய உற்பத்தியைப் பெருக்குவது குறித்து. பரிசிலனை முடிவடைந்து விட்டதா ? தற்போ தைய நிலை என்ன ?	அயோடின் குறைவினால் ஏற்படும் நோய்களை நீக்குவதற்கு மத்திய அரசு நீவிர முயற்சிகளை எடுத்து வருகிறது. அதன் அடிப்படையில் அயோடின் குறைவினால் உண்டாகும் நோய்களை தடுப்பதற்காக 1992-க்குள் உப்பு முழுவதை யும் அயோடின் கலப்பது என்ற புதிய திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. அதன்படி பதினெட்டு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் உணவு கலப்பட சட்டத் தின்படி சாதாரண உப்பு தடை செய்யப்பட்டு அயோடின் கலந்த உப்பு மட்டும் விற்பனை செய்ய வேண்டும் என்ற சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி தோராய மாக இந்திய ஜனத் தொகையின் பாதிக்கும் மேற்பட்டவர் கள் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். தமிழகத்திலும் ஆரம்ப கட்ட ஆய்வுகளின்படி உதக மண்டலம் மற்றும் திருச்சி மாவட்டங்களில் அயோடின் குறைநோய் காணப்படுவது தெரிய வருகிறது. எனவே தமிழ்நாட்டிற்கு ஆண்டொன்றிற்கு சுமார் 3 இலட்சம் டன் அயோடின் கலந்த உப்பு தேவைப்படுகிறது. இதனால் மைய அரசு தமிழகத்தில் ஆண்டொன்றிற்கு சுமார் 4.1 லட்சம் டன் இறன் கொண்ட அயோடின் கலந்த உப்பு தயாரிக்கும் 36 தொழிற் சாலைகளை ஊக்குவித்து வரு கிறது. மேலும் தமிழகத்தில் சாதாரண உப்பு விற்பனையை தடை செய்வது குறித்து அரசு பரிசிலித்து வருகிறது.

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
77	200/90	உடுக்குறியிட்ட வினா எண் 2556, துணை வினா திருமதி பாப்பா உமாநாத் எம்.எல்.ஏ., 31-3-1990.	தஞ்சை மாவட்டத்திதிலே நரிமணம் மற்றும் கச்சா எண்ணெய் கிடைப்பதை உபயோகித்து எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

(5)

தஞ்சையில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை அமைக்க நிலம் கையகப்படுத்தும் பணியின் தற்போதைய நிலை என்ன? எவ்வளவு காலத்தில் பணி நிறைவேற்றப்படும்? இதற்கு மைய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளதா ?

அரசு எடுத்த நடவடிக்கை.

(6)

நிலம் கையகப்படுத்துதல் பணியின் தற்போதைய நிலை.

169.40.0 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட மேற்காணும் நிலங்களுக்கு தீர்ப்பு விசாரணை முடிக்கப்பட்டு, நில சொந்தக்காரர்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளது.

	பரப்பளவு.	
(1) 150—பனங்குடி	106.37.5	ஹெக்டேர்
(2) 151—உத்தமசோழபுரம் ..	35.25.5	,,
(3) 152 நரிமணம்	27.77.0	,,
மொத்தம் ..	169.40.0	,,

நிலம் கையகப்படுத்துதல் சம்பந்தமான பணிகள் இவ்வாண்டு இறுதிக்குள் முடிக்கப்பட்டுவிடும்.

மேலும் 278.55.5 ஹெக்டேர் பரப்பளவு கொண்ட மேற்காணும் நிலங்களுக்கு நிலம் கையகப்படுத்துதல் சம்பந்தமான முன்மொழிவுகள் அரசின் பரிசீலனையில் உள்ளன :—

	பரப்பளவு.
(1) 150—பனங்குடி	170.10.0
(2) 151—உத்தமசோழபுரம்	44.10.5
(3) 152—நரிமணம்	39.24.5
(4) 153—கோபராஜபுரம்	18.56.5
(5) 33—நாகூர்	6.54.0
மொத்தம்	278.55.5

நில எடுப்புச் சட்டப் பிரிவுகள் (i) 6, 7-ன் கீழ் சில நிலங்களுக்கான அறிவிக்கைகள் பிரசுரம் செய்யப்பட்டுள்ளன. எல்லா நிலங்களும் கையகப்படுத்தப்பட்டபின், பணி தொடங்கப்படும். மேற்படி நிலங்களை கையகப்படுத்துவதற்கு மைய அரசு நிறுவனமான சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தினரால் தக்கநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[தொழில் துறையின் அ.சா.கு. எண் 72020/எம்.ஐ.ஏ-I. 90-5, நாள் 26—8—1992.)

(1)	(2)	(3)	(4)
78	220-91	39923-91-1, நாள் 6—11—91.	தகரம், செம்பு ஆகிய மூலப் பொருட்களை வழங்கும் பொருட்டு சிவகங்கையில் மூலப்பொருள் கிடங்கு திறக்கப்படுவது தொடர்பாக.

(5)	(6)
மாண்புமிகு திரு. முகமது ஆரிப்:	தமிழ்நாடு சிறு தொழில் கழகம் செம்பு, பித்தளை போன்ற மூலப் பொருட்களை சிறு தொழில் நிறுவனங்களுக்கு 1991-92 ஆம் ஆண்டிலிருந்து வழங்க முடிவெடுத்துள்ளது. அதன்படி திருவாளர்கள் இந்துஸ்தான் காப்பர் லிமிடெட், கல்கத்தா என்ற நிறுவனத்துடன் உடன்படிக்கை செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. உடன் படிக்கை முடிந்தவுடன் மூலப் பொருட்களை டிட்கோ வழங்க ஏற்பாடு செய்யும். அதேபோல் டைட்டானியம்-டை-ஆக்சைடு (Rutile Gr. de) என்கிற மூலப்பொருள் தொடர்பாக திருவாளர்கள் கேரளா மினரல்ஸ் அண்ட் உலோக நிறுவனத்துடன் உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மூலப் பொருள் சிறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக ஜனவரி முதல் வாரத்தில் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 'எலக்ட்ரானிக் பிளேட்ஸ்' குறித்து ஸ்டீல் அதாரிடி ஆப் இந்தியா நிறுவனத்திடம் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது. சிவகங்கையில் மூலப் பொருள் கிடங்கு திறப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தும் முடிவடைந்து விட்டன. 1992 ஜனவரியிலிருந்து மூலப் பொருள் விற்பனை மேற்படி மையத்தில் தொடங்கப்படும்.

(தொழில் துறையின் அ.சா.கு. எண். 60693/எஸ்.ஜ.இ.-1/91-4, நாள் 28—1—1992.)

தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை.

(1)	(2)	(3)	(4)
79	26/89	உறுக்குறியிட்ட வினா எண். 797, நுங்கை விலாகிரு. ஆர். சாமிதாஸன், எம்.எல்.ஏ., 4—4—1989.	திருமங்கலம் ஒன்றியம் செக்காணூரணியில் உள்ள பயிற்சி நிலையத்தில் நவீன முறையிலான தொழிற்பயிற்சி அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதன விவரம்.

(5)	(6)
மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. பொள். மூத்தராமலிங்கம்:	செக்காணூரணியில் உள்ள பயிற்சி நிலையத்தில் புதிய தொழில் இயல்கள் அறிமுகப்படுத்த ரூ. 10.11 லட்சம் செலவாகும் எனக் கருதப்படுகிறது. தற்போது அரசுக்கு உள்ள நிதி நெருக்கடியில் இத்திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற இயலவில்லை. எனவே இதற்கான கருத்துருவை 1993-94ம் ஆண்டில் இரண்டாம் பகுதி திட்டச் செலவினத்தில் சேர்ப்பது குறித்துப் பரிசீலிக்கலாம் என்று அரசு முடிவு செய்துள்ளது.
உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தின் அடிப்படையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.	

(தொ.(ம) வே. வா. துறையின் அ.சா.கு. எண். 56442/எஸ். 2/91-4, நாள் 19—8—1992.)

(1)	(2)	(3)	(4)
80	516/90	22—8—90 அன்று நடைபெற்ற சட்டமன்ற மேலவைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுதி மொழி.	தனியார் நெசவு ஆலைகளில் வேலை செய்யும் நெசவாளர்கள் பெறுவது போல், தமிழகத்திலுள்ள தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள விற்பனையாளர்கள் மற்றும் நெசவு தொடர்பான தொழிலாளர்களுக்கு நிரந்தரப் பணி பாதுகாப்பு, குறைந்தபட்ச ஊதியம், போனஸ் வருங்காலவைப்புநிதி ஆகியவைகளை விரிவுபடுத்தும் திட்டம் குறித்து.

(5)

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு:

அனைத்து சலுகைகளும் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள நெசவாளர்களுக்கும் வழங்கப்படும்.

(6)

தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிலுள்ள விற்பனையாளர்கள் மற்றும் நெசவுத் தொடர்பான தொழிலாளர்களுக்கு நிரந்தரப் பணி 1981-ம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர் நிரந்தரம்) சட்டத்தின் கீழ் நிவாரணம் காண வழிவகை உள்ளது. அரசு நிலை ஆணை எண். 1249, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை, நாள் 26—6—1989-ல் நெசவுத் தொடர்பான தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு நடைமுறையில் உள்ளது. மேலும் இவர்களுக்கு போனஸ் சட்டத்தின் கீழ் நிவாரணம் காண வகை செய்யப்பட்டுள்ளது. வருங்கால வைப்பு நிதி திட்டத்தினை பொறுத்தவரையில் தமிழகத்தில் உள்ள தொழிலியல் நெசவாளர் கூட்டுறவு சங்கம் உள்ளிட்ட அனைத்து நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கும் நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டமும் கூட்டுறவு சங்க நெசவாளர் குடும்ப ஓய்வு ஊதிய திட்டமும் அமுல்படுத்தப்படுகிறது. இத்திட்டங்களின்படி நெசவாளர் உறுப்பினர்கள் வழங்கும் தொகைக்கு ஈடாக மத்திய மாநில அரசுகள் மானியம் வழங்குகின்றன. இத்திட்ட உறுப்பினர் இறந்து போனால் அவரது குடும்பத்திற்கு அவரது கணக்கில் உள்ள சேமிப்பு தொகைகளும் பாதுகாப்பு தொகையாக ரூ. 15,000-ம் கோ-ஆப்டெக்ஸ் கருணைத் தொகை, ரூ. 2,000-ம் சேமிப்புக் கணக்கில் உள்ள தொகையும் வழங்கப்படுகிறது. மேலும் அவரது குடும்பத்திற்கு ரூ. 250 வீதம் பத்தாண்டுகளுக்கு குடும்ப ஓய்வு ஊதியமும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் ஈட்டுறுதிப்பணமாக ரூ. 500 முதல் ரூ. 25,000 வரையில் இத் தொழிலாளர்களுக்கு கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

[தொ. (ம) வே. வர. துறையின் அ.சா.கு. எண். 89924/ஜி-90-7, நாள் 19—8—92.]

வரிசை எண் (1)	உறுதி மொழி எண். (2)	பார்வை. (3)	பொருள். (4)
81	122/91	தொழிலாளர் நலன் பற்றிய மாணியக் கோரிக்கையின் மீது திரு. சி. செல்வராஜ், எம்.எல்.ஏ., அவர்களின் உரை, 16-9-1991.	கோயமுத்தூர், சேலம், திண்டுக்கல் ஆகிய இடங்களில் உள்ள பஞ்சாலைகளில் 10, 12 வயது சிறுமியரை வைத்துக் கொண்டு 10, 12 மணி நேரம் வேலை வாங்கி 5 ரூபாய் 6 ரூபாய் கூலி கொடுப்பது பற்றி.

உறுதி மொழியின் விவரம். (5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
மாண்புமிகு டாக்டர் அரங்கநாயகம்: நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.	கோயம்புத்தூர், சேலம் ஆகிய பகுதிகளில் உள்ள பஞ்சாலைகளில் 10, 12 வயது சிறுவர் சிறுமியர்கள் எவரும் வேலை செய்யவில்லை. ஆனால் திண்டுக்கல், பழனி பகுதியிலுள்ள 8 தொழிற்சாலைகளில் தினக்கூலி ரூபாய் 6 முதல் 8 வரை வழங்கப்பட்டு எட்டு மணி நேரம் வேலை வாங்கியது கண்டறியப்பட்டு அவ்வெட்டுத் தொழிற்சாலைகள் மீதும் 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 67 மற்றும் 68 ஆகியவற்றினை மீறினமைக்காகிலும் அத் தொழிற்சாலைகளுக்கு காரணம் காட்டும் அறிக்கைகள் வழங்கப்பட்டு, அத் தொழிற்சாலைகள் கொடுத்த காரணம் ஏற்புடையதாக இன்மையால் அந்த எட்டு தொழிற்சாலைகள் மீதும் தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 68 (a) மற்றும் (b)-ன்படி நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டு அவ்வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன. 1948 ஆம் ஆண்டு தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 67 மற்றும் 1986 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டப் பிரிவு 3-ல் கூறப்பட்டுள்ளவைகளுக்கு பதினான்கு வயதிற்குக் குறைந்த குழந்தைத் தொழிலாளர்களை தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்படுவதைத் தடுக்க வகை செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகளை தொழிற்சாலை ஆய்வாளர்கள் செவ்வனே செயல்படுத்தி வருகிறார்கள். தொழிற்சாலைகள் சட்டப் பிரிவு 67 மற்றும் குழந்தைத் தொழிலாளர்கள் (நீக்குதல் மற்றும் முறைப்படுத்துதல்) சட்டப் பிரிவு 3 ஆகியவைகளை மீறும் தொழிற்சாலைகள் மீது நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்படுகின்றன.

உறுதிமொழி எண் 122/91-ன் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமையால் அவ்வுறுதிமொழியினை செயல்படுத்தப்பட்டு விட்டதாகக் கருதும்படி உறுதிமொழிக் குழுவினை கேட்டுக் கொள்ளும்படி சட்டமன்றப் பேரவை செயலகம் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை அலுவல் சார்பற்ற குறிப்பெண் 67097/எண் 2/91, நாள் 15-7-1992.

(1)	(2)	(3)	(4)
82	20/92	உடுக்குறியிட்ட வினா 258, அணை வினா திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், எதிர்க்கட்சித்தலைவர், 5-2-1992.	பாதிக்கப்பட்ட பஞ்சாலை தொழிலாளர்களுக்கு தீபாவளி சமயத்தில் வழங்கிய கருணைத் தொகையான ரூ. 400-ஐ விடுபட்ட 431 தொழிலாளர்களுக்கு கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்பது குறித்து.

(5)	(6)
மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: அதை ஆராய்ந்து அவர்களுக்கும் கருணைத் தொகை வழங்கப்படும்.	விடுபட்ட 431 தொழிலாளர்களுக்கும் கருணைத் தொகையாக ரூ. 400-ஐ முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க அரசு ஆணை எண் 135, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 10-2-1992-ல் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ஆணையின் நகல் இணைக்கப் பட்டுள்ளது.) (அ.சா.கு. எண் 23898/டி2/92-1, நாள் 5-5-1992.)

(1)	(2)	(3)	(4)
83	156/92	உடுக்குறியிட்ட வினா எண் 5322, திருமதி ஏ. எஸ். பிரான்னம் மாள். எம். எஸ். ஆ., 24-8-1992.	நிலக்கோட்டை தொகுதிக்கு ஒரு தொழிற்பயிற்சி மையம் வேண்டுமென்ற கோரிக்கை அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா? அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து.

(5)	(6)
மாண்புமிகு இரு. செ. ராஜபதி: கோரிக்கை அரசின் பரிசீலனை யில் உள்ளது.	திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் ஏற்கனவே இரண்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும், ஐந்து தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் உள்ளன. புதியதாக ஒரு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்திட சுமாராக ரூ. 80 இலட்சம் தேவைப்படும். மேலும் தொடர் இனச் செல வாக ஆண்டொன்றிற்கு ரூ. 5.00 இலட்சம் ஆகும். எனவே, அரசின் தற்போதைய நிதி பற்றாக்குறை காரணமாக தற்போதைக்கு திலக்கோட்டையில் ஒரு அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் அமைக்க இயலாது என அரசு முடிவெடுத் துள்ளது. [தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.கு. எண் 37225/எஸ். 2/92-1, நாள் 15-9-1992.]

(1)	(2)	(3)	(4)
84	342/92	தொழிலாளர் மற்றும் தொழிற்சாலைகளும் பற்றிய மானியக் கோரிக்கையின் மீது அமைச்சரின் பதிலுரை, 20-4-1992.	வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கணினி மயமாக்கப்படுவது குறித்து.

(5)

மாண்புமிகு திரு. கே. ரகுபதி: நடப்பு ஆண்டில் மேலும் 5 மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மதுரை, வேலூர் மற்றும் சென்னையில் உள்ள மூன்று வேலை வாய்ப்பு அலுவலகங்கள் கணினி மயமாக்கப்படும்.

(6)

மைய அரசின் நிதி உதவியோடு வேலை வாய்ப்பு அலுவலகங்களை கணினி (Computer) மயமாக்கும் திட்டத்தின் கீழ், 1992-93 ஆம் நிதியாண்டில் கீழ்க்காணும் 5 வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன:—

1. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், மதுரை.
2. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் (தொழில் நுட்பம்), மதுரை.
3. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், வேலூர்.
4. மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம், (தொழில் நுட்பம்,) சென்னை.
5. தொழில் மற்றும் செயல் வேலை வாய்ப்பு அலுவலகம் சென்னை.

மேற்கண்ட திட்டப் பணிக்காக அரசாணை (நிலை) எண் 75, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, நாள் 23-3-1992-ல் ரூ. 4.96 இலட்சத்தை மாநில அரசு வழங்கியுள்ளது. மேலும் இதற்கான மைய அரசின் நிதி உதவியான ரூ. 20 இலட்சத்தை மேற்கண்ட திட்டத்திற்காக பயன்படுத்திக் கொள்ள அரசாணை (2டி) எண் 70, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத்துறை, நாள் 14-10-1992ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 5 வேலை வாய்ப்பு அலுவலகங்களில் கணினிகளை (Computer) நிறுவுவது தொடர்பான பூர்வாங்க வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

(தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.சு. எண் 45626/ஆர். 1/9-23, நாள் 12-11-1992.)

வரிசை எண். (1)	உறுதி மொழி எண். (2)	பார்வை. (3)	பொருள். (4)
85	137/85	உடுக்குறியிட்ட வினா எண். 196, திரு. **மா.** பின்னராஜ், எம்.எல்.ஏ., 4—6—1985.	கோவை மாவட்டத்திற்குப் பயனளிக்கும் உலக வங்கி நிதி உதவியுடன் குடிநீர் வழங்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது.

உறுதிமொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து.— இத்திட்டம் 1985–86 ஆம் ஆண்டின் மத்தியில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

உறுதிமொழிக்குமு மேற்கொண்டு கேட்டுள்ள ஆகவல்கள் :

'' (கோவை மாவட்டத்திலுள்ள அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் குறித்து) திட்டத்தை நிறைவேற்றுவதில் உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்றும், குடிநீர் திட்டம் போன்ற அத்தியாவசியமான திட்டங்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும் குழு கருத்து தெரிவித்ததோடு அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் தற்போது எந்த நிலையில் இருக்கிறது என்றும் அறிய விரும்புகிறது.''

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

கோவை மாநகர் மற்றும் சுற்றுப்புறப் பகுதிகளுக்கு உலக வங்கி உதவியுடன் குடிநீர் வழங்கும் திட்டம் 1985–86 ஆம் ஆண்டு செயல்பாட்டுக்கு எடுத்து கொள்ளப்பட்டது. கோயம்புத்தூர் 20 நகரங்கள் மற்றும் 476 ஊரக குடியிருப்புக் குடிநீர்த் துணைத் திட்டத்திற்கு அத்திக்கடவு என்னும் இடத்தில் பவானி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டி அங்கிருந்து குடிநீர் வழங்குவதாக முன்பு திட்டமிடப்பட்டு வனத்துறை இலாகா ஆட்சேபம் தெரிவித்ததால் தற்போது மேற்படி திட்டம் மாற்றியமைக்கப்பட்டு பவானி ஆற்றில் பில்லூர் அணைக்கட்டிலிருந்து நீர் எடுத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளது.

1. தலைமைப் பணியிடம் :

பில்லூர் நீர்த்தேக்கத்தில் கட்டப்படவுள்ள தலைமை பணியிட வேலைகள் மற்றும் இணைப்புப் பாலம் கட்டும் வேலைகள் குறிப்பிட்ட பருவ காலத்தில் கட்டப்பட வேண்டியிருப்பதனால் தமிழ்நாடு மின்சார வாரிய இலாகா பில்லூர் நீர்த்தேக்க நீர் மட்டத்தினை குறைக்க வேண்டியுள்ளது. அவ்வண்ணம் கட்டில் திறப்பான் சேதமடைந்துவிட்டமையால் 1990 ஆம் ஆண்டில் பருவ காலத்தில் 10 நாட்கள் மட்டும் தான் வேலை நடைபெற்றது. சென்ற ஆண்டில் ஏற்பட்ட கால தாமதத்தினை தவிர்ப்பதற்காகவும் மேற்கொண்டு வேலைகள் செய்வதற்காகவும் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் பில்லூர் அணைக்கட்டில் நீர்மட்ட அளவினை பிப்ரவரி 1991லிருந்து ஜூன் 1991 வரை குறைக்க அனுமதி கோரப்பட்டது. ஆயன் வண்டல் மண் நீருடன் வந்த காரணத்தால் ஏப்ரல் 1991இல் எட்டு நாட்கள் மட்டுமே வேலை செய்ய முடிந்தது. பில்லூர் அணையில் நீர்மட்டம் செப்டம்பர் 1991ஆம் மாதத்தில் மின்வாரியத்தினால் குறைக்கப்படவில்லை. தொடர்ந்து கேட்டுக் கொண்டதற்கிணங்க 22—4—1992 முதல் நீர்மட்டத்தை மின்சார வாரியம் குறைக்க ஆரம்பித்து 28—4—1992 அன்று வேலை செய்வதற்கு தேவையான அளவிற்கு நீர்மட்டம் குறைந்தது. ஏற்கெனவே, தோண்டப்பட்டுள்ள குழியில் தேங்கியுள்ள நீரை வெளியேற்றும் பணி அன்றே தொடங்கப்பட்டுள்ளது. நீரை வெளியேற்றும் பணி நிறைவு பெற்றதும் மண் தோண்டும் மற்றும் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும். இத் திட்டத்தினை ஜூன் **1993** க்குள் முடித்து பயனுக்குக் கொண்டு வர உத்தேசித்து வேலைகள் நடைபெற்று வருகின்றன.

2. இயல்பு நீர் மற்றும் சுத்திகரிப்பு நீர் கொணரும் பாதை :

தமிழ்நாடு மின்சார வாரியத்திடம், சுரங்கப்பாதை கட்டும் வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த வேலைக்கான உத்தரவு வழங்கப்பட்டு வேலை துவங்கப்பட்டுள்ளது.

3. சுத்திகரிப்பு நிலையம் :

இவ்வேலைக்கான உத்தரவு மே 1991–இல் வழங்கப்பட்டுள்ளது.

4. நீரேற்றிகள் :

இயல்பு நீர்மற்றும் சுத்த நீர் நீரேற்றிகள் உபகரணங்கள் 60 சதவிகிதம் பெறப்பட்டுள்ளது. மீதம் விரைவில் தருவிக்கப்படும்.

5. சுத்த நீர் கடத்தும் குழாய் :

நீர் கடத்தும் பிரிஸ்ட்ரஸ்டு கான்கிரிட் குழாயின் (1,500 (P.S.C. Pipe) மொத்த நீளமான 19.75 கிலோ மீட்டரில் இதுவரை 2.74 கிலோ மீட்டர் தயாரிக்கப்பட்டுள்ளது. 1,230 மீட்டர் நீளம் பதிக்கப்பட்டுள்ளது. மொத்த நீளமான 9 கிலோ மீட்டர் எம்.எஸ். குழாயில் (1,550 எம்.எம்.) (M. S. Pipe) இதுவரை 1,700 மீட்டர் தயாரிக்கப்பட்டுள்ளது. 700 எம்.எம். முதல் 400 எம்.எம். கல்நார் குழாய்கள் (A. C. Pipe) எல்லா குழாய்களும் பெறப்பட்டுவிட்டன. மொத்தம் 40 கிலோ மீட்டரில் இதுவரை 1.70 கிலோ மீட்டர் நீளம் பதிக்கப்பட்டுள்ளது. 8.40 கிலோ மீட்டர் கல்நார் குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

(6) 30 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள பெரிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

(7) 15 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

(8) நீர் கொணரும் குழாய் : (1,000 எம்.எம். விட்டமுள்ள பி.எஸ்ஸி.) (P.S.C. Pipe) :

மொத்த நீளமான 12.35 கிலோ மீட்டர் பிரிஸ்ட்ரஸ்டு கான்கிரிட் (P.S.C. Pipe) குழாயில் இதுவரை 7.20 கிலோ மீட்டர் தயாரிக்கப்பட்டு 2.95 கிலோ மீட்டர் பதிக்கப்பட்டுள்ளது. மொத்த நீளமான 183.41 கிலோ மீட்டர் ஏ. சி. குழாயில் 17.25 கிலோ மீட்டர் நீளத்திற்கு வேலைக்கான உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

(9) நில ஆர்ஜிதம் :

நில ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டிய அளவான 208.37 ஏக்கர் நிலத்தில் இதுவரை 102.74 ஏக்கர் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 106.13 ஏக்கர் நிலம், வெவ்வேறு கட்ட நிலையில் உள்ளது. தேவையான நிலத்திற்கு அனுமதிகள் வழங்கப்பட்டு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது.

(10) 20 நகரங்களுக்கு பகிர்மான குழாய் பதிக்கும் வேலை மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி :

மொத்தம் உள்ள 87 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணியில் இதுவரை ஐந்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டுள்ளது. மேலும், 14 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டி முடிக்கப்பட்டு குழாய் இணைப்பு வேலைகள் நடைபெற்று வருகிறது. மற்ற மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. மொத்த நீளமான 280.85 கிலோ மீட்டர் பகிர்மான குழாய் பதிக்கும் பணியில் இதுவரை 117.84 கிலோ மீட்டர் நீளம் பதிக்கப்பட்டுள்ளது. மற்ற வேலைகள் நடைபெற்று வருகிறது.

(11) 521 ஊரகக் குடியிருப்புகளுக்கான தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி, நீரேற்றி அறை, மேல் நிலைநீர்த்தேக்கத் தொட்டி, மற்றும் பகிர்மான குழாய் பதிக்கும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டத்தினை ஜூன், 1993க்குள் முடிப்பதற்கான எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

[நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 37318/குவ. 1/90-12, நாள் : 7—7—1992.]

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
86	129/86	உடுக்குறியிட்ட வினா எண். 3912, துணை வினா திரு. கே. ரமணி, எம்.எல்.ஏ., 24—3—1986.	உடுமலைத் தொகுதி மாளூர்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் பூலாங்கிணறு கூட்டு குடிநீர்த் திட்டம் வேலைகள் எந்தக் கால அளவிற்குள் முடிக்கப்படும்.

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்த நடவடிக்கை.

(5)	(6)
மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : டின் இறுதிக்குள் முடிவுறும்.	1986—87 நிதியாண் உடுமலைப்பேட்டை குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்கான உத்தேச மதிப்பீடு தொழில்நுட்பக் குழுவின் குறிப்பு களுடன் பரிந்துரைக்கப்பட்டு வாரியக் கூட்டத்தின் அனுமதி யுடன் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு அரசாணை எண். 567, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 2—9—1989இல் ரூ. 316.40 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டது. மேலும், திருத்திய மதிப்பீடு ரூ. 470.75 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் பெற அரசுக்கு அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திருத்திய மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் பெறுமுன்னர் பணிகளைத் தொடர்ந்து செய்ய வாரியக் கூட்டம் அனுமதித்துள்ளது. எனவே, இத்திட்டப் பணிகளுக்கான மதிப்பீடுகளுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் 10/90இல் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

76

உடுமலை ஒன்றியத்திலுள்ள மாளூர்ப்பட்டி, ஜோதிபாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டும் பணி தவிர அனைத்து பணிகளும் முடிவுற்று முன்னோடி குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உடுமலைப் பேட்டை குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தின் தற்போதைய பணிகளான சுத்திகரிக்கப்படாத நீர் ஏற்றம் நிலையத்திற் கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலனையில் உள்ளன. சுத்திகரிப்பு பணி நிலையத்திற்கான விரிவான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு வருகிறது. இவ்வபிவிருத்தித் திட்டத்திற்கான அனைத்து பணிகளும் 12/92க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுவதாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய இணை நிர்வாக இயக்குநர் கூறியுள்ளார்.

அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 12429/87—1, நாள் 27—5—1987.

(1)	(2)	(3)	(4)
87	52/87	உடுக்குறியிட்ட வினா எண். 3915, துணை வினா திரு. சு. திருமலைச்சாமிக் கவுண்டர், எம்.எல்.ஏ., 5—3—1987.	தண்ணீர் பஞ்சம் கடுமையாக உள்ள உடுமலைத் தொகுதியில் பூலாங்கிணறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், மாசிப்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றொரு அடிஷனல் திட்டம் ஆகிய மூன்று திட்டங்களையும் விரைவில் அமுல்படுத்துவது குறித்து

(5)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதற்கான தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

(6)

பூலாங்கிணறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிக்கப்பட்டு, பயனுக்கு கொண்டு வரப்பட்டு வாரியத்தினால் பராமரிக்கப்பட்டு வருகிறது. மாசிப்பட்டி கூட்டுக்குடிநீர்த் திட்டம் என்றும், மற்றுமொரு அடிஷனல் திட்டம் எதுவும் தனியே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் மேற்கொள்ளப் படவில்லை என்றும் தெரிவித்துள்ளார்.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 20920/குவ. 1/91–9, நாள் 25—5—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
88	131	87 உடுக்குறியிட்ட வினா எண். 10335, மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன், பேரவைத் துணைத் தலைவர், 26—3—1987.	வேடசந்தூர் வட்டம் எரியோடு நகரில் குடிதண்ணீர் தட்டுப்பாட்டை நிரந்தரமாகத் தவிர்க்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

உறுதிமொழியின் விவரம்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இக்கிராமப் பேரூராட்சிக்குக் குடிநீர் வழங்குவதற்கான திட்ட ஆய்வு வேலைகள் 1987–88ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

(6)

திண்டுக்கல் அண்ணா மாவட்டம், வேடசந்தூர் வட்டம், எரியோடு கிராமப் பேரூராட்சிக்கும் அவைகளின் கிராமங்களுக்கும் அழகாபுரி (குடகனார்) அணையிலிருந்து குடிநீர் வழங்குவதற்கான திட்ட மதிப்பீடு தயாரிப்பில் உள்ளது. குடகனார் அணையிலிருந்து குடிநீர் பெறுவதற்கு தண்ணீர் விநியோக துணைக் குழுவின் (Water utilisation sub-Committee அனுமதி கிடைத்தவுடன் மேற்கண்ட திட்டத்திற்கான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்படும்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 8153/குவ.1/92–4, நாள் : 8—9—1992.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்	உறுதிமொழியின் விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
89	180/87	உடுக்குறியிட்ட வினா எண் 12869 திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் எம்.எல்.ஏ. 10—11—1987.	விருதுநகரில் பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? அதன் விவரம் என்ன ?	மாண்புமிகு திரு க. இராசாராம் : ஆய்வுப் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. விருதுநகருக்கு மொத்தமாக 71 கி. மீ. நீளத்தில் பாதாள சாக்கடை அமைப்பதற்கான மதிப்பீடுகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அரசு இதற்கு ஒப்புதல் அளித்தவுடன் வேலைகள் தொடங்கப்படும்.

உறுதிமொழிக்கு குழுவின் குறிப்புரைகள்	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)	(7)
'' இதன் தற்போதைய நிலை என்ன ?''	விருதுநகர் நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க முதற் கட்டமாக ரூ. 235.13 இலட்சங்களுக்கு உத்தேச மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு அதை செயல்படுத்த விருதுநகர் நகராட்சியின் ஒப்புதல் கேட்கப்பட்டது. ஆனால் நகராட்சி நிர்வாக ஆணையர் விருதுநகர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கத் தேவையில்லை என கருத்து தெரிவித்துள்ளார். எனவே திட்டம் கைவிடப்பட்டது. ழ. நி. மற்றும் கு. வ. துறையின் அ.சா.கு. எண் 8191/குவ. 5/92-3, நாள் 24—6—1992.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.ஸ்	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
90	625/87	உடுக்குறியிட்ட வினா எண் 9850 திருமதி பி. லட்சுமி எல். எல். ஏ., 17—11—1987.	நெல்லித்துறை ஊராட்சி ஒன்றியத்திற்கென பவானி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கும் திட்டம் எப்போது ஆரம்பிக்கப்படும்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

உறுதிமொழிபின் விவரம்.
(5)

மாண்புமிகு திரு க. இராசாராம் திட்ட ஒப்புதல் பெற்றுஃ இட்டம் 1987–88 ஆம் நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அரசு எடுத்த நடவடிக்கை.
(6)

நெல்லித்துறை ஊராட்சிக்கென பவானி ஆற்று நீரை ஆதார மாகக் கொண்டு குடிநீர் வழங்கும் திட்டம் குடிநீர் வடிகால் வாரியத்தால் 1987–88 ஆம் ஆண்டில் பரிசீலிக்கப்பட்டு நிறைந்த வெளிக் கிணற்றின் மூலம் நெல்லித்துறை ஊராட்சியே தண்ணீர் விநியோகம் செய்வது போதுமான தாக இருந்ததால் கைவிடப்பட்டது.

நெல்லித்துறை பஞ்சாயத்தில் 8 குடியிருப்புகள் உள்ளன இவற்றிற்கு பவானி ஆற்றிலிருந்து நீர் வழங்க தற்போது கூட்டுக் குடிநீர் திட்டம் எதுவும் வாரியத்தின் நிதி ஒதுக் கீட்டில் இல்லை. ஆனால் இக்குடியிருப்புகளின் தற்போ தைய குடிநீர் வசதி பற்றிய விவரத்தை கீழே உள்ள பட்டி யலில் காணலாம்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 7525/கு.வ/1/91–12, நாள் 21—7—1992.

பட்டியல்.

வரிசை எண்.	குடியிருப்பின் பெயர்	மக்கட் தொகை.	மறுஆய்வின்படி வகை.	தற்போது நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு கிடைக்கும் குடிநீர் அளவு லிட்டரில்.	தற்போதைய குடிநீர்த் திட்டங்கள் விவரம்.		குறிப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)		(7)
1	நெல்லித்துறை	3,439	பகுதி குடிநீர் வசதி பெற்றது.	14	திறந்தவெளிக்கிணறு	3	..
					குழாய் கிணறுகள்		
2	நீராழி எச்.	144	பகுதி குடிநீர் வசதி பெற்றது.	20	குழாய் கிணறு கையிறைப்பாஞ்டன்	1	..
3	மானூர் எச்.	276	முழுமையான குடிநீர் வசதி பெற்றது.	40	திறந்தவெளிக்கிணறு	1	
					குழாய் கிணறு	1	
4	பரலிகாடு	220	முழுமையான குடிநீர் வசதி பெற்றது.	40	குழாய் கிணறு	1	
5	காரபதி	132	முழுமையான குடிநீர் வசதி பெற்றது.	40	திறந்தவெளி கிணறு	1	..
					குழாய் கிணறு	1	
6	வீரக்கால எச்.	150	முழுமையான குடிநீர் வசதி பெற்றது.	40	திறந்தவெளிகிணறு	1	...
					குழாய் கிணறு	2	
7	கொத்தகாடூர் எச்.	120	முழுமையான குடிநீர் வசதி பெற்றது.	40	திறந்தவெளி கிணறு	1	....
					குழாய் கிணறு.	2	
8	பிலலூர் எச்.	180	....	..	திறந்தவெளி கிணறு	1	இந்த நிதி ஆண்டில் இக் குடியிருப்பிற்குத் திட்டம் மேற்கொள்ள ஆவண செய்யப்படும்.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
91	626/87	உடுக்குறியிட்ட வினா எண் 13730 திருமதி டி. யசோதா, எம். எல். ஏ., 17—11—1987.	ஸ்ரீபெரும்புதூருக்கு பாலாற்று திட்டம் மூலம் குடிநீர் வழங்க அரசு அனுமதித்துள்ளதா ?

உறுதிமொழியின் விவரம்.

(5)

''திட்ட அறிக்கைக்கு தொழில் நுட்பக் குழு மற்றும் வாரியம் ஆகியவற்றின் ஒப்புதல் அளிக்கப்பட்டு விட்டதா ?''

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

ஸ்ரீபெரும்புதூர் பேரூராட்சி மற்றும் 23 வழிக் கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான திருத்திய உத்தேச மதிப்பீடு ரூபாய் 210.20 இலட்சங்களுக்கு தயாரிக்கப்பட்டு 8/91-ல் தொழில்நுட்பக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டது என்றும், அம்மதிப்பீட்டில் சில தொழில்நுட்ப மாறுபாடுகள் தவிர, மதிப்பீட்டுத் தொகையில் மாறுபாடு ஏதும் இல்லாத காரணத்தினால் வாரியக் குழுவின் ஒப்புதல் பெறப்பட வில்லை. தற்போது இத்திட்டத்திற்கான விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, தொழிற் நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு, சில பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விரைவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

(ந.நி. மற்றும் கு.வ. துறையின் அ.சா. கு. எண் 65049/குவ. 4/91/ந3, நாள் 29—5—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
92	269/89	உடுக்குறியிட்ட வினா எண் 3496, திரு ஆர். எஸ். ஸ்ரீதர், எம். எல். ஏ., 6—5—1989.	சென்னை மாநகராட்சி சைதாப்பேட்டையில் விளையாட்டு திடல்கள் அமைக்கும் திட்டம் குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு திரு வீரபாண்டி சோ. ஆறுமுகம் சென்னை மாநகராட்சி சைதாப்பேட்டையில் விளையாட்டு திடல்கள் அமைக்கும் திட்டம் நிறைவேற்றப்படும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

கிண்டியிலுள்ள தமிழ்நாடு விஞ்ஞான தொழில் நுட்ப மையம், 4—8—1989ல் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைத்த 0-9 ஏக்கர் காலி மனையில் குப்பைகள் கொட்டப்பட்டு விளையாட்டு திடல்கள் அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 435/9/எம்.இ. நாள் 27—10—92)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
93	52/90	கவன ஈர்ப்பு திரு எஸ். என். ராமகப்பு, எம்.எல்.ஏ. 23—1—1990.	சென்னை மாநகரில் வெறிநாய்களின் தொல்லை குறித்து.

உறுதிமொழியின் விவரம்:

(5)

மாண்புமிகு திரு கோ. சி. மணி (முன்னாள் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர்) நடமாடுகின்ற நாய்களை கட்டுப்படுத்தவும் வெறிநாய்களாக இருந்தால் உடனடியாக கொல்லவும் நாய்களுக்கு உரிமம் வழங்குவதற்கு கூட நல்ல பரிசோதனைக்குப் பிறகு தான் உரிமம் வழங்கப் பட வேண்டும் என்ற ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

சென்னை மாநகராட்சி சட்டத்தின் பிரிவுகள் 280 (பி) மற்றும் 281 கீழ் நடமாடுகின்ற நாய்களை கட்டுப்படுத்தவும் வெறி நாய்களை உடனடியாக கொல்லவும் தகுந்த நடவடிக்கை எடுக்கும்படி அரசு கடிதம் எண் 11909/மா.நா3/90 நா.ம.கு.வ.முறை நாள் 14—2—1992ல் சென்னை மாநகராட்சி ஆணையருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அ.சா.கு. எண் 11909/ந.தே.90, நாள் 27—10—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
94	96/90	உடுக்குறியிட்ட வினா எண் 3054 துணை வினா திரு எஸ்.எஸ். ராமகப்பு, எம்.எல்.ஏ., 20—3—1990.	ஆலங்குளம் பகுதியில் குடிநீர் வழங்கும் திட்டத்தை விரைவு படுத்துவதோடு, பணகுடாபுரம், வாடியூர், அச்சங் குண்டம், மரியதாயபுரம் லட்சுமிபுரம் கீழ கலிங்கல், மேல கலிங்கல் போன்ற கிராமங்கள் இந்த ஆய்வில் சேர்த்து அவற்றிற்கும் குடிதண்ணீர் வழங்குவது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு டாக்டர் த. பொன்முடி எள்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்துக்களை அரசு குறிப்பில் ஏற்றுக்கொண்டு பரிசீலிக்கும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை

(6)

சங்கரன்கோயில் ஆலங்குளம் மற்றும் 88 வழியோரா குடியிருப்புகளுக்கான குடிநீர் துணைத் திட்டம்.

முடிக்கப்பட்ட பணிகளின் விபரம்.
தலைமைப்பணியிடம் அமைக்கும் பணி.

நீருந்துக் கிணறுகளின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது. தரைமட்ட நீர் சேகரிப்பு தொட்டி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. குடியிருப்புகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

நீரேற்றுக் குழாய்கள் பதிக்கும் பணி (62.85 கிலோ மீட்டர் நீளம்.)

960 மீட்டர் நீளத்திற்கு குழாய்கள் பதிக்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கந்தம்பட்டி ஊத்துமலை, கம்புமுனை, சங்கரன்கோவில், ஆலங்குளம் ஆகிய இடங்களில் தரைமட்ட நீர் சேகரிப்பு தொட்டி, நீர் உந்தி நிலையங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல் பணி நடைபெற்றது வருகிறது.

கிளைக்குழாய் மற்றும் சார்நிலை கிளைக்குழாய் சிவில் பணிகளுக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

ஆலங்குளத்தில் பகிர்மானக் குழாய் 230 மீட்டர் நீளத்திற்கு பதிக்கப்பட்டு பணி முன்னேற்றத்தில் உள்ளது.

கிளைக்குழாய் மற்றும் சார்நிலை கிளைக் குழாய்கள் வழங்குதல் (தளவாடப்பணிகள்) மற்றும் வழியோர கிராமப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் வாரியத்தால பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்காக ஜனவரி திங்கள் முடிய ரூ. 56.64 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 30—6—1993க்கு முடிக்க உத்தேசிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழக்கு துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் 183/குவ. 5/92-3, நாள் 22-5-1992)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
95	151/00	உடுக்குறியிடாத வினா எண். 4637 திரு. ஆர். ரெங்காரம் எம்.எல்.ஏ., 24-3-1990.	பேராவூரணி தொகுதி கா. உஞ்சி விடுதியில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு டாக்டர் பொன்முடி என்கிற தெய்வசிகாமணி அடுத்த நிதியாண்டில் திட்டம் மேற்கொள்ளப்படும்.	கா. உஞ்சி விடுதி குடியிருப்புக்கு 30,000 லிட்டர் கொள்ளவுள்ள நீர்த்தேக்கத் தொட்டி, நிரேற்று நிலையம், குழாய்கள் பதித்தல் வேலைகளுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு களப்பணிகள் நடைபெற்று வருகின்றன. நடப்பு நிதியாண்டில் பணிகள அனைத்தும் நிறைவேற்றப்பட்டு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. [ந.நி.(ம)கு.வ. துறையின் அ.சா.கு. எண். 33475/குவ. 4/90.19 நாள், 25.12-1992]

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
96	221/90	உடுக்குறியிடாத வினா 4655 திரு ஆர் சிங்காரம், எம். எல். ஏ., 2—4—1990	பேராவூரணி நகரம் செங்கொல்லை பாரதியார் தெருவிற்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: திட்டப்பணிகள் மார்ச் 1991-இல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.	தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலவர் மற்றும் நிர்வாக இயக்குநரிடமிருந்து அறிக்கை கிடைக்கப் பெற்றவுடன் பதில் அனுப்பி வைக்கப்படும்.

அ.சா.கு. எண். 35214/கு.வ. 4/90, நாள் 10-7-1990.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
97	459/90.	உடுக்குறியிட்ட வினா எண். 2520, துணை வினா திரு. சா. பீட்டர் அல்போன்ஸ், எம்.எல்.ஏ., 8-5-1990.	செங்கோட்டை தாலுகா தெற்கு மேடு என்கிற கிராமம் புளியரை என்ற கிராமத்தோடு இணைந்து இருக்கிறது. ஒரே தெருவில் ஒரு பக்கம் புளியரையும் இன்னொரு பக்கம் தெற்கு மேடும் இருக்கிறது. தற்போது புளியரை பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட தண்ணீர் வழங்கப்படுகிறது. தெருவின் மறு பக்கத்தில் உள்ள தெற்கு மேடு பகுதிக்கும் தண்ணீர் வழங்குவது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.	துறை எடுத்துள்ள நடவடிக்கை
(5)	(6)
மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: உறுப்பினர் அவர்கள் கருத்தினைக் கொண்டு விரைவிலே அங்கே குடிநீர் வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும்.	தெற்குமேடு கிராம குடிநீர்த் திட்டத்திற்கான நீராதாரம் தெரிவுசெய்யும் பணி முடிவு பெற்றுள்ளது. ஒரு நிறந்த வெளிக்கிணறு நீராதாரமாகக் தோண்டுவதற்கு ஏற்ப சோதனை கிணறு அமைக்கும்பணி விரைவில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. நீராதாரம் தோற்றுவிக்கப்பட்டபின் மதிப்பீடு தயார் செய்து திட்டப் பணிகள் செயல்படுத்தப்படும்.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 39907/கு.வ. 5/90-21 நாள் 25-5-1992.)

(1)	(2)	(3)	(4)
98	159-91	கவன ஈர்ப்புத் தீர்மானம் திரு. சி. ஞானசேகரன், எம்.எல்.ஏ. 19-9-1991.	வேலூர் தோட்டப் பாளையம் காகிதப் பட்டறை ஆகிய இடங்களில் 8 மாதமாக குடிநீர் வராதது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

துறை எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : பரிவோடு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

தோட்டப்பாளையம், காகிதப்பட்டறை ஆகியவை வேலூர் நகராட்சியைச் சேர்ந்த பகுதிகளாகும். இப்பகுதிகளின் மக்கள் தொகை 21,960 ஆகும். அப்பகுதிகளில் உள்ள 2,114 வீடுகளில் 1,946 வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு உள்ளது. 20-11-1991 முதல் குடிநீர் ரேரக விநியோகிக்கப்பட்டு வருகிறது. சாதாரண நாட்களில் குடிநீர் காலை 6.00 மணி முதல் 8.30 வரை காகிதப்பட்டறை குடிநீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து கொடுக்கப்படுகிறது. மேலும், தோட்டப்பாளையத்தில் 12 கையிறைப்பான்களும், காகிதப்பட்டறையில் 5 கையிறைப்பான்களும் பயனில் இருந்துவருகிறது. நகராட்சியால் லாரி மூலம் இப்பகுதிகளுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

[ந.நி.(ம) கு.வ. துறையின் அ.சா.கு. எண். 56143/குவ 4/91-9, நாள் 6—7—1992]

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
99	288-91.	உடுக்குறியிட்ட வினா எண். 89, துணை வினா திரு. எஸ். எஸ். இதாமகப்பு, எம்.எல்.ஏ., 26-9-1991.	சேந்தபுரம், அதிசயபுரம் அச்சம்குண்டம், இலட்சுமிபுரம் வி.கே. புதூர் பகுதிகளின் குடிநீர் பிரச்சனையைத் தீர்க்க வசதியாக இருக்கும் என்பதால் தாமிரபரணியிலிருந்து ஒரு திட்டத்தை உருவாக்க அரசு மூன்வருமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

துறை எடுத்துள்ள நடவடிக்கை.

(5)

(6)

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி : அவருடைய கோரிக்கையை பரிசீலனைக்கு இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

1. சேந்தபுரம்.—சேந்தபுரம் கிராம குடிநீர் வசதி உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். சங்கரன்கோவில் கூட்டுக்குடிநீர் திட்டத்தில் சேர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் ஆராயப்பட்டு வருகின்றன.

2, அதிசயபுரம்.—இக்கிராமத்திற்கு நடப்பு நிதியாண்டில் (1992—93-ல்) குடிநீர் திட்டம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

53-382—22

அச்சம்குண்டம்.—இக்குடியிருப்பு நிதியாண்டு (1991—92) திட்டப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இட்டப் பணிகள் விரைவில் நிறைவேற்றப்படும்.

1. லெட்சுமிபுரம்.—இக்குடியிருப்பு முழு அளவு குடிநீர் வசதி பெற்ற குடியிருப்பாகும். எனவே வேறு திட்டம் ஏதும் பரிசிலனையில் இல்லை.

5. வி.கே. புதூர்.—இக்கிராமத்தில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய ஒரு மின்விறைப்பான் திட்டம் (1990—91)-ல் நிறை வேற்றப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது மேற்கொண்டு திட்டம் எதுவும் பரிசிலனையில் இல்லை.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறையின் அரசுக் கடிதம் எண். 63208/குவ. 5/91-6 நாள் 25-5-1992.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
100	372/91	குறுகிய கால வினா எண். 4840 நுவை வினா திரு. கே. ..... இரும்பு கேல்டிங் பைப் போடப்பட்டுள்ளது. முனிவேங்கடப்பன். 4—10—1991.	பிளாஸ்டிக் பைப் போட்டால் இத்தத் திட்டம் இன்னும் மிகக் குறைந்த மதிப்பீட்டிலே செய்ய முடியும் என்பதை அரசு அறியுமா என்பது குறித்து.

உறுதி மொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : உறுப்பின ருடைய கோரிக்கையை அரசு கவனமாகப் பரிசிலிக்கும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. முதல் பகுதியில், பெள்ளாகரம், கடத்தூர், பி. மல்லாபுரம், பாப்பிரெட்டிப் பட்டி, அரூர், கம்பைநல்லூர், ஊத்தங்கரை பேரூராட்சி கள் மற்றும் எட்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கு செயல் படுத்தவும், இரண்டாவது பகுதியாக கிருஷ்ணகிரி நகராட்சி, பாப்பாரப்பட்டி, பாலக்கோடு, மாரண்ட ஹள்ளி நாகஜோன ஹள்ளி, கரியமங்கலம், காவேரிப்பட்டினம், பர்கூர் பேரூராட்சிகளுக்கும், 5 ஊராட்சி ஒன்றியங் களுக்கும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, இத்திட்டத்தினால், பயன்பெறும் குடிநீரின் அளவு மிகவும் அதிகமாக இருக்கும்.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
101	373/91	குறுகிய கால வினா எண். 4840, துணை வினா டாக்டர் வெ. புருஷோத்தமன், எம். எல். ஏ., 4—10—1991.	ஒகனேக்கல் கூட்டு குடிநீர்த் திட்டத்திற்குப் பதிலாக நாகமலை-பென்னகரம் கூட்டு குடிநீர்த் திட்டத்தை ஆய்வு செய்தால் பாதி செலவுதான். ஆகவே அந்தத் திட்டத்தை அரசு ஆய்வு செய்யுமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)
மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி ; உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.	ஒகனேக்கல் கூட்டுக் குடிநீர் திட்ட மதிப்பீட்டில் பென்னகரம் பேரூராட்சி சேர்க்கப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டிலும் காவேரி ஆற்றை தலைப்பிடமாகக் கொண்டு ஒகனேக்கல் என்னும் இடத்தில் குடிநீரை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒகனேக்கல்லில் குடிநீர் எடுக்க உத்தேசித்துள்ள இடத்தின் தரைமட்ட அளவு +250.00 மீட்டர். பென்னகரத்தின் தரை மட்ட அளவு +530.00 மீட்டர். பென்னகரம் ஒகனேக்கல்லில் இருந்து சுமார் 13 கி.மீ. தொலைவில் உள்ளது. எனவே இத்திட்டத்தில் (530.00 மீட்டர்+250 மீட்டர்+280 மீட்டர்). 280 மீட்டர் உயரத்திற்கு நீர் ஏற்றப்பட வேண்டியுள்ளது.

நாகமலை என்னும் இடம், காவேரி ஆறும் மேட்டூர் அணையின் நீரும் (Tail End) சங்கமிக்கும் இடத்திலும் ஒகனேக்கல் மேற்பகுதியிலும் அமைந்துள்ளது. எனவே குடிநீர் நாகமலையிலிருந்து, பென்னகரத்திற்கு எடுக்க சுமார் 350 மீட்டர் உயரத்திற்கு ஏற்றப்பட வேண்டும். நாகமலைக்கும் பென்னகரத்திற்கும் இடைபட்ட தூரம் 27 கி.மீ. ஆகும். மேலும் இக்குடிநீரை எடுத்துச் செல்ல பள்ளத்தாக்குகளையும் காடுகளையும் கடக்க வேண்டும். அதனால், பிரதானக் குழாய்களின் நீளமும் அதிகரிக்கும். எனவே ஒகனேக்கலிலிருந்து பென்னகரத்திற்கு குடிநீர் எடுக்கும் திட்டத்

தையும், நாகமலையிலிருந்து பென்னகரத்திற்கு குடிநீர் எடுக்கும் திட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாகமலையிலிருந்து பென்னகரத்திற்கு குடிநீர் எடுக்கும் திட்டத்திற்கான தோராய செலவினங்கள் மிக அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பொறியியல் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 63190/குவ. 1/91, நாள் : 2—7—1992.

வரிசை எண்.	உறுதி மொழி. எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
102	308/92	உடுக்குறியிட்ட வினா 4036, துணை வினா டாக்டர் ஜெய்சன் ஜேக்கப், எம்.எல்.ஏ., 9—4—1992.	ஆரணி பகுதியிலே ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்து குடிநீர் பிரச்சினைக்கு ஒரு தீர்வுகாண அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : பல்வேறு நிலைகளை ஆராய்ந்து ஆழ்க்குழாய்க் கிணறுகள் அமைக்கப்படும்.	தற்போதைய மக்கட் தொகையின்படி ஆரணி நகராட்சிப் பகுதியில் நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் தேவைப்படும். குடிநீரின் அளவு 10,97,250 லிட்டர் ஆகும். தற்போது நகராட்சியினரால் வழங்கப்பட்டு வரும் குடிநீரின் அளவு 4,16,400 லிட்டர் ஆகும். இதன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு சுமார் 27 லிட்டர் தான் கிடைக்கிறது. மேலும் அப்பகுதியில் ஆழ்துளைக் கிணறுகளின் மூலம் கிடைக்கும் நீரின் உப்புத் தன்மை அதிகமாக இருப்பதால் இதனை குடிநீராக பயன்படுத்த இயலாது. எனவே, இப்பகுதியில் குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க பாலாறு குடிநீர்த் திட்டத்தினை நிறைவேற்றுவது ஒன்றுதான் சிறந்த பலனைத் தரும். ஆரணி நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. ஆய்வுப் பணிகள் முடிவடைந்ததும் திட்டத்தின் மதிப்பீடுகள் ஒப்புதல் பெறப்பட்டு செயல்படுத்தப்படும்போது இந்நகரம் முழுவதற்கும் தேவையான குடிநீர் கிடைக்கும். (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையின் அ சா கு. எண். 28191/குவ. 4/92-5, நாள் 25—11—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
103	353/92	உடுக்குறியிட்ட வினா 3311 திரு. வெ. பழனிசாமி, எம்.எல்.ஏ. 21—4—1992.	திருப்பூர் இரண்டாவது கூட்டுக் குடிநீர் திட்டப் பணி எந்த நிலையில் உள்ளது எப்போது முடிக்கப்படும் என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.
(5)

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : 1992—93ஆம் ஆண்டு முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அரசு தனது ஆணை எண். 1746, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள் 25—11—1983ல் திருப்பூர் நகராட்சி மற்றும் அன்னூர், அவிநாசி நகர பஞ்சாயத்துக்களின் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 852.39 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியது. மேட்டுப் பாளையம் அருகில் பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது.

நிலம் கையப்படுத்துவதில் ஏற்பட்ட தாமதம், விலைகள் ஏற்றம், திருப்பூருக்கு கூடுதல் பகிர்மானக் குழாய்கள் அமைக்க வேண்டிய நிலை, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கொள்ளளவு மாற்றப்பட்டது. ஆகியவற்றின் காரணமாக திருத்திய மதிப்பீடு ரூபாய் 2,034.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு அரசு ஆணை எண். 321, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 30—3—1990ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் திருப்பூர் நகராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கவும், அன்னூர், அவினாசி திருமுருகன்பூண்டி, 15. வேலம்பாளையம் ஆகிய பேரூராட்சிகளுக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கவும், 44 வழியோரக் கிராம பஞ்சாயத்திற்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் தற்போதைய பணி விவரம் பின்வருமாறு :

தலைமைப் பணியிடத்தில் நீர் சேகரிக்கும் கிணறு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பிரதானக் குழாய் அமைக்கும் பணியின் மொத்த நீளமான 54.135 கி.மீ-ல் 33.715 கி.மீ. நீளத்திற்கு முடிவுற்றுள்ளது. சுத்திகரிப்புப் பணி நிலைய வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பூர் பகுதி 1, 2, 3, 4க்கான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன.

பகுதி 5, 6 (மேம்மட்ட பகுதி) ஆகியவற்றிற்கான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. பகுதி 6 (மேல் மட்ட பகுதி) பகுதி 7க்கான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி முடிவுற்றுள்ளது பகிர்மானக் குழாய் பதிக்கும் பணி மொத்தமுள்ள 110 கி. மீ-ல் 78.458 கி.மீ. நீளத்திற்கு முடிவுற்றுள்ளன.

திருப்பூர் இரண்டாவது கூட்டுக்குடிநீர்த் திட்டப் பணிகள் யாவையும் 30—6—1993க்குள் முடிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அலுவல் சாரற்ற குறிப்பு எண். 28174 குவ. 1192—3, நாள் : 27—8—1992.)

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
104	354/92	உடுக்குறியிட்ட வினா 3311, துணை வினா திரு. வெ. பழனிசாமி, எம்.எல்.ஏ., 21—4—1992.	தொழில் நகரமான திருப்பூர் நகரத்திற்கு முன்னுரிமை அளித்து இவ்வாண்டு இறுதிக்குள் கூட்டுக்குடிநீர் திட்டத்தை முடித்துத் தருகிற வாய்ப்பினை அரசு உருவாக்கித் தருமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.
(5)

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : நிச்சயமாக இந்த நடப்பாண்டிற்குள் இந்தத் திட்டத்தை முடிப்பதற்கு எல்லா விதமான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)

அரசு தனது ஆணை எண். 1746, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, நாள்: 25—1—1983ல் திருப்பூர் நகராட்சி மற்றும் அன்னூர், அவிநாசி, நகர பஞ்சாயத்துக்களின் குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ. 852.39 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியது. மேட்டுப்பாளையம் அருகில் பவானி ஆற்றினை நீராதாரமாகக் கொண்டு இத்திட்டம் வடிவமைக்கப்பட்டது. நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட காலதாமதம், விலைகள் ஏற்றம், திருப்பூருக்கு கூடுதல் பகிர்மானக் குழாய்கள் அமைக்க வேண்டிய நிலை, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கொள்ளளவு மாற்றப்பட்டது ஆகியவற்றின் காரணமாக திருத்திய மதிப்பீடு ரூபாய் 2,034.00 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு அரசு ஆணை எண். 321, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 30—3—1990ல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் திருப்பூர் நகராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 110 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கவும், அன்னூர், அவிநாசி திருமுருகன் பூண்டி, 15 வேலம்பாளையம் ஆகிய பேரூராட்சிக்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 70 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கவும், 44 வழியோரக் கிராமப் பஞ்சாயத்திற்கு நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் தற்போதைய பணி விபரம் பின்வருமாறு :

தலைமைப் பணியிடத்தில் நீர்சேகரிக்கும் கிணறு அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. பிரதானக் குழாய் அமைக்கும் பணியின் மொத்த நீளமான 54.135 கி.மீட்டரில் 33.715 கி.மீ. நீளத்திற்கு முடிவுற்றுள்ளது. சுத்திகரிப்புப் பணி நிலைய வேலைகள் நடைபெற்று வருகின்றன. திருப்பூர் பகுதி 1, 2, 3, 4க்கான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி நடைபெற்று வருகின்றன. பகுதி 5, 6 (கீழ்மட்ட பகுதி) ஆகியவற்றிற்கான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி முடிவுறுக் தருவாயில் உள்ளது. பகுதி 6 (மேல்மட்ட பகுதி) பகுதி 7க்கான மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டும் பணி முடிவுற்றுள்ளது பகிர்மானக் குழாய் பதிக்கும் பணி மொத்தமுள்ள 110 கி. மீட்டரில் 78,458 நீளத்திற்கு முடிவுற்றுள்ளது.

திருப்பூர் இரண்டாவது கூட்டுக்குடிநீர் திட்டப் பணிகள் யாவையும் 30—6—1993க்குள் முடிக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 28173/குவ. 1/92-3, நாள் 23—9—1992.)

வரிசை எண். (1)	உறுதி மொழி எண். (2)	பார்வை. (3)	பொருள். (4)
105	378/92	உடுக்குறியிட்ட வினா 5305, துணை வினா திரு. தே. ரத்தின வேல், எம்.எல்.ஏ., 27-4-1992.	திருவெறும்பூர், துவாக்குடி, கூத்தப்பார் குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் நிதியொதுக்கி திட்டப் பணிகள் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பது குறித்து.

உறுதி மொழியின் விவரம். (5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : இந்த ஆண்டிலே பணிகள் தொடங்குவதற்கான ஆய்வுகள் நடந்து கொண் டிருக்கின்றன.	திருவெறும்பூர், துவாக்குடி, கூத்தப்பார் ஆகிய இடங்களுக் கான குடிநீர்த் திட்டத்திற்கான கருத்துரு ரூ. 525.90 இலட்சங்களுக்கு வாரியத்தால் அனுமதிக்கப்பட்டு அரசின் நிர்வாக ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. கருத் துருவை அரசு பரிசீலனை செய்ததில் தற்போது அரசின் நிதிநிலைமை சரியில்லாத காரணத்தால் 1992–93 நிதி ஆண்டில் புதிய குடிநீர்த் திட்டங்களுக்கான நிர்வாக ஒப்புதல் அளிக்க இயலாது என்று முடிவெடுக்கப்பட்டுள்ள தால் இத்திட்டத்திற்கு தற்போது ஒப்புதல் அளிக்க இயலவில்லை.

(நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வடிகால் துறையின் அ.சா.கு. எண். 28199/குடி.வ5/92–3, நாள் 16–11–1992.

நிதித் துறை

(1)	(2)	(4)	(3)
106	499(90	உடுக்குறியிட்ட வினா 693, துணை வினா திரு. வே. தங்க பாண்டியன், எம்.எல்.ஏ., 20–8–1990.	அரசுத் துறை நிறுவனங்களிலிருந்து வேலை வாய்ப்பு அலு வலகத்திற்குப் பட்டியல் கேட்கும்போதே 30 சதவீதம் பெண்களை அனுப்ப வேண்டும் எனக் கேட்க வேண்டும் என்பது குறித்து.

(5)	(6)
மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது குறித்து அரசு யோசிக்கும்.	அரசாணை நிலை எண் 89, பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள் 11–2–1989-ன் அரசுப் பொது நிறுவனங்களில் நிரப்பப்பட வேண்டிய காலியிடங்களிலும் ஏனைய அரசுத் துறைகளில் அமுல் படுத்தப்பட வேண்டியது போல 30 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்று ஆணையிடப்பட்டுள்ளது அதன்படி, நியமனம்

(6)—தொடர்ச்சி

செய்ய அரசு நிறுவனங்கள் தேவையான அளவு பெண்களை வேலை வாய்ப்பு அலுவலகத்தில்பெற்று, நியமனம் செய்ய வேண்டும். எனவே, அதன்படி உறுதிமொழி ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளது.

(நிதித் துறையின் அ. சா.கு. எண். 2360/பி.ப்பி.இ./91-2 நாள் 9-9-10992.)

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல துறை.

(1)	(2)	(3)	(4)
107	158/92	மாவியக் கோரிக்கை எண். 32ன் கீழ் மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை, 23-3-1992.	205 பிற்பட்டோர் மாணவர் விடுதிகளுக்கு பிரஷர் குக்கர்களும் 80 விடுதிகளுக்கு மாவரைக்கும் எந்திரங்களும் வழங்குவது குறித்தும்.

(5)

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, இவ்வாண்டு வழங்கப்படும்.

(6)

அரசு ஆணை (நிலை) எண். 32, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, நாள் 14-5-1992ல் 205 விடுதிகளுக்கு பிரஷர் குக்கர்கள் வழங்கவும், அரசு ஆணை (நிலை) எண். 33, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை நாள் 14-5-1992ல் 80 விடுதிகளுக்கு மாவரைக்கும் எந்திரங்கள் வழங்கவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(அ.சா.கு. எண். 8300/பிந 1/92-2, நாள் 14-7-1992.)

பொதுப்பணித் துறை.

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
108	38/87	உடுக்குறியிட்ட வினா எண். 9573, துணை வினா திரு. கடலூர் இ.வி. வேலு, எம்.எல்.ஏ., 4-3-1987.	புதுவைக்கும் கர்நாடக மாநிலத்திற்கும் இடையே செல்கின்ற சாலையை தேசிய நெடுஞ்சாலையாக ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பது பற்றி.

உறுதிமொழியின் விவரம்.	குழுவின் குறிப்புரைகள்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(5)	(6)	(7)
இதை ஒரு கோரிக்கையாக ஏற்றுக் கொண்டு மத்திய அரசாங்கத்திற்கு நினைவு படுத்துவதற்கு நான் நிச்சயமாக தயாராக இருக்கிறேன்.	மைய அரசிடமிருந்து பதில் வந்துள்ளதா ? தற்போதைய நிலை என்ன ? (16-12-1991 நாளன்று நடைபெற்ற குழுவின் குறிப்புரை).	மாநில சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக உயர்த்துவது குறித்து மைய அரசு ஒரு புதிய அறிக்கை கேட்டது. 16 மாநில சாலைகளை தேசிய நெடுஞ்சாலைகளாக உயர்த்த கருது மாறு மைய அரசு 26-3-1992ல் மாநில அரசால்

(6)

கேட்கப்பட்டுள்ளது. இதில் கடலூர்—அரசூர்-திருவண்ணாமலை — வேலூர் — சித்தூர் மாநில சாலையும் திருவண்ணாமலை ஊத்தங்கரை — கிருஷ்ணகிரி சாலையும் அடங்கும். இவ்விரு சாலைகளையும் தேசிய நெடுஞ்சாலைகளாக உயர்த்தி மத்திய அரசு ஆணை வழங்கினால் புதுவையிலிருந்து புதுவை — விழுப்புரம் சாலை வழியாகவும், அரசூர் திருவண்ணாமலை வேலூர் அல்லது அரசூர் — திருவண்ணாமலை ஊத்தங்கரை வழியாகவும், பெங்களூர் சென்று அடையலாம். இப்பொருள் குறித்து மைய அரசின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(பொ.ப. துறையின் அ.சா.கு. எண். 5515/எச்.வி.1/92-2, நாள் 31—7—1992.)

வரிசை எண். (1)	உறுதி மொழி எண். (2)	பார்வை. (3)	பொருள். (4)
109	117/90	உடுக்குறியிட்ட வினா எண். 5438, துணை வினா திரு. யு. கே. வெள்ளிங்கிரி, எம்.எல்.ஏ., 23—5—1990.	நிரமணத்தில் கிடைக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தி நில தொழிற்சாலைகளை அமைக்க அரசு முன் வருமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.
(5)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : 16—12—1989 அன்று நடைபெற்ற தொலைநோக்கு முக்கியத்துவத் திட்டக் கூட்டத்தில் இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்திட தீர்மானிக்கப்பட்டது. அதன்படி காவிரிப் படுகையில் கிடைக்கும் இயற்கை எரிவாயுவைக் கொண்டு மின் உற்பத்தித் திட்டங்களைச் செயற்படுத்த மின் வாரியம் உத்தேசித்துள்ளது.

துறை எடுத்துள்ள நடவடிக்கை.
(6)

காவிரி நதிப்படுகையில் கிடைக்கும் எரிவாயுவைப் பயன்படுத்தி வாயு சுழலி (Gas Turbine) மின்நிலையங்களை அமைக்க தமிழ்நாடு மின்வாரியம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அதன்படி, தஞ்சாவூர் மாவட்டம் நரிமணத்தில் 2 × 5 மெகாவாட் நிறுவனத் திறன் கொண்ட மின் நிலையம் ஒன்றை அமைக்கவுள்ள மின் வாரியத்தின் திட்டத்திற்கு, மைய அரசின் மின் அதிகார மன்றமும் திட்டக் குழுவும் அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் எரிவாயுவை அளிப்பதற்கு மைய அரசின் பெட்ரோலிய் அமைச்சகம் இசைவு தெரிவித்துள்ளது. இத் திட்டம் மார்ச் 1991-இல் செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதைத் தவிர, மின் உற்பத்திக்கென (600 மெ.வா.) 2 லட்சம் கன மீட்டர் எரிவாயு வழங்க மைய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. இதைப் பயன்படுத்தி, முதல் கட்டமாக 300 மெகா வாட் திறன் கொண்ட வாயு/மின் நிலையம் அமைக்க, தஞ்சை மாவட்டம் பிள்ளைபெருமாள்நல்லூரில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கை தமிழ்நாடு மின் வாரியத்தால் தயாரிக்கப்படுகிறது. மைய அரசின் அனுமதி கிடைத்த பின்னர் திட்டப் பணிகள் தொடங்கப்பெறும்.

குழுவின் குறிப்புரைகள்.

(7)

நரிமணத்தில் மின்நிலையம் துவங்கப்பட்டுள்ளதா? பிள்ளை பெருமாள் நல்லூரில் மின் நிலையம் அமைக்கும் பணி எந்நிலையில் உள்ளது? இதற்கு மைய அரசின் அனுமதி கிடைத்து விட்டதா?

துறை எடுத்துள்ள நடவடிக்கை.

(8)

நரிமணம் எரி வாயு சுழலி மின் திட்டத்தின் கீழ் ஒவ்வொன்றும் 5 மெகா வாட் திறன் கொண்ட இரண்டு மின்சுழலிகளும் நிறுவப்பட்டு 18—10—1991 சோதனை ஓட்டம் செய்யப்பட்ட பின்னர் பிரிவு 1, 14—1—1992 அன்றும் பிரிவு 2, 17—1—1992 அன்றும் மின் உற்பத்தியைத் தொடங்கி மின் வாரிய மின்கட்டமைப்புடன் இணைக்கப் பட்டுள்ளன.

2. பிள்ளைப்பெருமாள்நல்லூரில் முதற் கட்டமாக 300 மெகாவாட் திறன் கொண்ட வாயு சுழலி மின் நிலையம் அமைக்கத் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்திற்கு மைய மின் அதிகாரமன்றமும் மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையும் ஒப்புதல் அளித்துள்ளன. ஆனால் இம்மின் நிலையத்திற்குத் தேவையான எரிவாயுவை உற்பத்தி செய்யும் பி. ஒய். 1 மற்றும் பி. ஒய். 3 எண்ணெய்க் கிணறுகளில், நிதிநிலை காரணமாக எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்தியைத் தொடங்கவியலாதென மைய அரசு தெரி வித்துள்ளது. எண்ணெய் மற்றும் நிலவாயு கமிஷன் இந்த பி. ஒய். 3 கிணற்றில் வாயு உற்பத்தி செய்யும் பணியை தனியாரிடம்/கூட்டுமுனைவோரிடம் ஒப்படைக்க லாம் என தெரிவித்துள்ளது. இது குறித்து, இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. தமிழ்நாட்டில் தற் போதைய புதிய தொழில் வளர்ச்சிக் கொள்கைப்படி பிள்ளைபெருமாள்நல்லூர் வாயு சுழலி மின்நிலையத்தை நுவியாரிடம் ஒப்படைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

(அ.சா.கு.எண். 72265/யு1/90-6, நாள் 30—7—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	உறுதிமொழியின் விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
110	140/90	உடுக்குறியிட்ட வினா எண். 2087, திரு. அ. கணேசமூர்த்தி, எம்.எல்.ஏ., 24—3—1990.	மேற் பவானி பாசனத்தில் ஆயக்கட்டு பகுதி தற்போது விரிவாக்கப்பட்டு அதிகமான நிலப் பரப்பிற்கு அனுமதி வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா என்பது குறித்து.	மாண்புமிகு திரு. துரைமுருகன் : மேற் பவானி திட்டத்தில் புதியதாக 20,419 ஏக்கர் நிலங்களைச் சேர்ப் பதற்காக செயற் குறிப்பு பரிசீலனை யில் உள்ளது.

குழுவின் குறிப்புரை.

(6)

மேற்பவானி பாசனத்தில் ஆயக்கட்டு பகுதி தற்போது விரிவாக் கப்பட்டு அதிகமான நிலப் பரப்பிற்கு அனுமதி வழங்கும் செயற் குறிப்பு குறித்து தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் கருத்துருவின் மீது பொறியாளர் (பாசனம்) அவர்களின் கருத்துருவின் மீது நில நிர்வாக ஆணையரின் கருத்துரைகள் பெறப்பட்டு விட்டதா?

துறை எடுத்துள்ள நடவடிக்கை.

(7)

20,374 ஏக்கர் நிலங்களை மேற்பவானி திட்ட ஆயக்கட்டில் சேர்ப்பது பற்றிய ஒட்டு மொத்தக் கருத்துருவை தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் அனுப்பியிருந்தார். அக் கருத்துருவின் மீது நில நிர்வாக ஆணையர் மேற்பவானி ஆயக்கட்டில் 20,359.10 ஏக்கர் நிலங்களை ஆயக்கட்டில் சேர்ப்பதற்கும், ஆயக்கட்டில் சேர்க்கத் தகுதியற்ற நில

(7)—தொடர்ச்சி.

களான கிணறு, நடைபாதை, வாய்க்கால், நத்தம் புறம்போக்கு என மாற்றப்பட்டுள்ள நிலங்கள், பெரியார் மாவட்டத்தில் 4,022 ஏக்கரும், திருச்சி மாவட்டத்தில் 134.58 ஏக்கரும் ஆயக்கட்டிலிருந்து நீக்கலாம் எனவும் பரிந்துரை செய்திருந்தார். ஏற்கனவே மேற்கூறிய திட்ட ஆயக்கட்டில் சேர்க்கப்பட்டுள்ள ஆயக்கட்டுகளுக்கு போதுமான நீர் இல்லை. 1986-87, 1988-89 மற்றும் 1989-90 ஆகிய ஆண்டுகளில் இரண்டாம் போகத்திற்கு தண்ணீர் வழங்க இயலவில்லை. இந்நிலையில் மேலும் புதிதாக நிலங்களை சேர்ப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லாததால் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் செயற் குறிப்பு, அரசாணை நிலை எண். 444, பொதுப்பணித்துறை, நாள் 16—3—1992-ல் நிராகரிக்கப்பட்டுள்ளது.

(அலுவல் சார்பற்ற குறிப்பு எண். 63429/சி.பா. 1/90-4, நாள் 27—7—1992).

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	டொருள்.
(1)	(2)	(3)	(4)
111	366/91	உடுக்குறியிட்ட வினா எண். 60, துணை வினா திரு. க. பழனிசாமி, எம்.எல்.ஏ., 4—10—1991.	விட்டு மின் இணைப்பிற்கு அனுமதி பெறுவதற்கான வைப்புத் தொகையை குறைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிப்பாரா என்பது குறித்து.
		உறுதிமொழியின் விவரம்.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
		(5)	(6)
		மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், அமைச்சர் (பொதுப்பணி) இது குறித்து அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.	விட்டு மின் இணைப்பிற்கு அனுமதி பெறுவதற்காக வசூலிக்கப்படும் வைப்புத் தொகையை மின் வாரியம் உயர்த்தவில்லை. சட்டமன்ற உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்களின் வினா வாரியத்தினால் தற்போது வசூலிக்கப்படும் மேம்பாடு கட்டணம் பற்றியதாக இருக்குமானால் வாரிய ஆணை எண். 136, தேதி 18—6—1991-ன்படி மேம்பாட்டுக் கட்டணம் ரூ. 500 ஆக வசூலிக்கப்பட்ட தொகை வாரிய ஆணை எண். 267, தேதி 7—10—1991-ன்படி சிறிய மற்றும் ஏழைகளின் விட்டு மின் இணைப்புகளுக்கு (5 ஆம்ஸ் அல்லது அதற்கும் குறைவான மீட்டர் பொறுத்தப்படும் இணைப்புக்கு). ரூ. 250 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இவ்வாணை 10—10—1991-க்கு பிறகு மின் இணைப்பு பெறுபவர்களுக்கு பொருந்தும். (அ.சா.கு. எண். 129960/மு2/91, நாள் 9—9—1992).

வரிசை எண். (1)	உறுதி மொழி எண். (2)	பார்வை. (3)	பொருள். (4)
112	5/92	உடுக்குறியிட்ட வினா எண். 1025, துணை வினா திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள், எம்.எல்.ஏ., 30— 1— 1992	ஏற்கனவே வெட்டப்பட்ட கிணறுகளை ஆழப்படுத்த இந்த அடி நிர்ணயம் இல்லாமல் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முயற்சியை மேற்கொள்வார்களா எனபதை அறிவது குறித்து.

உறுதிமொழியின் விபரம். (5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : உரிய நடவடிக்கைகள் நடார்று நிறுவனத்திடம் மேற்கொள்ளப்படும்.	ஏற்கனவே வெட்டப்பட்ட கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு இடைவெளி தூரம் பின்பற்றப்பட வேண்டிய அவசியமில்லை என்று பொதுப்பணித்துறை நில நீர் பிரிவு எடுத்துரைத்து அத்தகைய நிபந்தனை நீக்கப்படவேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தது. அதனை ஆய்வு செய்த நபார்டு நிறுவனம், கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், நில நீர் கோட்பாடு ஆகிய இடைவெளி தூரம் பின்பற்றப்பட வேண்டும் என அறிவித்துள்ளது. ஆனால் அப்படி ஆழப்படுத்தப்பட வேண்டிய கிணறு ஏற்கனவே வங்கி கடன் பெற்று வெட்டப்பட்டிருக்குமேயானால் இடைவெளி தூரம் பின்பற்றப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் தெரிவித்துள்ளது. ஏனெனில் அவ்வாறு வங்கிக் கடன் பெற்று வெட்டப்பட்ட கிணற்றிற்கு முதல் கடன் வழங்கும் நிலையிலேயே, சரியான இடைவெளி தூரம் இருக்கிறதா என பார்க்கப்பட்ட பின்பு தான் கடன் வழங்கப்படுகிறது. தனி நபர், அவர்களுடைய சொந்த மூலதனத்தை கொண்டு வெட்டப்பட்ட கிணறுகளுக்கு மீண்டும் ஆழப்படுத்துவதற்கான நிதிநிலை நிறுவனங்களிடமிருந்து கடன் கோரும் போது இடைவெளி தூரம் பின்பற்றப்பட வேண்டும். ஏனெனில், அவர்கள், கிணறுகள் புதிதாக வெட்டும் நிலையில் இடைவெளி தூரம் பார்த்து வெட்டுவது இல்லை. கிணறுகளை ஆழப்படுத்துதலை யூனிட்டுகளாக கணக்கிடப்படுகிறது. அதற்கான காரணம், கிணறுகள் ஆழப்படுத்துவதினால் அதிக நிலநீர் உபயோகப்படுத்தப்படுகிறது எனவும் நபார்டு நிறுவனம் தெரிவித்துள்ளது. 2. நிதிநிலை நிறுவனங்களிட மிருந்து கடன் பெற்று கிணறுகள் அமைக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய நிலநீர் கோட்பாடுகள் பற்றி (குறிப்பாக இடைவெளி தூரம்) பின்வரும் விபரங்களும் தரப்படுகின்றன. (அ) கிணறுகளுக்கிடையே உள்ள கடைப்பிடிக்கப்பட வேண்டிய இடைவெளி தூரம் (புதிய கிணறுகள் அமைத்தல்/கிணறுகளை ஆழப்படுத்துதல் போன்ற தேவைகளுக்கு) முன்பு 200 மீட்டராக இருந்தது. இது சம்பந்தமாக பொதுப்பணித்துறை நிலநீர்ப் பிரிவு மேற்கொண்ட ஆய்வுப் பணிகள் மற்றும் பரிந்துரைகளின் பேரில் ''நபார்டு'' நிறுவனம், இந்த இடைவெளித் தூரத்தை 150 மீட்டராக குறைத்துள்ளது. இதனால் விவசாயிகள் பெரிதும் பயன் அடைந்துள்ளனர். (ஆ) வங்கிக் கடன் பெற்று அமைக்கவிருக்கும் கிணறு (ஆழப்படுத்தப்பட வேண்டிய கிணறுகளுக்கும் இது பொருந்தும்) 150 மீட்டர்களுக்கு குறைவான தூரத்தில் இருப்பின், பிரத்யேகமான ஆய்வுகள் நிலநீர்ப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு, நிலநீர் வளம் சாதகமான நிலையில் இருப்பின், 20 விழுக்காடுகள் வரை இடைவெளித் தளர்வு நிலநீர்த் துறையினால் அளிக்கப்படுகின்றது. இதனால் மேலும் பல விவசாயிகள் பயன்பட்டு வருகின்றனர்.

(இ) மேலும், கால்வாய் மற்றும் ஏரிப் பாசன பகுதிகளில் பொதுவாக நிலநீர் வளம் சிறப்பாக இருக்கும் என்பதனை கருத்தில் கொண்டு, அப்பகுதிகளில், இந்த இடைவெளித் தூரத்தினை மேலும் குறைப் பதற்கு வழி வகை உள்ளதா என்பதை கண்டறிய ஆய்வுப் பணிகள் நிலநீர்த் துறையினால் மேற் கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகள் முடிவுற்றபின் விரிவான பரிந்துரைகளை ''நபார்டு'' நிறு வனத்திற்கு அனுப்பி இந்த இடை வெளி தூரத்தினை தளர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(பொ.ப. துறையின் அ.சா.கு. எண். 30140/ஆர். 2/92, நாள்: 15—9—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
113	71/92	உடுக்குறியிட்ட வினா எண் 149, துணை வினா—டாக்டர் தே. குமாரதாஸ், எம்.எல்.ஏ., 10—3—1992.	இத்தாறு பட்டணங் கால்வாயில் அனைத்துக் கால்வாய்களும் ஒட்டுமொத்தமாக பழுதடைந்துள்ளதால் சிமெண்ட் தளங் களை அமைக்க இந்த ஆண்டில் வேலைகள் ஆரம்பிக்கப் படும் என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம். (5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : அடுத்த நிதியாண்டில் முடிக்கப்படும்.	கோதையாறு பாசனத் திட்டத்திலுள்ள இத்தாறு பட்டணங் கால்வாய் புனரமைக்கும் பணி தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு உள்ளது. புன ரமைப்பில் கீழ்க்கண்ட பணிகள் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளவை : 1. வெளிப் போக்கிகளுக்கு பலகை புதுப்பித்தல், துளைகளின் அளவுகளை மாற்றி அமைத்தல். 2. பழுதடைந்த லைனிங் பகுதிகளைப் புதுப்பித்தல். 3. பின்வுக் குழாய்களில் 8 ஹெக்டேர் வரையில் மேம் படுத்துதல். 4. ஊப்புப் பாதைகளை அமைத்தல் அல்லது தரப்படுத்துதல். அளவுமானிகளை அமைத்தல் : இப்பணிகளை செய்து முடிக்க ரூ. 110 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1992-93-ம் ஆண்டு புனரமைப்புப் பணிகளுக்காக ரூ. 33 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. மீதமுள்ள பணிகள் அடுத்த நிதியாண்டில் (1993-94)ல் முடிக்கப்படும். தலைப்பாகத்தில் மிகவும் பழுதடைந்த கால்வாய் பழுது பார்க்கப்பட்டு தற்போது அந்த கால்வாய்கள் கொள்ள ளவான வினாடிக்கு 200 கன அடி தண்ணீர் செல்கிறது.

(பொ.ப. துறையின் அ.சா.கு. எண் 77164/எக்ஸ்.2/92-1, நாள்: 26—10—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
114	110/92	உடுக்குறியிட்ட வினா எண். 2887, துணை வினா—பேராசிரியை மரியம் உல் ஆயியா, எம்.எல்.ஏ., 16—3—1992.	மேற்கு நோக்கிப் பாய்கின்ற அந்த ஆறுகளினுடைய தண்ணீரை திருப்பி விடுகின்ற நடவடிக்கையை விரைவாக இந்த அரசு எடுக்குமா என்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

(5)	அரசு எடுத்துள்ள நடவடிக்கை. (6)
மாண்புமிகு திரு. எஸ். சுண்ணப்பன் : இந்தத் திட்டம் முழுமையாக நிறைவேறுகிற வகையில் அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு எடுக்கும்.	மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்ட தேசிய நீர்வள அமைப்பு மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் உபரி நீரின் அளவையும் திருப்பிவிடக் கூடிய சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து வருகிறது. முதற்கட்டமாக பம்பா-அச்சன்கோயில் ஆறுகளில் உள்ள உபரிநீரை தமிழகத்திற்கு வைகை ஆற்றில் திருப்பிவிட முன்னோடி அறிக்கையும் இதற்கு உத்தேசமாக ரூ. 680 கோடி செலவாகும். எனவும், 23 டி.எம்.சி. தண்ணீரை திருப்பி விடலாம் என தயாரித்துள்ளது. விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கேரள அரசின் ஒப்புதலும், ஒத்துழைப்பும் கிடைக்கப்பெற்று திட்டம் நிறைவேற நடவடிக்கை எடுக்கப்படும். பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தைப் பொறுத்த மட்டில் ஆனைமலையாற்றிலிருந்து 2.5 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்திற்கு திருப்பிவிட பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் தமிழக-கேரள ஒப்பந்த மறுஆய்வு கூட்டங்களில் அதிகாரிகள் மற்றும் அமைச்சர்கள் அளவில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகிறது. இது குறித்து வருகிற ஒப்பந்த மறு ஆய்வு கூட்டத்திலும் விவாதித்து துணை ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு 2.5 டி.எம்.சி. நீரை தமிழகத்திற்கு திருப்பிவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

(பொ.ப. துறையின் அ.சா.கு. எண் 38372/கே.2/92-4, நாள்: 30—7—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
115	282/92	உடுக்குறியிட்ட வினா எண். 3511, திரு. இரா. நடேசன், எம்.எல்.ஏ., 7—4—1992.	கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பாதையில் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பது குறித்து.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வரிசை எண்.	உறுதிமொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
116	309/89	அ.சா.கு. எண். 18443/த.நா.ச. ம.பே. செ. (எசி) நாள் : 3—12—1990.	போக்குவரத்துக் கழக பேருந்துகளில் பெண்களை நடத்துனர்களாக நியமிப்பது குறித்து.

உறுதிமொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : ஆம்.

(6)

1988-89, 1989-90, 1990-91, 1990-92 ஆகிய நான்கு மேற்கு மலை அபிவிருத்தி திட்ட ஆண்டு திட்டங்களின் கீழ் புதுப்பணிகள் ஒன்றுக்கும் அரசு ஒப்புதலளிக்கவில்லை நடைபெறும் பழைய பணிகளுக்கு மட்டும் கொஞ்சம் தொகை மேற்கண்ட ஆண்டு திட்டங்களில் கீழ் ஒப்புதலளிக்கப்பட்டது.

அரசு ஆணை எம். எஸ். எண். 131, திட்டம் மற்றும் வளர்ச்சி (டிசி) துறை, நாள் : 14—7—1992-ல் அரசு மேற்கு மலை அபிவிருத்தி பணிகளுக்கும் மொத்த தொகை ரூ. 24.10 லட்சங்களுக்கு ஒப்புதலளித்தது. மேற்கண்ட அரசு ஆணையில் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த 4 புதுப் பணிகளுக்கு மட்டுமே ஒப்புதலளிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குமலை அபிவிருத்தி திட்ட ஆண்டு 1992-93 தற் எந்த ஒரு புதுச்சாலைப் பணிக்கும் ஒப்புதலளிக்கப்படவில்லை.

(பொதுப்பணித்துறையின் அ.சா.கு. எண். 63537/எச். எஸ். 1/92, நாள் : 26—10—1992.

போக்குவரத்துத் துறை.

உறுதிமொழியின் விவரம்.

(5)

மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி : பெண்கள் மாத்திரம் பயணம் செய்கின்ற அந்த பஸ்களில் அந்த முறையை கடைபிடிக்கலாமா என்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

கூடுதல் விபரம் கோரியது :

''17—2—1989 நாளிட்ட அரசாணை வெளியிட்ட பிறகு நடைபெற்ற நேர்முகத் தேர்வுகளுக்கு நடத்துனர் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பெண்களுக்கு அழைப்பு அனுப்பப்பட்டதா ?

எத்தனை பேர் இதுவரை தேர்வு செய்யப்பட்டு உறுதிமொழியில் கூறியவாறு பயணம் செய்கின்ற பேருந்துகளில் நியமிக்கப்பட்டுள்ளார்கள் ?

துறை எடுத்துள்ள நடவடிக்கை.

(6)

பல்லவன் போக்குவரத்துக் கழகம் தவிர ஏனைய போக்குவரத்துக் கழகம் எதுவும் பெண்களுக்கென்று தனியாக பேருந்து ஏதும் இயக்கவில்லை. எனவே பெண்கள் மாத்திரம் பயணம் செய்கின்ற பேருந்துகளில் பெண் நடத்துனர்களை நியமிக்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பெண் நடத்துனர்களுக்கு நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு அனுப்பப்பட்ட விபரம் மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

திரன் சின்னமலை போக்குவரத்துக் கழகம் :

மூன்று பெண்கள் வேலை வாய்ப்பகம் மூலமாக பரிந்துரை செய்யப்பட்டனர். அவர்கள் உயரம் குறைவு காரணமாக தேர்வு செய்யப்படவில்லை.

மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகம் :

போக்குவரத்துப் பிரிவில் நடத்துனர்கள் அதிகாலை, மாலையில் முன் இரவு நேரம் வரை பணிகளில் ஈடுபட்டு பணி புரிவதுடன் கடுமையான பணிகளையும் மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும் பெண்கள் கருவுற்ற நிலையில் பணி செய்வது கஷ்டம் என்பதாலும் பெண் நடத்துனர்கள் நியமிக்கப்படவில்லை.

அண்ணை சத்தியா போக்குவரத்துக் கழகம் :

கூடுமானவரை பெண்களை பிற பிரிவுகளில் பணியமர்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் :

கழகப் பேருந்துகளில் 80 விழுக்காடுக்கு மேல் இரவில் இயக்கப்படுகிறது. மேலும் குறைந்தபட்சம் 7 மணி நேரம் தொடர்ச்சியாக பணி செய்ய வேண்டியிருப்பதால், பெண் நடத்துனர்கள் பணியமர்த்துவது இயலாது.

அண்ணா போக்குவரத்துக் கழகம் :

இரு பெண் நடத்துனர்கள் பெயர் வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது. அதில் ஒருவர் மட்டுமே நேர்முகத் தேர்வில் கலந்து கொண்டார். உயரம் குறைவு காரணமாக தேர்வு செய்யப்படவில்லை.

பல்லவன் போக்குவரத்துக் கழகம் :

நவம்பர் 80 முதல் 7 பெண் நடத்துனர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேலும் 12 பெண் பழகுநர் (பயணச் சீட்டு விற்பனை) டிசம்பர் 1990 முதல் பணியமர்த்தப்பட்டுள்ளனர். உயரம் குறித்து பொது விதி தளர்த்தப்பட்டுள்ளது.

பாண்டியன் போக்குவரத்துக் கழகம் :

4 பெண் நடத்துனர்கள் பெயர் வேலை வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பெறப்பட்டது. அதில் மூவர் மட்டுமே தேர்வில் கலந்து கொண்டனர். உயரம் காரணமாக தேர்வு செய்யப்படவில்லை.

(போக்குவரத்து அ.சா.கு. எண். 36189-சி1-92-1, நாள் : 21—9—1992.)

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.	உறுதிமொழியின் விவரம்.
(1)	(2)	(3)	(4)	(5)
117	229/90	உடுக்குறியிட்ட வினா எண். 5110, துணை வினா திரு. கு. பிச்சாண்டி, எம்.எல்.ஏ. 3—4—1990.	புதுவையிலிருந்து விழுப்புரம், திருவண்ணாமலை, ஜோலார்பேட்டை வழியாக இரயில் பாதை அமைக்கும் ஆய்வினை துரிதப் படுத்த ஆவன செய்யப்படுமா என்பது குறித்து.	மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : விரைவில் இப்பணியை தொடங்க வேண்டுமென்று மாநில அரசு இரயில்வேத் துறையை வலியுறுத்தும்.

குழுவின் குறிப்புரை.	அரசு எடுத்துள்ள நடவடிக்கை.
(6)	(7)
சொல்லியிருக்கின்ற ரூட் வேறு, கேட்ட கேள்வி வேறு, பதில் வேறு. திருவண்ணாமலைக்கும் ஜோலார்பேட்டைக்கும் நடுவில் செங்கம் இருக்கிறது. இதுதான் சாத்தியமானது. (Feasible) அதற்குத்தான் சர்வே செய்யச் சொல்லியிருக்கிறார்கள்.	புதுவையிலிருந்து விழுப்புரம், திருவண்ணாமலை, ஜோலார் பேட்டை வழியாக இரயில்பாதை அமைக்கும் ஆய்வினை துரிதப் படுத்த ஆவன செய்யப்படுமா எனும் திரு. கு. பிச்சாண்டி, எம்.எம்.ஏ., அவர்களின் மூலக் கேள்வியான உடுக்குறியிட்ட வினா எண். 5110-க்கு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் பாண்டிச்சேரியிலிருந்து திருவண்ணாமலை, ஊத்தங்கரை, தாசம்பட்டி, கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டிணம் வழியாக பாலக்கோடு வரை புதிய இரயில்பாதை அமைக்க போக்குவரத்து சர்வே ஒன்றினை மேற்கொள்ள இரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது என பதிலளித்தார். 2. இப்பொருள் பற்றி மீண்டும் தென்னக இரயில்வேத்துறையுடன் தொடர்பு கொண்டபோது, பாண்டிச்சேரி விழுப்புரம், திருவண்ணாமலை, ஜோலார்பேட்டை, செங்கம் வழியாக இரயில் பாதை அமைக்கத் திட்டம் ஏதும் இல்லையென்றும், தற்போது சர்வே நடந்து வரும் பாண்டிச்சேரியிலிருந்து பாலக்கோடு வரையிலான இரயில் பாதையில், ஜோலார்பேட்டையும், செங்கமும் சேர்க்கப்படவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ.சா.கு. எண். 19690/ஜ1/92-1 போக்குவரத்து, நாள்: 22—5—1992.)

வரிசை எண்.	உறுதி மொழி எண்.	பார்வை.	பொருள்.
(1)	(2)	(3)	(4)
118 மற்றும் 119	167/92 424/92	மோட்டார் வண்டிகள் சட்டங்கள் நிர்வாகம் சாலைப் போக்குவரத்து பணிகள், கப்பல் போக்குவரத்துப் பணிகள் கப்பல் போக்குவரத்து, காட்டுவளம், காட்டுவளம் குறித்த மூலதனம் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது அமைச்சரின் பதிலுரை 24—3—1992.	நேச்சுரல் கேஸ் மூலம் பெருந்துகளை இயக்கும் புதிய திட்டம் குறித்து.

(5)

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : படிப்படியாக 1,000 பேருந்துகளை விரிவு படுத்த இருக்கிறோம். நல்ல முறையில் இயங்கியவுடன் 10,000 பேருந்துகளாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

(6)

